
இரண்டாம்
சக்தி
இந்திரா சௌந்தர்ராஜன்

# இரண்டாம் சக்தி

## (மஹிமா)

இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# இரண்டாம் சக்தி

## 1

*அஷ்டமா சித்து எனப்படும் எட்டுவித சித்திகளில் இரண்டாம் சக்தியே 'மஹிமா'வாகும். ஒரு புள்ளி அள வுள்ள விதைதான் ராட்சத வடிவில் மிகப்பெரிய மரமா கின்றது.*

*நாம் கூட அன்னை வயிற்றில் ஒரு சொட்டு உயிர்த் துளியாக விழுந்து பின் வளர்ந்து இன்று ஐந்தடி, ஆறடி என்று உயரங்கள் கொண்டிருக்கிறோம்.*

*நீண்ட நெடிய காலத்தால் நிகழும் இந்த செயலை யாரும் பெரிய விந்தையாக நினைப்பதில்லை. இயற்கை என்று சாதாரணமாக கருதிவிடுகிறோம்.*

*'மஹிமா'வின் அடிப்படை ரகசியம் இப்படி நாம் கருதும் இயற்கையான இந்த விஷயத்தில்தான் இருக்கிறது.*

முதலில் அந்த விமானம் ஒரு சிறிய பருந்து போல சிறியதாகத்தான் தெரிந்தது. ஆனால் நேரம் செல்லச் செல்ல அதன் வடிவம் அகண்டும் பருத்தும் தெரிய ஒரு சாய் கோணத்தில் தரை மீது இறங்கி ஓடுவதற்காக அது விமான நிலையத்தை சமீபித்து விட்டது. நியூயார்க்கில் இருந்து வரும்

அந்த பானம் விமானத்தில் தான் கிரிதர் வருகிறான். அவனை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்து விட்டிருந்த அகிலா விமானத்தின் அந்த வான் நீச்சலை வெகுவாக ரசித்தபடி நின்று கொண்டிருந்தாள்.

எப்பொழுதுமே விஞ்ஞானத்தை வெகுவாக வியப்பவள் அவள். ஒரு செல்ஃபோனில் பேச வேண்டியவர்களுடன் பேசி முடித்தபிறகு ஹேண்ட் பேக்கில் போட்டு பத்திரப் படுத்திக் கொள்ளாமல் அதை சில நொடிகளாவது உற்றுப் பார்ப்பாள். எப்படி அது மனிதக்குரலை இந்தப் பக்கமிருந்து அந்தப் பக்கமும், அந்தப் பக்கத்திலிருந்து இந்தப்பக்கமும் கடத்து கிறது என்று ஆச்சரியத்துடன் நினைத்துப் பார்ப்பாள்.

இப்பொழுதும் இரும்பு விமானம் வானில் மிதந்து பறப் பதையும், கீழே இறங்கி ஓடி வருவதையும் கூட ஆச்சரிய மாகத் தான் ரசிக்கிறாள். விமானமும் தரை இறங்கி பல சிறுத்தை புலிகளின் வேகத்தோடு நெடுந்தூரம் ஓடி, பின் மெல்ல மெல்ல வேகம் குறைந்து மிக நிதானமாக விமான நிலைய மாடிப்பகுதி ஒன்றின் திறந்த வாயில் அருகே படுகச்சிதமாக வந்து நிற்க, அதிலிருந்து எல்லோரும் உதிரத் தொடங்கினார்கள். கிரிதரும் தலையை கோதிக்கொண்டு ஒரு பிரீஃப்கேஸ் சகிதம் இறங்கினான்.

அவனோடு கூடவே ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும்!

அநியாயமாக கார் விபத்தில் இறந்து உலகையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்ட பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் சாயலில் இருந்த அந்தப்பெண் தோளைக் குலுக்கிக்கொண்டு அவனோடு நடந்தாள்.

விமானத்தின் உள்ளே இருந்தவரை இந்திய மண்ணின் வெப்பம் எப்படிப்பட்டது என்று அவளுக்கு தெரிய நியாய மில்லை. வெளியில் வந்த நொடி சென்னை நகரின் ஈரமே இல்லாத உஷ்ணம் மிகுந்த வெப்பக் காற்று அவளை சில வினாடிகள் ஆச்சரிய அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

"கிரி.. வாட் எ ஹாட் வெதர் ஐ நெவர் திங்க் இட்" என்றபடியே அவனோடு நடந்தாள்.

ஆமோதிப்பாக, "தட்ஸ் மெட்ராஸ் லிண்டா'' என்ற கிரி, சட்டைப் பாக்கெட்டில் ஒரு விக்ஸ் டப்பியைபோல மடங்கிக் கிடந்த கூலிங்கிளாஸை எடுத்து விரித்து கண்ணில் ஏற்றிக் கொண்டான்.

"அத்தான்'' அகிலாவின் குரல் கூட்டத்தில் இருந்து அவன் காதில் வந்து சேர்ந்து அவனையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

சற்றே பரவசமாகி கைகளை உயர்த்தி ஆட்டினாள்.

"அதுதான் அகிலாவா?" லிண்டா கேட்டாள்.

"எக்ஸாக்ட்லி'' அவனிடம் உற்சாகமான ஆமோதிப்பு.

ஆனால் அகிலாவோ காற்றுப் போன பலூனைப் போல ஆகிவிட்டிருந்தாள்.

லிண்டா அவள் கண்களை உறுத்தத் தொடங்கிவிட்டாள். முகத்தில் அது அப்பட்டமாக தெரிந்தது. ஏற்கனவே சென் னையை ஆட்டிப் படைக்கும் சித்திரை மாத வெப்பம் அதில் மனப்புழுக்கம் வேறு சேர்ந்தால் என்னாவது? கழுத்தெல்லாம் கசகசத்து வியர்க்கத் தொடங்கியது. போன வாரம் அனுப்பிய ஈமெயிலில் கூட "அகி... மை டார்லிங்" என்று காதலை அருவிக் கணக்காய் கொட்டியிருந்தவன் இப்போது இப்படி ஒரு பெண்ணுடன் வந்தால் யாருக்குத்தான் மனது தாங்கும்?

பேக்கேஜ்களை கன்வேயர் பெல்ட் அருகே சென்று அள்ளிக்கொண்டு க்ரீன் சிக்னல் வழியாக ஒரு ட்ராலியில் போட்டுத் தள்ளிக் கொண்டு கூடவே லிண்டாவின் தோள் மேல் கை போட்டபடி வந்தவன் அகிலா எதிரில் வந்து ஒரு இரண்டடி சமீபத்தில் நிற்கவும், அவள் கண்களில் மளுக் கென்று கண்ணீரின் பிரகாசம்.

"என்ன அகி, எதுக்கு அழறே.. ஆனந்தக் கண்ணீரா?'' வேண்டுமென்றேதான் அப்படிக் கேட்டான்.

"போங்கத்தான்.. என் தலைல இடியை இறக்கிட்டே நீ.. அமெரிக்காவுக்கு வேலைக்கு போற யாரும் ஒழுங்கா திரும்பி

வந்ததே கிடையாதுங்கறதை புரூஃப் பண்ணிட்டே.. என்னை ஏமாத்திட்டே.. நீ ஒரு ரிடிகுலஸ் இடியட்."

சுற்றி இருப்பவர்களைப்பற்றி கவலையே படாமல் வெடி வெடி என்று வெடித்தாள்.

லிண்டாவுக்கே என்னவோ போலாகிவிட்டது. "அகி நான் உன் அத்தானுக்கு ஜஸ்ட் ஃப்ரெண்ட், தட்ஸ் ஆல்.. நீ தப்பா புரிஞ்சுகிட்டேன்னு நினைக்கறேன்'' என்று லிண்டா சொல்லவும்தான் அவளுக்கு கொஞ்சம் நிம்மதியானது.

"நான் சொல்லலை லிண்டா.. இதுதான் இண்டியன் லேடி ஸோட பொசசிவ்நெஸ், நோட் பண்ணிக்கோ. உன் ஆர்ட்டிகளுக்கு அகிலாவே ஒரு எக்ஸாம்பிள்'' கிரிதர் படுகேலியாக சொன்னான்.

ஆர்ட்டிகிள், எக்ஸாம்பிள் என்றெல்லாம் அவன் சொல்லவும் அகிலாவுக்கு குழம்பியது.

"என்ன பாக்கறே... கமான்.. நட.. லிண்டா யாரு, அவ எதுக்கு வந்துருக்காங்கற விபரத்தை எல்லாம் போகப் போகச் சொல்றேன்'' என்றபடியே நடந்தவன் அகிலாவின் சாண்ட்ரோவுக்குள் ஒருவாறு அடங்கினான்.

அவளே டிரைவ் செய்ய ஆரம்பித்தாள்.

டிரைவிங்கிலும் நல்ல லாவகம்.

"பரவால்லியே... நல்லாவே கார் ஓட்றியே. இதே மாதிரி புத்தியைதான் உன்னால டிரைவ் பண்ணமுடியல இல்ல. அவன் குத்தலாக கேட்டபோது கார் திரிசூலம் ஸ்டேஷனைப் பார்த்தபடியே இடப்பக்கம் திரும்பியது.

"என்னத்தான் ஒரேடியா வார்றே. யார் அவ, முதல்ல விஷயத்தைச் சொல்லு."

''சொல்றேன்... அதுக்கு முந்தி ஸ்னேகமா ஹலோன்னு மட்டும் விண்டாவுக்கு சொல்லிடு."

"நான் அப்படி சொல்லணும்னா நம்ம கபாலீஸ்வரர் கோவில் கற்பகாம்பாள் மேல சத்யமா இவ உன் பொண் டாட்டி இல்லை. ஃப்ரெண்டுதான்னு நீ சத்யம் பண்ணனும்.''

"ஸ்டுப்பிட், உனக்கு இவ்வளவு சந்தேகமா? விண்டாவை நீ யார்னு நினைச்சே? இவ அமெரிக்கன் சொஸைட்டி சார்பா, நம்ம இண்டியன் கல்ச்சரை ஸ்டடி பண்ணி, ஆர்ட்டிகிள் எழுத வந்திருக்கற ஒரு அமெரிக்கப் பெண் எழுத்தாளர். அங்க இவளுக்கு பல மில்லியன் டாலர் சொத்து இருக்கு. இவ உபயோகத்துக்கு மட்டும் பன்னெண்டு கார் இருக்கு. தெரியுமா?"

"இது எதுவும் எனக்கு தேவை இல்லை. எனக்கு தேவை எல்லாம் சத்தியம் ஒண்ணுதான்."

"அப்ப நான் சத்தியம் பண்ணாம என்னை நீ நம்ப மாட்டே, அப்படித்தானே?"

"ஆமாண்டா..." எரிச்சலோடு ஆமோதிப்பில் 'டா'வைச் சேர்த்தவளை அதிர்ந்துபோய் பார்த்தான் கிரிதர். கார் கத்திப்பாரா நேரு சிலையருகே ஒரு அரை வட்டம் அடித்து கிண்டி சாலையை ஊடுருவிக் கொண்டிருந்தது.

"கிரி என்ன பிரச்சினை? ஏன் அகிலா என்கிட்ட எது வுமே பேசலை. அவ நீ சொன்ன மாதிரி இன்னும் சந்தேகம் தான் படறாளா?" லிண்டா குறுக்கில் கேள்வியை விட்டாள்.

"யெஸ் லிண்டா, அவளை சீண்டி உனக்கு சில விஷயங் களைப் புரிய வைக்கத்தான் உன் தோள் மேல் கை போட்டு கிட்டு நடந்து வந்தேன். ஆனா நீ அவளுக்கு சரியான பதிலை சொல்லியும் அவ அதை நம்ப மாட்டேங்கறா."

"அப்ப இந்தியாவில் ஆண்கள் நம்பமுடியாத அளவு செயல்பாடுகள் உள்ளவங்கதானா?"

"ஆமா, அப்படித்தான். இதையும் நீ நோட் பண்ணிக்கோ. ஆனா நான் அப்படி இல்லேங்கறதை இவளுக்கு சத்தியம் பண்ணி நிரூபிக்கணுமாம்."

"யு மீன் பிராமிஸ்."

"அதேதான்.. அதுவும் சாமிமேல பண்ணணுமாம்."

"ஓ... இங்க அந்த அளவு கடவுள் நம்பிக்கை இருக்கு இல்லே?"

"எக்ஸாக்ட்லி... ஆனா நான் சத்தியமெல்லாம் பண்ணப் போறதில்ல லிண்டா, என் வார்த்தையை நம்பாத ஒரு பொண்ணு எனக்கு தேவையுமில்லை." அவனின் பதில், லிண்டாவின் முகமாற்றம் இரண்டும் அகிலாவை உசுப்பியது. மீண்டும் அழுகை வந்தது.

"சரி கிரி, ஐ ட்ரஸ்ட் யூ. நான் உன்னை நம்பறேன். போதுமா." கேஸுவலாக பதில் சொன்னவள் அப்படியே திரும்பி "ஹலோ மிஸ் லிண்டா" என்றாள்.

"ப்ளீஸ் சோ மிஸஸ் லிண்டா ஜேக்கப்."

"வாட்?"

"அவ, கல்யாணமானவ. அவ புருஷன் ஜேக்கப் ஒரு கார்ட்டூனிஸ்ட். அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷே ஜேக்கப்போட ரசிகர்தான். தெரியுமா?"

"ரியலி.." கேள்வியோடு கார் சாலை ஓரமாக கிரீச்சிட்டு நின்றது. அகிலாவின் முகத்திலும் பரவசப் பிரகாசம். அப்பாடா என்கிற நிம்மதிக்காற்று மூச்சுக்குழலுக்குள் நிறைந்தது.

"ஏன் காரை நிறுத்திட்டே?"

''ஒரு நிமிஷம்...'' அகிலா ஆசையாக லிண்டா நோக்கி தன் வலக்கரத்தை குலுக்குவதற்காக நீட்டினாள். லிண்டாவும் பதிலுக்கு நீட்டினாள். கடல் நுரையில் செய்த கை போல அவ்வளவு மிருதுவாக இருந்தது.

"வெல்கம் மிலஸ் லிண்டா ஜேக்கப்."

"ஓ... தேங்க்யூ தேங்க்யூ."

"ஐ ஆம் சாரி. நான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன் ப்ளீஸ்.. பெர்சிவ் மை மிஸ்டேக்.''

"இட்ஸ் ஒகே.. இட்ஸ் ஓகே." லிண்டா உற்சாகமாக தோளைக் குலுக்கிக் கொண்டாள்.

"ஆமா இப்படி ஒரு தோழி உன் கூட வரப்போறான்னு நீ ஏன் கிரி எனக்கு மெயில் பண்ணலை."

"அப்படி பண்ணியிருந்தா நீ இப்படி கூத்தடிச்சிருப்பியா, அதுக்குதான்."

"இதுல உனக்கு ஒரு ஆனந்தமா?''

"தப்பு. ஆனந்தமெல்லாம் இல்லை. நான் முந்தியே சொன்ன மாதிரி இண்டியன் கல்ச்சரை எல்லா வகையிலும் ஸ்டடி பண்றதுதான் லிண்டாவோட நோக்கம். அவளுக்கு உதவத்தான் இப்படி நடந்துகிட்டேன்."

''ரொம்ப ஆச்சரியமாயிருக்கு.. அப்ப இவங்க வந்துருக்கறது கல்ச்சரை ஸ்டடி பண்ணவா?''

"அதுக்கு மட்டுமில்ல..." திரும்பவும் இடையிட்டாள் லிண்டா. பதிலுக்கு அகிலா அவளை ஊடுருவ, அவளிடம் ஆச்சரியமான ஆச்சரியம் தரும் பதில். "நான் இங்க யோகா கத்துக்கவும் வந்துருக்கேன். எக்ஸ் பெஷலி ஐ வாண்ட் டு ஸ்டடி சித்தா கல்ச்சர். பர்ட்டிகுலரா அவங்களோட மித்தாலஜி.''

''மித்தாலஜி?''

"யெஸ்... இங்க வெள்ளியங்கிரின்னு ஒரு மலை இருக்குதாமே. அங்க நாகராஜபோகர்னு ஒரு சித்தர்கூட இருக்காராமே. அவரை மீட் பண்ணி மித்தாலஜி பத்தி ஸ்டடி பண்ணத்தான் வந்திருக்கேன்.'' லிண்டாவின் பதில் அகிலாவை அதிகமாகவே யோசிக்க வைத்தது.

''நாகராஜ போகர், மித்தாலஜி.'' அவளுக்குள் ஆச்சரிய அலை வெள்ளம்.

# 2

***ஒன்றைச் சிறியது என்றும், பெரியது என்றும் எதை வைத்துச் சொல்கிறோம். அதன் உருவத்தை வைத்து தானே? இந்த உருவம் என்பது எங்கிருந்து வந்தது. சிறிய செடியானது எப்படி மரமானது? வளர்ச்சி என்று ஒரு வார்த்தையில் சொல்லலாம்தான். இந்த வளர்ச்சி எப்படிப்பட்டது?***

***எங்கிருந்து நமது உடலுக்கு தேவையான திசுக்கள் வந்தது? செடியும்கூட எப்படி மரமாகிப் பெரிதானது?***

***இந்தக் கேள்விக்குள்தான் மஹிமா சித்திக்கான விடை ஒளிந்திருக்கிறது.***

***மொ***ட்டை மாடியில் மூங்கில் நாற்காலியில் சாய்ந்த படி கிரி கொண்டு வந்திருந்த மைக்கேல் ஜாக்சனின் லேட்டஸ்ட் கேசட் ஒன்றை வாக்மேன் வழியாக அனுபவித்தபடி இருந் தாள் அகிலா, எதிரில் வந்து நின்றார் அவளது அப்பா கார்த்திகேயன்.

"அகி..."

"வாங்கப்பா.. உக்காருங்க'' அவரும் உட்கார்ந்தார்.

"என்னம்மா... என்ன சொல்றான் உன் அத்தான்." அவர் பேச்சை ஆரம்பித்தார்.

"என்ன சொல்றான்னா..."

"இல்ல.. இப்படி ஒரு பொட்ட குட்டியோட வந்திருக் கானே... அதான்..."

"லிண்டாவைச் சொல்றீங்களாப்பா?"

"ஆமாம்... அவ அவனுக்கு ஃப்ரெண்ட்தானே? உனக்கு சக்களத்தி இல்லையே?"

"போதும்ப்பா. நான் அத்தானை ரொம்பவே படுத்திட்டேன் அதெல்லாம் ஒண்ணுமில்ல.லிண்டா நல்ல பொண்ணாத்தான் தெரியறா. அவர் பெரிய மில்லியனராம். ரைட்டராம். நம்ம கல்ச்சரை ஸ்டடி பண்ணதான் வந்துருக்கறாளாம்."

"அவ அந்த குபேரனுக்கே கூட பெண்டாட்டியா இருக் கட்டும். கிரியோட அவளுக்கு தப்பா கனெக்ஷன் இல்லியே.. அதான் எனக்கு முக்கியம்."

"இதை நீங்களே கிரிகிட்ட கேட்க வேண்டியதுதானே?"

"எப்படிம்மா.. என்ன அங்கிள் என் மேல் உங்களுக்கு இவ்வளவுதானா நம்பிக்கைன்னு கேட்டுட்டான்னு வை. நான் என் முகத்தை எங்க கொண்டு போய் வெச்சுப்பேன்."

"அடேங்கப்பா... உங்களுக்கு சந்தேகமும் தீரணும் ஆனா எந்த சங்கடமும் நேரக்கூடாது. அப்படித்தானே?"

"என்னை என்ன பண்ணச் சொல்றே, அவன் எனக்கு மாப்பிள்ளைம்மா. தடாலடியால்லாம் நான் பேச முடியாது."

"நோ ப்ராப்ளம்... லிண்டாவை நான் நம்பறேன். போதுமா?"

"அது சரி.. ஏதோ கல்ச்சர் ஸ்டடி அப்படி இப்படின்னியே, கல்ச்சர் ஸ்டடி பண்ற அளவுக்கு இங்க அப்படி என்ன இருக்கு. நம்ம கல்ச்சரும், அமெரிக்கன் கல்ச்சரும்தான் மிக்ஸ் ஆகி எல்லாம் கெட்டு குட்டிச் சுவராகிப் போச்சே?"

கார்த்திகேயன் கேள்வி முன் சில வினாடிகள் செல்லமாக முறைத்தவள் மெல்ல "வெள்ளியங்கிரி மலை எங்க இருக்குன்னு தெரியுமா?"

"கோயம்புத்தூர் பக்கத்துல. இப்ப என்ன அதுக்கு?"

"அங்க நாக்ராஜ போகர்னு ஒரு சித்தர் இருக்காராம். அவர்கிட்ட இந்த லிண்டா மித்தாலஜி பத்தி, தெரிஞ்சுக்க வந்துருக்காளாம்."

அகிலா சொன்ன மறுநொடி கார்த்திகேயன் முகம் சவம் போல மாறியது.

"என்னப்பா, என்னாச்சு உங்களுக்கு?"

"நாகராஜ போகரையா இந்த பொண்ணு பார்க்கப் போறா?"

"அப்படித்தான் அவ சொன்னா."

"நிஜமாவா?"

"அவள் என்ன ஆயிரம் மைலுக்கு அந்த பக்கத்துலையா இருக்கா, இங்க நம்மவீட்டு மாடி ரூம்லதானே தங்கியிருக்கா, போய் அவகிட்டையே கேளுங்க."

"இல்லம்மா... நான் கேட்டதுக்கான காரணத்தை முதல்ல நீ புரிஞ்சுக்கோ... நாகராஜபோகர் மகாசமாதியாகி பலவருஷ மாச்சு. அதான் அப்படி கேட்டேன்."

"அப்படியா... அப்ப அவரை உங்களுக்கும் தெரியுமா?"

"அவரை எல்லாருக்கும் தெரியும்மா, மகாசமாதி ஆன ஒருத்தர்கிட்ட இவ எப்படி மித்தாலஜி பத்தி தெரிஞ்சுக்க முடியும்? ஒண்ணும் புரியலியே."

"ஒருவேளை அவர் இறந்து போய்ட்ட விஷயம் தெரியாம இவ வந்துருக்காளோ?"

"ஐ திங்க் ஸோ.. அப்படித்தான் இருக்கும். நான் கேட்டுப் பார்க்கறேன்."

"இருங்க நானும் வரேன்."

அகிலா கார்த்திகேயனுடன் லிண்டாவைக் காண புறப் பட்டாள்.

அகிலாவின் பங்களாவிலேயே லிண்டாவுக்கு ஒரு தனி அறையை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். அங்கேயே நானும் தங்கிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டான் கிரிதர்.

மீண்டும் சந்தேகத்தோடு அகிலா பார்த்ததற்கு "நண்பர் களை தனியாக விடுவது நமது நாகரீகமல்ல" என்று ஒரு கலாச்சார தூதுவன் போல கிரிதரும் சொல்லிவிட்டான்.

அதற்குமேல் அகிலாவாலும் மன்றாட முடியவில்லை. அவன் சொன்ன சமாதானங்கள் ஒரு புறம் இருந்தாலும் மறுபுறம் அவள் மனது அவனை ஒரு ஐ.எஸ்.ஐ. உளவாளி களைப் போல கண்காணித்தபடியேதான் இருந்தது.

இப்போது அதற்கு வலு ஏற்றுகிற மாதிரி கார்த்திகேயன் வேறு நாகராஜபோகர் மகாசமாதி ஆகி விட்டதாக கூறி யிருக்கிறார்.

"ஒரு மனிதர் உயிரோடு இருக்கிறாரா இல்லை செத்து விட்டாரா என்பது கூட தெரியாமலா ஒரு பெண் வருவாள்.

இதில் இவள் அசாதாரணமான பெண் எழுத்தாளர் வேறாம்... ஹூம்... கிரிதர் புளுகுகிறான். விடக்கூடாது அவனை."

அப்பாவுடன் வழவழப்பான மார்பிள் தரையில் விறு விறுவென்று நடக்கையில் அகிலாவுக்குள் தீர்மானங்கள்.

அறைக்குள் கிரிதர் லெட்டூஸ் என்னும் வெந்தயக்கீரை போன்ற ஒரு கீரையை இரண்டு சீஸ் தடவிய பிரட்களுக்கு நடுவில் வைத்து லிண்டா எதிரில் நீட்டிக் கொண்டிருந்தான்.

பிரேக் ஃபாஸ்ட்!

அகிலாவும் கார்த்திகேயனும் ஒன்றாக வரவும் "வாங்க அங்கிள்" என்றபடியே பக்கத்து சோபாவில் கிடந்த வெள் ளைப்பூ துவாலையை எடுத்து அவருக்கு உட்கார இடம் காட்டினான். கார்த்திகேயனும் உட்கார்ந்தார். லிண்டா படு நாகரிகமாக அந்த சாண்ட்விச்சை சாப்பிடாமல் மரியாதை யாக அவரைப் பார்த்தாள். ஆனால் அந்த மாதிரி ஒரு பார்வை அகிலாவிடம் இல்லை. லிண்டா அணிந்திருந்த நைட்டி சற்று மார்பு தெரியும் விதத்தில் தாழ இருந்தது. அது தான் முதலில் அவள் கண்ணில் பட்டு உறுத்த ஆரம்பித்தது.

"அங்கிள், என்ன பண்ணிகிட்டு இருக்கோம்னு பாக்க வந்தீங்களா? பிரேக் ஃபாஸ்ட் ஆகிகிட்டிருக்கு. நம்ம ஊர் இட்லி,தோசை எல்லாம் லிண்டாவுக்கு ஒத்து வராது. அதான் லெட்டூஸ் சாண்ட் விட்சை பிரிப்பேர் பண்ணி தந்து கிட்டிருக்கேன்."

"அது சரி கிரி.. இந்த பொண்ணு நம்ம வெள்ளியங்கிரி

மலை சாமியாரை பார்க்கவா வந்துருக்கா?"

"ஆமாம்.. உங்களுக்கும் அவரைத் தெரியுமா அங்கிள்."

"என்ன கிரிதர்.. அவர் சமாதியாகி ரெண்டு மூணு வருஷம் ஆயிடுச்சே, உங்களுக்கு தெரியாதா?"

"சமாதியாகின்னா... புரியலை எனக்கு?"

"என்னப்பா நீ அவர் செத்துட்டார்னு சொல்ல வந்தேன்."

"செத்துட்டாரா... ஆச்சரியமாயிருக்கே, ஏய் லிண்டா டு யூ நோ ஒன் திங்..."

லிண்டா பக்கம் திரும்பி கார்த்திகேயன் சொன்னதை அப்படியே வாந்தி எடுத்தான். அவளுக்கு சிறிய கண்கள், இருந்தும் அது கண்டு விரிந்தது. பேச்சே வரவில்லை.

"ஆமாம்மா... அவர் மகா சமாதி ஆயிட்டார். இது எப்படி உனக்கு தெரியாம போச்சு?"

"கார்த்திகேயனே அந்த கேள்வியை ஆங்கிலத்தில் அவளிடம் கேட்டார்."

"நோ அங்கிள்... நான் போன மாசம் கூட அவரைப் பார்த்தேன். ஒரு மணி நேரம் பேசிக்கிட்டிருந்தேன்."

"அப்ப, அது வெள்ளியங்கிரி மலை நாகராஜ போகரா இருக்காது. வேற யாராவது இருக்கும்."

"இல்ல அவர் பேர் நாகராஜ போகர்தான். அவர் கூட நான் ஒரு போட்டோ கூட எடுத்துகிட்டேனே" பதிலோடு லிண்டா எழுந்திருந்தாள். வேகமாக நடந்து சென்று அவளது சூட்கேஸ் ஒன்றைத் திறந்து வெகுவேகமாகத் தேடி ஒரு போட்டோவையும் எடுத்து வந்து தந்தாள்.

அதைப் பார்த்த கார்த்திகேயனுக்கு பகீர் என்றது. புகைப்படத்தில் தெரிந்த உருவம் சாட்சாத் நாகராஜபோகர் உருவமே தான்.

"என்னால நம்பமுடியலையே... இவர்.... இவர் மகாசமாதி ஆனது உண்மை, சில பேப்பர்ல கூட நியூஸ் வந்ததே?"

"அப்பா நல்லா பாருங்க. ஒருவேளை அந்த சாமியார் மாதிரியே இவர் இருக்கலாம் இல்லியா?" அகிலா தன் சத்தேகத்தை வார்த்தைப் படுத்தினாள்.

"மே பீ.. அப்படித்தான் இருக்கணும், நிச்சயமா இவர் சமாதி யான அந்த சாமியார் கிடையவே கிடையாது. இவர் வேற யாரோவாதான் இருக்கணும்."

"என்ன அங்கிள் நீங்க இப்படி குழப்பறீங்களே. சமாதி யானவர் உருவம் வேணா ஒத்துப்போகலாம். பேர் கூடவா ஒத்துப் போகும்?"

கிரிதர் தன் சந்தேகத்தை கொளுத்தினான்.

"அதானே.. பேரு உருவம் இரண்டும் ஒண்ணா இருக்கே. எப்படி..?"

"நான் சொல்றேன்... மகாசமாதியானது வேற யாரோ.. இவர் நாகராஜ போகர்தான்.. நீங்கதான் கன்ஃப்யூஸ் பண்றீங்க."

"அப்படீங்கறே..."

"அப்படியேதான்."

"சரி... அவரை பார்த்து என்ன பண்ணப்போறா இந்த பொண்ணு."

"லிண்டா நீயே சொல்லு.."

கிரிதர் அவளுக்கு சைகை காண்பித்தான். அவளும் வாய் திறந்தாள்.

"மித்தாலஜி பத்தி நான் ஒரு புத்தகம் எழுதலாம்னு இருக்கேன். எங்க ஸ்டேட்ஸ்ல பெரிசா அது பத்தி எதுவும் இல்லை. அங்க எல்லாம் மேஜிக், ஆப்பிரிக்காவுல 'வூடுஸ்"ங் கற பேர்ல சில விஷயங்களை கேள்விப்பட்டேன். ஆனா அது ரொம்ப ப்ளைண்டா இருக்கு, கொஞ்சம் கூட புரிஞ்சுக்க முடியல.

சைனாவுல சில புத்த பிட்சுக்கள் கூட மித்துல எக்ஸ் பர்ட்டா இருக்காங்க. ஆகாயத்துல பறக்கறது. மிதக்கறதுன்னு

அவங்களோட சாகசங்கள் ரொம்ப ஃபாண்டசியா இருக்கு. ஆனா அதையும் புரிஞ்சுக்க முடியல.

இண்டியால பர்ட்டிகுலரா தமிழ்நாட்டுல, நான் கேள்விப் பட்ட சித்தா கல்ச்சர்தான் எனக்கு ரொம்ப ஒண்டரா இருந்தது.

எல்லாமே ரொம்ப புத்தி பூர்வமா இருந்தது. இப்பல்லாம் ஸ்டேட்ஸ்ல யோகா கல்ச்சர் ரொம்ப வேகமா பரவிகிட்டு இருக்கு, ரியலி ஒண்டர். என் கணவர் ஜேக்கப்பே கொஞ்ச நாள் யோகா பிராக்டீஸ் பண்ணிட்டு ட்ரெமண்டரஸ் லிண் டான்னு சர்ட்டிஃபை பண்ணாரு.

நானும் ஒரு பதினைஞ்சு நாள் யோகா ஸ்டடி பண்ணேன். ஒண்டரா ஃபீல் பண்ணேன். நம்ம உடம்புக்குள்ளேயே நமக்கு தேவையான மருந்து இருக்கு. அதை எப்படி எடுத்துகிட்டு ஹெல்தியா இருக்கறதுங்கறதை சொல்றதுதான் யோகா. இந்த யோகாவுல உங்க ஊர் சித்தர்கள் பெரிய மேதைன்னு பிறகுதான் தெரிஞ்சது.

யாரோ பதினெட்டு சித்தர்கள் இருக்காங்களாமே. சுந்தரர், பாம்பாட்டி சித்தர், அழுகிணி சித்தர், அகத்தியர்னு அவங்க பேரை எல்லாம் சொன்னாங்க. ஸ்டில் அவங்க இப்பவும் வாழ்ந்துகிட்டு இருக்கறதாவும். எனக்கு யோகா சொல்லிக் கொடுத்த யோகா மாஸ்டர் சொன்னார்.

நான் ரொம்ப இம்ப்ரஸ் ஆகிட்டேன். உடனேயே கிரிதர் கிட்ட என் ஆசையை சொன்னேன்.

கிரிதரும் என்னை இந்தியாவுக்கு கூட்டிகிட்டு வந்துட் டான், நைஸ் காய்..."

லிண்டா கார்த்திகேயனின் ஒரு வரிக் கேள்விக்கு ஒரு பக்க அளவு பதிலைச் சொல்லி அவரையே வாயைப் பிளக்க வைத்து விட்டாள். இருந்தும் அகிலாவின் முகத்தில் ஒரு குறுகுறுப்பு விறுவிறுவென்று ஓடியது.

"அகிலா யு ஹேவ் எனி டவுட்?"

"அஃப்கோர்ஸ்... இந்த நாகராஜ போகரை எப்படி உங் களுக்கு தெரியும். இவர் எங்க அங்க வந்தார்?"

"அது ஒரு ஆச்சரியமான விஷயம்."

"ஆச்சரியமான விஷயமா?"

"ஆமாம்.. எனக்கு யோகா கத்துக்கொடுத்தவரும் ஒரு டமிளியன்தான். அவர் பேர் ஸ்ரீதர்ஜி. அவர்தான் இந்த நாகராஜ போகர்ஜி பத்தி எனக்கு சொன்னவர்."

"ஆத்மார்த்தமா அவரை நினைச்சு ப்ரே பண்ணினா அவரே பார்க்க வருவார். வழி எல்லாம் காட்டுவார்னு சொன்னார். நானும் ப்ரே பண்ணினேன். டெய்லி ஒன் அவர்லாம் ப்ரே பண்ணியிருக்கேன், ஒரே வாரம்தான். குருஜி

என்னைப் பார்க்க வந்துட்டார்."

லிண்டா சொல்வது படு குழந்தைத்தனமாக இருந்தது. அதன் எதிரொலிகள் அனைவரின் முகத்திலும் தெரிந்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்."

"ஏன் எல்லாரும் என்னை இப்படிப் பார்க்கறீங்க."

துளியும் விகல்பமின்றி லிண்டா கேட்க, கிரிதர் சிரித்த படியே அதற்கு பதில் சொல்லத் தொடங்கினான்.

"அங்கிள். லிண்டா இப்படி சொன்னப்போ எனக்கே கூட ஆச்சரியமா இருந்தது. நான் என்ன நினைச்சேன்னா அந்த யோகா மாஸ்டர் ஸ்ரீதர்தான் நாகராஜபோகர்ங்கற இந்த சாமியார்கிட்ட லிண்டா பத்தி சொல்லியிருக்கணும். அவரும் லிண்டாவோட அட்ரஸை வாங்கிகிட்டு பாக்க வந்துருக் கணும்.

மத்தபடி லிண்டா சொல்ற சென்ஸ்ல அதை எடுத்துக் காதீங்க. நாகராஜபோகர் ஒண்ணும் நம்ம புராணப்படங்கள்ள காளியம்மாவும், மாரியம்மாவும் வர்ற மாதிரி சொய்ன்னு ஆகாயத்துல இருந்து குதிச்சு எல்லாம் வரலை."

"அது சரி கிரிதர். அப்ப அவர்தான் அட்ரஸை கொடுத்து இண்டியா வந்து பார்னு சொன்னாரா?"

"லிண்டா. கேக்கறாங்கள்ள சொல்லு.."

"அவர் அப்படி சொல்லலை. சித்தா பத்தி முழுசா தெரிஞ்சுக்கணும்னா நீ வெள்ளியங்கிரி மலைக்கு வா. அங்க உனக்கு ஏற்படப்போற அனுபவங்கள் உனக்கு எல்லாத்தையும் புரிய வைக்கும்னு சொன்னார்."

"அப்ப அதனாலதான் கிளம்பி வந்துருக்கீங்க."

"ஷ்யூர்... ஷ்யூர்..." லிண்டா தன் பழுப்பு நிற கூந்தலை ஒதுக்கியபடி மேல் மார்பு சரிபாதி வெளித்தெரிய தோளைக் குலுக்கி ஆமோதித்த விதத்தில் அகிலாவுக்குள் யாரும் மூட்டாமலே தீ பற்றி எரிந்தது.

"இவங்களை பார்த்தா பாவமா இருக்கு. இங்க இவங்க பெரிசா சொல்ற யோகாவையும் சரி, சித்தாவையும் சரி, யாரும் பெருசா நினைக்கறதே இல்லை."

"ஆனா அதை என்னமோ ஒரு உலக மகா விஷயமா நினைச்சு இவங்க வந்துருக்காங்கன்னா அதை பாராட்றதா, இல்லை அதுக்காக பரிதாபப்படறதான்னே தெரியல." கார்த்திகேயன் பெருமூச்சு விட்டார்.

"டு யூ நோ யோகா?" லிண்டா ஆட்காட்டி விரலை நீட்டி கேட்டாள்.

"அதுக்கெல்லாம் யாருக்கும்மா நேரம் இருக்கு."

அலுத்துக் கொண்டார் கார்த்திகேயன்.

"அத்தான் கொஞ்சம் இப்படி வாங்க."

அகிலா நடுவில் கிரிதரை தனியே அழைத்தாள்.

"என்ன அகி..." அவனும் ஒதுங்கியவனாக கேட்டான்.

"மொதல்ல அந்த பொண்ணை ஒழுங்காக டிரஸ் பண்ணச் சொல்லு, பாக்கச் சகிக்கலை." அவன் சிரித்தான்.

"இலவச தரிசனம் தானேன்னு ஜொள்ளு விடாம நான் சொன்னதை செய்... இல்லேன்னா நானே அவளுக்கு ஒரு புடவையை சுத்தி விட்டுருவேன் ஆமா..."

''அகி... நீ ரொம்ப அலட்டிக்கிறே, அவ அமெரிக்க பொண்ணு. அங்கெல்லாம் இப்படித்தான் இருப்பாங்க."

"சமாளிக்காதே.... பொண்ணுள்னா வெட்கம், மானம் வேண்டாம்.''

"அடேயப்பா, இங்க எல்லாரும் ரொம்ப யோக்யமாக்கும். எவ்வளவு பேரை நான் உனக்கு காட்டட்டும்."

"இந்த கதை எல்லாம் வேண்டாம். இண்டியன் யோகா பிடிக்கும், சித்தா பிடிக்கும், ஆனா புடவை ரவிக்கை பிடிக்காதாக்கும்."

"இதோ பார்... அவ இருக்கப் போறது ஒரு மாசமோ ரெண்டு மாசமோ. இதெல்லாம் அவளோட பர்சனல். நான் ஒண்ணும் ஜொள்ளுவிட மாட்டேன். போதுமா?''

இருவரும் குசுகுசுக்கும் போது கார்த்திகேயன் மட்டும் தீவிரமாய் ஏதோ சிந்தனையில் இருந்தார்.

கிரிதர் அதைப் பார்த்தபடியே வந்து கேட்டான்.

"என்ன அங்கிள் யோசனை?"

"இல்ல... சமாதியான அந்த சாமியார் யாரா இருக்கும்னு தான் யோசிக்கறேன்."

"அது யாரா வேணும்னா இருந்துட்டு போகட்டும். நாங்க வெள்ளியங்கிரி மலைக்கு போகணும். அதுக்கு ஏற்பாடு பண்ணுங்க."

"அதுக்கென்ன கிரி, டாடா சுமோவை எடுத்துகிட்டு போ, மலைல ஏற இன்னிக்கு அதான் தோது. அகிலா வந்தா கூட்டிகிட்டு போ."

"போனா திரும்பி வர எவ்வளவு நாளாகும்னு தெரியாது அங்கிள். பரவால்லியா?"

"ஆராய்ச்சின்னு அமெரிக்கால இருந்தே வந்தாச்சு. நாள் கணக்கு பார்த்தா நடக்குமா. இட்ஸ் ஓ.கே... ஆமா நீ அவசியம் அவ கூட போய்த்தான் தீரணுமா?"

"பின்ன..."

"என்ன கிரி... அதிசயமா வந்துருக்கே. அகிலாவோட

காஷ்மீர், சிம்லான்னு போய்ட்டு வரலாம்ல."

"அது கல்யாணத்துக்கு பிறகு. இப்ப ஒரு தடவை அப்ப ஒரு தடவை போனா போரடிச்சுடும் அங்கிள்."

"அது சரி... திருநெல்வேலில இருக்கற உன் அப்பா அம்மாவையாவது பார்க்கபோவியா. இல்ல விடு ஜூட் தானா?''

"இல்ல அங்கிள்... அவங்கள பார்க்க கட்டாயம் போக ணும். ஆனா எல்லாம் வெள்ளியங்கிரி மலைக்கு போய்ட்டு வந்த பிறகுதான்."

"பார்த்து. அங்க இருக்கற சாமியார்களோட சேர்ந்து நீயும் சாமியாராயிடாதே."

"நோ நோ... லிண்டாகிட்ட இதை எல்லாம் நம்பாதே, எல்லாம் ஃப்ராடுன்னு சொல்லலாம்னுதான் முதல்ல நினைச் சேன். நம்ம நாட்டை விட்டுக் கொடுக்க மனசு வரலை. அவளே தெரிஞ்சுக்கட்டும்னு விட்டுட்டேன்."

கிரிதரின் பதிலைக் கேட்டு கார்த்திகேயன் ஒரு மாதிரி சிரித்தார். "அந்த பொண்ணு நல்லா ஏமாறப் போறா, இப்ப இண்டியால நம்பர் ஒன் கிரிமினல்ஸ் யார்னா சாமியாருங்க தான்."

கார்த்திகேயனும் அவநம்பிக்கையோடு யதார்த்தமாக பேச,

இவர்கள் தமிழ் புரியாமல் லிண்டா அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். டேபிள் மேல் கிடந்தது நாகராஜ போகர் என்னும் சாமியாருடன் அவள் எடுத்துக்கொண்ட போட்டோ. திரும்பவும் ஒரு முறை அதைப் பார்த்த கார்த்திகேயன் ஓ.கே... நீங்க உங்க பிரேக் ஃபாஸ்டை கண்டினியூ பண் ணுங்க" என்றவராய் மாடியை விட்டு கீழிறங்கி வந்தார். தீவிர சிந்தனையோடு தொலைபேசியை நெருங்கியவர் ரிசீவரை எடுத்தபடி எண்களை சுழற்ற ஆரம்பித்தார். மறு முனையில் அவரால் "ஹலோ வித்யாசாகர்'' என்று அழைக் கப்பட்ட அவரது நண்பர் ஒருவர் பேசத் தொடங்கினார்.

"என்ன கார்த்தி, எப்படி இருக்கே?"

"நான் நல்லாதான் இருக்கேன். நீ எப்படி இருக்கே?"

"எனக்கென்னப்பா என் குருநாதர் அருளால சௌக்யமா இருக்கேன்."

"உன் குருநாதர் யாரு.. நாகராஜ போகர்ங்கற வெள்ளியங் கிரி மலை சாமியார்தானே?"

"அவரேதான், ஏன் திடீர்னு உனக்கு இந்த சந்தேகம்."

"இல்ல... அந்த பேர்ல, அவரைப்போலவே உருவ ஒற்றுமையோட வேற சாமியார் யாராவது இருக்காங்களா?''

"அப்படி யாரையாவது பாத்தியா?''

"கேள்விக்கு பதில் சொல்லு வித்யா... இருக்காங்களா, இல்லையா?"

"எனக்குத் தெரிஞ்சு அப்படி எல்லாம் யாரும் இல்லை. நீ விஷயத்துக்கு வா.. என் குருநாதர் பத்தி இப்ப என்ன கேள்வி?''

"எல்லாம் காரணமாத்தான். ஆமா இப்ப உன் குருநாதர் எங்க இருக்காரு. வெள்ளியங்கிரி மலை ஆஸ்ரமத் துலையா?"

"ஏய்... என்ன கேள்வி இது. அவர் மகா சமாதி ஆகி மூணு வருஷம் ஆச்சு, தெரியும்ல..."

"நிஜமாவா...?"

"சத்யமாவும் சொல்றேன், வர்றியா அவரோட சமாதியைக் காட்றேன்."

"இல்ல வித்யா.. நல்லா யோசிச்சு சொல். உன் குருநாதர் இப்ப உயிரோட இருக்காரா, இல்லையா?''

"உனக்கு ஏன் திடீர்னு இப்படி ஒரு சந்தேகம். அவர் சமாதிக்கு நான் போனவாரம் கூட போய்ட்டு வந்தேன். போதுமா?"

"அப்படின்னா... அதே பேர்ல அவரைப் போலவே ஒருத்தர் வந்து பேசினதெல்லாம் பொய்யா?"

"அவரைப்போலவே வா... வந்து பேசினாரா, யார்கிட்ட?''

"லிண்டான்னு ஒரு லேடி ரைட்டர். அமெரிக்கால ரொம்ப ஃபேமஸாம். என் மாப்பிள்ளைக்கும் நல்ல பழக்கம். அந்த பொண்ணுக்கு நம்ம இண்டியன் கல்ச்சர் மேல ஒரு அட்ராக் ஷன். குறிப்பா நம்ம சித்தா கல்ச்சர். அந்த பொண்ணை ரொம்பவே பாதிச்சிருக்கு. யோகா பத்தியெல்லாம் தெரிஞ்சு வெச்சிருக்கு. இந்த பொண்ணுகிட்டதான் உன் குருஜீயை போலவே உள்ள ஒருத்தர் வந்து பேசியிருக்கார்"

''அவர் பேர்?''

"அதான் சொன்னேனே... நாகராஜபோகர்தான் இவர் பேரும்.''

"என்ன கார்த்திகேயா ஒரேடியா குழப்பறியே. சரி... இந்த சாமியாரோட ஊர் எதுவாம்."

"அதுவும் வெள்ளியங்கிரி மலைதான்!''

"நோ, இம்பாசிபிள்... வெள்ளியங்கிரி மலைல யார் யார் இருக்கா, அங்க என்ன கிடைக்கும் கிடைக்காதுங்கறது வரை எனக்கு அத்துபடி."

"இன்ஃபாக்ட் பௌர்ணமிக்கு பௌர்ணமி திருவண்ணா மலை கிரிவலம் போற மாதிரி நான் வெள்ளியங்கிரி மலை போய்ட்டு வர்றவன். நிச்சயமா சொல்றேன் நாகராஜ போகர்ங்

கற பேர்ல இப்ப அங்க யாரும் இல்லை."

"அப்ப போட்டோவுல இருக்கற உருவம்?"

"அது என் குருநாதர் உயிரோட இருக்கும்போது எடுத்துக் கிட்ட படமா இருக்கலாம், இல்லையா?"

"போன மாசம் எடுத்த படம்கறா அந்த பொண்ணு. போனமாசம் வரை உயிரோட இருந்தாரா உன் குருநாதர்?"

"நான் சொல்றத கேள்... அந்த பொண்ணு பொய் சொல்றா... இல்லே ஏதாவது கேமரா ட்ரிக்கா இருக்கலாம்."

"அதை எல்லாம் செய்ய வேண்டிய அவசியம் அவளுக்கு இல்லை வித்யா. ரொம்ப நல்ல பொண்ணா இருக்கறா."

"சரி.. அப்படியே இருக்கட்டும். நீ கேட்ட கேள்விக்கு என் பதில், என் குருநாதர் மகா சமாதியாயிட்டார்ங் கறதுதான். வெள்ளியங்கிரி மலைக்கு போனா உங்களுக்கு தானா தெரிஞ்சுட்டுப் போகுது."

நண்பர் வித்யாசாகர் சொன்ன விதமும், அந்த தோரணை யும், கார்த்திகேயனை போட்டுப் பிசையத் தொடங்கியது.

போனில் பேசியது அதிர்ச்சி அளித்த மாதிரி இருந்தது என்றாலும், வெள்ளியங்கிரி மலைக்கு போனால் விளங்கி விட்டுப் போகிறது. இதற்கு எதற்கு இத்தனை கவலைப் பட்டுக் கொண்டு. ஒரு வழியாக முடிவுக்கு வந்தவர் தானும்

அவர்களோடு கிளம்புவது என்று தீர்மானித்தார்.

அந்த நொடி நாகராஜபோகர் அவர் மனதில் ஒரு பெரிய புதிராகத் தான் மாறிவிட்டிருந்தார்.

# 3

***வெ**ளி வெட்டவெளி. காற்று ஓடிப்பிடித்து விளை யாடும் வெட்டவெளி. இதில்தான் எத்தனை ரகசியங்கள். இதில் எல்லாமே இருக்கிறது. அரிசி இருக்கிறது. பருப்பு இருக்கிறது. தண்ணீர் இருக்கிறது. நமக்கான சத்தம் முதல் எலும்பு நரம்பு மற்றும் திசுப்பொருள் வரை எல்லாமே இந்த வெளியில்தான் இருக்கிறது. நம்ப முடியவில்லையா? ஆனால் சாதாரணமாக யோசித்தாலே அதுதான் உண்மை என்பது தெரிந்து போகும்.*

*உயிர் இயக்கம் இந்த வெளியில் இருந்துதான் அத்தனையையும் கேட்டு வாங்கி சிறியதைப் பெரிய தாக்குகிறது. இடையில் இருப்பதுதான் காலம். இந்த காலத்திடம் நமது வாழ்வு. சாவு எல்லாமே உள்ளது*

***கா**ரமடை!*

காது விறைத்துப் போகும். அப்படி ஒரு குளிர் காற்று. நீலகிரி மலை முழுக்க ஓடிப்பிடித்து விளையாடி விட்டு

அப்படியே தாழ்ந்து இறங்கி மேட்டுப்பாளையத்து சுமாரான உஷ்ணக் காற்றோடு கலந்து கொஞ்சமோ கொஞ்சமாய் குளிரை இழந்து காரமடைக்குள் மெல்லத் தவழ்ந்து கொண் டிருந்தது அந்த குளிர்காற்று.

அதிலும் மாலை நான்கு மணியானால் போதும் காற்று கனத்து விடுகிறது. காற்று கனத்து குளிர் பெருகிப் போனாலே காரமடை நெசவுத்தறிகளுக்கு கொஞ்சம் போல கிறுக்குப் பிடித்து விடும்.

பாவு கிழடுதட்டி இறுக்கம் தளர்ந்து விடும். நாடா குறுக் கில் ஓடினால் பட் பட் என்று இழைகளும் அறுந்துபோகும்.

நடராஜனுக்கும் அதற்கு மேல் தறியில் உட்கார மனது வராது.

பக்கவாட்டு சன்னலை ஒட்டி ஒரு முருங்கை மரம் வளர்ந் திருக்கிறது. பச்சைப் பாம்புகள் ஒன்று கூடி அணிவகுத்து நிற்கிறமாதிரி அதில் முருங்கைப் பிஞ்சுகளுக்கும் பஞ்ச மில்லை. அது ஆடுவதைப் பார்த்தால் வாலை மடித்துக் கட்டிக் கொண்டு சிரசாசனம் செய்தபடி குளிர் காற்றில் பச்சைப் பாம்புகள் ஆடுகிற மாதிரி இருக்கும்.

அந்த ஆட்டம்தான் நடராஜனுக்கும் கணக்கு. ஜன்னல் வழியாக ஒரு பார்வை பார்த்தவன் இதற்குமேல் தறியில் உட் கார்ந்தால் அது ஆபத்து என்பது போல் கைகளை சொடுக்கு

போட்டுக் கொண்டே தறி மேடையை விட்டு நீங்கத் தொடங் கினான்.

பாவுத்தறி நீண்டு கிடக்கும் இடத்திற்கு கீழே சிமிண்டுத் தரையில் ராட்டை சுற்றிக் கொண்டிருந்த அவன் மனைவி சுசீலாவும் அவன் கீழ் இறங்குவதைப் பார்த்து. ராட்டை சுற்றுவதை மெல்ல நிறுத்தினாள். நடராஜன் அவளைப் பார்த்தபடியே அந்த குச்சு வீட்டின் கொல்லைப் பக்கமாக நடந்தான். துண்டுத் துண்டாய் சதுரம், செவ்வகம் என்று கடப்பைக் கற்கள் கொல்லைப் புறத்தரையில் கிடந்தது. அது கிடக்காத இடங்களில் புற்களின் விளைச்சல்.

ராட்டினத்தோடு கூடிய கிணறும் கொல்லையில்தான் இருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தால் கண்ணாடி கணக்காய் முகத்தைக் காட்டும் நீரின் தேக்கம்.

நடராஜனும் எட்டிப்பார்த்து விட்டு, நசுங்கிய இரும்புப் பக்கெட்டைக் கொண்டு அந்த நீரை மேலே கொண்டு வந்து முகம் கழுவிக் கொள்ளத் தொடங்கினான்.

பின்னாலேயே சுசிலாவும் வந்து நின்றாள். மிகக் குறிப் பறிந்தவள் போல அவள் கையில் ஒரு கைத்தறித்துண்டு.

அதை நீட்டும்போது "இன்னிக்கும் மலைக்கு போகப் போறீங்களா?" என்று மட்டும் கேட்டாள்.

அவன் ஆமோதிக்கிற ரகமாய் தலையை ஆட்டினான்.

"அப்ப பச்சரிசிய பொங்கிடட்டுமா?"

"பொங்கிடு! அப்படியே முருங்கைக் கீரையையும் கடைஞ்சு உப்பில்லாம ஒரு தனி ஏனத்துல வெச்சுக் கொடு."

"சரி... இன்னிக்கு எப்படி? பால்சோறா இல்ல தயிர் சோறா?"

"இரண்டையுமே கொடேன். சாமிக்கு இரண்டுமே ரொம்ப இஷ்டம்தானே?"

"நானும் வரட்டா?"

"வேணாம் சுசீ... உன்னால நடக்க முடியாது!"

"இப்படியே ஒவ்வொரு தடவையும் சொல்லி என்ன தடுத்துப்புட்றீங்க. சாமி என் சமையல ரசிக்கறதை நான் பார்க்க வேண்டாமாக்கும்?"

"உனக்கு இப்படி ஒரு ஆசையாக்கும். நான் அவர்கிட்ட கேட்டுகிட்டு வரேன். இப்போதைக்கு என்னை மட்டும்தான் வர்ச்சொல்லியிருக்காரு. அதை மீற முடியாது பாரு, அவன் சொல்ல அவள் முகத்தில் வாழை இலை தணலில் வெந்தது போல ஒரு வாட்டம்."

"வாடாதே... நம்மசாமி. எப்ப வேணா பாத்துக்கிடலாம்."

அவன் பேச்சோடு மளமளவென்று அடுத்த செயலுக்கு மாறினான். வீட்டுக்குள் நுழைந்து ஆணிக்காதில் தொங்கிக் கொண்டிருந்த சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டான்.

கண்ணாடி முன் நின்று சீப்பால் தலையையும் ஒரு சீவு சீவிக்கொண்டான். அருகில் முக்கோண வடிவில் சுவற்றில் பிறை. அதில் ஏகத்துக்கும் விபூதி, நான்கு விரல்களை உள்ளே விட்டு ஒரு அளம்பு அளம்பி அப்படியே நெற்றி மேல் தேய்த்துக் கொண்டான்.

சுசீலாவும் கும்பிட்டு அடுப்பில் மண்ணெண்ணை நனைந்த வறாட்டித் துண்டை வைத்து தீ மூட்டிக் கொண்டிருந்தாள்.

"நான் நம்ப வாத்யார் வீடுவரை போய்ட்டு வந்துடறேன்" என்று அவளிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

***அ***ந்த வண்டல் மணல் தரைப்பரப்பின் மேல் சிலர் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தனர். சிலர் சிலம்பு சுற்றியபடி இருந்தனர். இன்னும் சிலர் பரந்த தோளில் எண்ணெய் போல வியர்வை ஒழுக கர்லாவை சுழற்றிக் கொண்டிருந்தனர்.

அவ்வளவையும் பார்த்தபடி ஆஞ்சனேய ஸ்வாமி கற்சிலையாக நின்று கொண்டிருக்க, சற்றுதள்ளி ஒரு

கயிற்றுக் கட்டில். அதன் மேல் ஆசான் என்றும், வாத்யார் என்றும் எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் ரங்கசாமிக் கவுண்டர் அமர்ந்து கொண்டிருந்தார்.

கொக்கின் சிறகுபோல வெகு அடர்வாக தலைமுடி, அதை குடுமிபோல் கட்டிப்போட்டிருந்தார். புருவத்திலும் ஆற்றோர தர்பை புதர் போல நீண்ட முடிக்கூட்டம். அதுவும் வெளுத்து வெள்ளிக்கம்பிகள் கணக்காக காட்சியளித்தன."

முகத்தில் கொஞ்சம் கூட சுருக்கமில்லை. நல்ல பொன் னிறத்தில் நெற்றி முதல் கன்னம் வரை பொறித்த பூரியைப் போல புடைப்பில் இருந்தன.

தாகூரைப் பார்த்து வளர்த்தது போல தாடி. நடுமார்பில் நெஞ்சுக் குழியை தொட்டது அதன் நீண்ட முடி. திறந்த மார்பு. அதில் நெய்யைப்போட்டு பூசிப் பிசைந்த மாதிரி ஒரு மினுமினுப்பு. ஸ்பீட் பிரேக்கர் போல அங்கங்கே திரண்டு மேடும் பள்ளமுமாய் பார்த்தால் பார்வையை எடுக்க விடாத உடல்வாகு. அத்தனைக்கத்தனை வயிற்றுப் பக்கம் ஒடுங்கி தசையே இல்லாமல் இரு கையை சேர்த்துப் பிடித்தால் உள்ளே அடங்கி வரும் அளவில் இருந்தது அது.

மெல்லிசான கதர் வேட்டியை தளரக் கட்டிக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்திருக்கும் ரங்கசாமிக் கவுண்டருக்கு வயது எண்பது என்றால் படைத்த பிரம்மனே கூட "கதை விடாதே

அப்பனே'' என்று சொல்வான். அப்படி ஒரு செழுமை, வளமை, அந்த உடம்பில்.

"டேய்... அப்படிப் பிடிக்காதே! நரம்புல பட்டுடும். டேய் கந்தப்பா.. நல்லா விளாசிச் சுத்துடா... காத்து கம்புகிட்ட மோதி நரி ஊளை போட்ற கணக்கா சத்தம் கேட்கணும். அப்பதான் வேகம் வசப்பட்டுருக்குன்னு அர்த்தம்."

ரங்கசாமிக் கவுண்டர் அங்கே மணல் வெளியில் வித்தை யில் இருப்பவர்களை கண்காணித்தபடியே கட்டளைகளும் இட்டுக் கொண்டிருந்தார்.

அந்த சிலம்பக் கூடத்தின் உள்ளே நுழைந்து கொண் டிருந்தான் நடராஜன்.

நேராக கவுண்டர் முன்னால் வந்து நின்றவன் சிலம்ப முறையில் தோளையும், தொடையையும் தட்டி, கைகளை பெருக்கல் குறியாக்கி ஒரு உசும்பு உசும்பி எகிறிக் குதித்து, பின் வலது காலை மட்டும் மடக்கி முட்டிபோட்டு இடக் காலை பின்னால் நீட்டியவனாக அவருக்கு குரு வணக்கம் செலுத்தி விட்டு அவரைப் பார்த்தான்.

"வாடா... சோலி முடிஞ்சிச்சா?''

''முடிஞ்சிச்சு குரு. இன்னிக்கு பௌர்ணமி. சாமிய பாக்க மலைக்கு கிளம்பிகிட்டு இருக்கேன். அதான் உங்களையும்

பாத்துட்டு போக வந்தேன்."

"அப்படியா... கொஞ்சம் நேரம் விளையாடிகிட்டு இரு.. வந்துடறேன்."

கவுண்டர் அவனிடம் பேசிய கையோடு கட்டிலை விட்டு எழுந்து அந்த திடலைவிட்டு நீங்கத் தொடங்கினார்.

அவர் அகன்ற மறுநொடியே அங்கே ஒருவித கலகலப்பு எல்லோரையும் தொற்றிக் கொண்டது. இறுக்கமாக பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள்கூட 'அப்பாடா' என்றபடி நடராஜனை பார்த்து சிரித்துக் கொண்டே வந்தார்கள்.

"என்ன நடராஜா... இன்னிக்கு எதுவும் விளையாடலையா?"

"இல்லப்பா... சும்மா குருவை பாக்கத்தான் வந்தேன்."

"இப்பல்லாம் நீ கம்பைத் தொடறதே இல்லை. முந்தி மாதிரி தண்டால் பஸ்கின்னும் இறங்க மாட்டேங்கறே. என்ன வந்துச்சு உனக்கு."

"ஒண்ணுமில்லப்பா. நேரமில்ல அதான்."

"ஆமாம் பெரிய டிஸ்ட்ரிக்ட் கலெக்டரு பாரு, இந்த ஒட்டுதானே வேண்டாம்கறது. வா... கம்பை எடு... ஒரு மேல்தார் கீழ்தார் வரிசை போடுவோம்."

"வேண்டாம்பா... எனக்கு இப்ப இதெல்லாம் அலுத்துப்

போச்சு விட்றுங்க."

"இல்ல... நீ கதை உடறே, உன்னைப்பத்தி நாங்க என்னென்னவோ கேள்விப்படறோம். அதெல்லாம் உண்மை தான் போல இருக்கு.."

"என்னப்பா கேள்விப்பட்டே?"

"சாமியார் மாதிரி அப்படியே இரண்டு நாள் மூணு நாள்ளாம் உக்காந்த இடத்தை விட்டு எழுந்திரிக்கறதே இல்லையாமே நீ.. எம்ப்பா அப்படி?"

"அதுதானா...சும்மாதான். வேண்டாம் விட்று... என்னைப் பத்தி பேசி இப்ப என்ன ஆகணும், சொல்லுபாப்போம். விட்று."

"அப்ப வா... கம்பு எடு. ஒரு சுத்து சுத்துவோம்."

"விட்றுங்கப்பா...வேண்டாம்னா விடமாட்டேங்கறீங்களே."

"சரி... சாமியார் ஆகி என்ன பண்ணப்போறே. நம்ம ஊர் லையே எதாவது ஆசிரமம் போட்டு சம்பாதிக்கப் போறியா?"

"என்ன உளர்றே. சாமியாருக்கு எதுக்கு சம்பாத்தியம்."

"அட.. என்ன நடராசு. ஒண்ணுமே தெரியாத பாப்பா மாதிரி பேசறே. இன்னிக்கெல்லாம் சாமியாருங்களுக்குதானே காசு. அப்படியே ஜல்சாவும் பண்ணிக்கிடலாம். சரிதானே.

சும்மா செல்லு."

சுற்றி நிற்பவர்கள் சகஜமாக பேசும் பாவனையில் வரம்பு மீறவும் நடராஜன் அவர்களை வெறித்தான். அவ்வளவு பேரும் அவன் வயதினர். ஒன்றாம் வகுப்பில் இருந்து அவனோடு படித்து கோலி விளையாடி, மாங்காய் அடித்து காற்றைப்போல சுற்றி வந்தவர்கள்.

அந்த பழக்கமும் நட்பும் அவர்கள் வரம்புகளை மீறிப் பேசும்போது நடராஜனைக் கட்டிப்போட்டது. நல்லவேளை, கவுண்டர் திரும்ப அந்த சிலம்பக் கூடத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

அவர் தலை தெரியவும் அவ்வளவு பேரும் பழையபடி, விரைப்பாயினர். சிலம்புக் கம்புகள் சுழல ஆரம்பித்தன. கர்லாக் கட்டைகள் தோளைச் சுற்றின. நடராஜன் முகம் மட்டும் வாடிப்போயிருந்தது.

நெருங்கிய கவுண்டர் அதை உணர்ந்து கொண்டவர் போல "என்ன நடராஜா... நான் இங்க இருந்து போகவும் பசங்க ஒடசல் கொடுத்தாங்களாக்கும்."

கலக்கமான முகத்தோடு ஆமோதிப்பாய் தலையை அசைத்தான் நடராஜன்.

"எவன் என்ன சொன்னான். கூப்டு" எல்லோர் காதிலும்

விழும்படி அவர் கத்தவும் நடராஜன் எதுவும் சொல்லாமல் அமைதியாகவே நின்றான்.

"டேய்... எவண்டா நடராஜனை சீண்டுனது."

கவுண்டர் அவர்களைப் பார்த்து ஒரு எகிறு எகிறினார். அவர்களும் அங்கங்கே அப்படி அப்படியே நின்றனர். நட ராஜன் மௌனத்தை கைவிடவில்லை.

கவுண்டர் நேராக சிலம்பம் சுற்றுபவனிடம் சென்று அவன் எதிரில் நின்றார்.

"நடராஜனைப் பார்த்து நீ என்ன கலெக்டரான்னு கேட்டியா."

அவன் விளையாட்டாக கேட்டதை அப்படியே பக்கத்தில் இருந்து கேட்டமாதிரி திருப்பிக் கேட்டார். அவன் முகத்தில் அசாத்ய மாறுதல்கள். இடையில் கர்லா கட்டை சுற்றிக் கொண்டிருந்தவன் அப்படியே நழுவப் பார்த்தான்.

"நில்லுடா..." அவனைப் பார்த்து கத்தியவர் அவனை சொடக்கு போட்டு அழைத்தார். அவனும் மிடறு கட்டிக் கொண்டே அருகில் வந்தான்.

"நடராஜன் இரண்டு நாள் இல்ல. இரண்டு வருஷம் கூட எனக்கென்னன்னு உக்காந்துருப்பான். உனக்கெங்கடா வலிக் குது.?"

அவனுக்கும் உதறல் எடுத்தது. கவுண்டர் எப்படி இப்படி நினைத்ததை எல்லாம் அப்படியே போட்டு உடைக்கிறார் என்று ஆச்சரியமாகவும் இருந்தது. நடராஜன் கவுண்டரை நெருங்கி தோளைத் தொட்டு "குரு விட்றுங்க... வாங்க.. நம்ம விஷயத்தை பேசுவோம்'' என்று அவரை தனியே அழைத்துச் சென்றான்.

ஆஞ்சனேய ஸ்வாமி சிலையை ஒட்டி ஒரு புங்கமரம் அதனடியில் போய் நின்று கொண்டனர்.

கவுண்டர் இடுப்பில் இருந்து உருண்டையாக எதையோ எடுத்து அவனிடம் நீட்டினார். அதை அவனும் உள்ளங்கை யில் சுமந்த நிலையில் "இதை சாமிகிட்ட திரும்ப கொடுக் கணுமா'' என்று கேட்டான்.

"ஆமாம், சாமி சொன்ன கெடு முடிஞ்சி போச்சு. எனக் கும் இப்ப மூத்திரக்கட்டெல்லாம் சுத்தமா இல்லை, பன்னீரா தண்ணி வெளியேறுது. உடம்பும் கலகலன்னு இருக்கு. ஆனா பார்வைதான் கொஞ்சம் மங்கலடிக்குது. சாமிகிட்ட சொல்லு, அதுக்கு எதாவது கொடுத்தா வாங்கிட்டு வா."

"சரிங்க குரு... அப்ப நான் கிளம்பறேன்."

''பாத்து... மலை ஏறயில இந்த ரசமணி விழுந்துடப் போகுது. இன்னிக்கெல்லாம் கோடி ரூவா கொடுத்தாலும் கிடைக்காது. கவனம்.''

"சரிங்க குரு..."

ஆமோதிப்புடன் மீண்டும் அவரை வணங்கிவிட்டு புறப் பட்டான்.

எல்லோர் பார்வையும் அவன் மேலேயே இருந்தது.

வீட்டுக்குள் நுழைந்தபோது சுசீலா தயாராக பச்சரிசி பொங்கி, பால்சோறு, தயிர்ச்சோறு, கீரைக்கடைசல் மூன்றை யும் ஒரு செம்புத் தூக்கு வாளியில் போட்டு மூடி தயாராக வைத்திருந்தாள்.

அவனும் தாமதிக்காமல் அவைகளை ஒரு பிரம்புக் கூடையில் போட்டு எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

"கவனமா போய்ட்டு வந்துடுங்க" என்றாள்.

தலையசைத்தபடியே வீதிக்கு வந்தான். வீதியில் அவ்வள வாக ஜனநடமாட்டமில்லை. விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான். தெருவின் முக்கியத் திருப்பத்தில் ஒரு அனுமார் கோவில் இருக்கிறது. அங்கே ஒரு வயதான பெரியவர் உட்கார்ந்திருந்தார். நடராஜன் வரவும் அவனைப் பார்த்து சிரித்தார்.

"வந்துட்டியா. எங்க காணோமேன்னு நினைச்சேன். புறப் படுவோமா?"

''புறப்படலாம் சாமி... சீக்கிரமா வாங்க நேரமாச்சு.

வெள்ளியங்கிரி மலை அடிவாரம் போக இந்த பஸ்ஸை விட்டுட்டா அப்புறம் விடிஞ்சுதான் பஸ்.''

அதைக்கேட்டு அந்த பெரியவர் சிரித்தார்.

''என்ன சாமி சிரிக்கறீங்க?"

''சிரிக்காம... சாமியை பாக்கப்போற நமக்கு எதுக்கு பஸ்சும் காரும்."

"என்ன சொல்றீங்க சாமி?"

''என் கூட வா... ஒரு துடியில போயிடலாம்."

"துடியிலயா, நொடியில கேள்விப்பட்டிருக்கேன். இது என்ன துடி?''

"அனுபவிச்சு தெரிஞ்சுக்க, வா.. கையப்பிடி அப்படியே பொடி நடையா நடப்போம்."

"உங்க பேச்சே புரியல. இப்படி நடந்தா என்னிக்கு போய்ச் சேர்ரது.?"

அதைக்கேட்டு அவர் சிரித்தார். சிரித்தபடியே கை நீண்டது. அவனது கையையும் பிடித்துக் கொண்டது. அவனது மறுகையில் அவன் மனைவி அவனிடம் கொடுத்துள்ள தயிர் அன்னமும், பால் அன்னமும், முருங்கைக் கீரையும் கொண்ட மூங்கில் கூடை.

அவரோடு சேர்ந்து நடக்க ஆரம்பித்த நடராஜன் அவரையே பார்த்தான்.

காரமடை கடைத்தெருவில் நடந்தபடி இருந்தாலும் பார்வை அவர்மேல்தான் இருந்தது.

# 4

***கா**லம் என்பது உணர்வதில்தான் இருக்கிறது. நினைத்த மாத்திரத்தில பத்து ஆண்டு பின்னோக்கிப் போய் அப்போது நடந்த ஒரு சம்பவத்தில் திளைக்க மனதால் முடிகிறது. பின்னோக்கும் இந்த சக்தியால் முன்னோக்கவும் முடியும். இப்படி முன்னோக்கி நினைப்பதை கற்பனை செய்து பார்ப்பது என்று வழக்கத்தில் கூறினாலும் அதுதான் காலத்தை வெல்வதற்கான ஒரு ஆரம்பம்.*

***வி**த்யாசமான மனிதர் அவர்.

எப்பொழுதும் அனுமார் கோவில் திண்ணையில்தான் அமர்ந்தபடி இருப்பார்.

அவரை ஒரு பிச்சைக்காரனாக கருதி விரட்டியடித்திருந் தார்கள் சிலர். அவர்கள் மறுநாளே காய்ச்சல் குளிர் என்று தடுமாறிப் போனார்கள்.

ஆனால் உண்மையில் அவர் பிச்சைக்காரர் இல்லை. யாரிடமும் சல்லிக்காசு கேட்கமாட்டார்.

நடராஜன் பரிதாபப்பட்டு ஒருநாள் அவருக்கு ஒரு இரண்டு ரூபாயை தர முன் வந்தான். ஆனால் வாங்க மறுத்து விட்டார்.

"நான் கேக்காம எதுக்கு ராசா தரே. இருந்தாலும் உனக்கு பெரிய மனசு" என்று அவனை பாராட்டினார்.

நடராஜனுக்கு ஆச்சரியம்.

''ஏ... பெரியவரே. காசு வாங்காம எப்படி உங்க காலட்க்ஷேபம் நடக்குது." என்று திருப்பிக் கேட்டான்.

''நீ காலட்க்ஷேபம்னு எதைச் சொல்றே?"

"வயித்துப்பாட்டைத்தான். பசிக்கும் இல்லையா?"

"அது சரி... மனுஷனா ஆசாபாசத்தோட இருந்தா பசிக்கத்தான் செய்யும். ஆனா எனக்குத்தான் அதெல்லாம் எதுவும் இல்லியே..."

அவர் பதில் அவனை தொடர்ந்து கேள்விகளில் பிடித்துத் தள்ளியது.

"அப்ப ஆசாபாசமில்லேன்னா பசிக்காதா?''

"இல்லையா பின்னே..?''

"என்ன சொல்றீங்க... ஆசாபாசத்துக்கும் உடம்புக்கும் என்ன சம்பந்தம்? கண்ணு பார்க்குது, காதுகேட்குது. கை காலல்லாம் அசையுது. பேசறோம், நடக்கறோம். இதுக்கு சக்திவேண்டாமா? இதுக்காகவாவது சாப்ட்டுதானே தீரணும்."

அவனும் கேட்டான். அவரும் சிரித்தார். அது கேலிச் சிரிப்பாக தெரியவில்லை. சில சிரிப்புகளில் ஒரு புத்தகம் எழுதுமளவு அர்த்தங்கள் இருக்கும். அப்படி ஒரு சிரிப்பாகத் தான் நடராஜனுக்கு அந்த சிரிப்பு தோன்றியது.

"பெரியவரே.. உங்களை சோத்துக்கு வக்கத்த ஒரு மனுஷனா என்னால நினைக்க முடியல. நீங்க எதுக்கோ காத்திருக்கற ஒருத்தர் மாதிரிதான் என் மனசுக்கு தெரிய றீங்க, உங்க பேச்சு. இங்க நீங்க உக்காந்துகிட்டு அமைதியா இருக்கறவிதம், இதெல்லாம் என்னை இப்படித்தான் நினைக்க வைக்குது."

அவன் விளக்கம் அவருக்கு மிகப்பிடித்துவிட்ட மாதிரி அவன் கைகளை இழுத்துப் பிடித்து மெல்ல வருடிக் கொடுத்தார்.

அவனுக்கு மிக பரவசமாக இருந்தது.

எத்தனையோ மனிதர்களின் ஸ்பரிசம் இதற்கு முன் பட் டிருக்கிறது. அதில் மனைவி சுசிலாவின் ஸ்பரிசம் மட்டும்

சற்று வித்யாசமானது. அதில் காமம் இருந்து உடம்பை எரியாத நெருப்பில் எரித்து பரவசப்படுத்தியிருக்கிறது.

அந்த நொடி உடம்பு என்பது எத்தனை அற்புதமான விஷயம் என்றுதான் தோன்றும் அவனுக்கு. உச்சித்தலையில இருந்து உள்ளம் பாதம் வரை ஒரு துணுக்களவு சதைப்பரப்பு பாக்கி இல்லாமல் இன்ப ரசனை செய்யும்.

எதனால் ஆடு மாடு முதல் புழு பூச்சிவரை புணர்ச்சிக்கு தவிக்கிறது என்பதெல்லாம் அப்போது கேள்வியாகி பதிலு மாகும்.

ஆனால் அதைக்கடந்து அந்த பெரியவரின் ஸ்பரிசம் அவனைத் தீண்டியபோது, அது வேறு விதமாக இருந்து, உடம்பு தொலைந்துபோய் ஒரு மிதவை போல் தான் மிதக்கிற மாதிரிதான் உணர்த்திற்று. அதுவே அவர் வேறுபட்ட மனிதர் என்று சொல்லாமல் சொல்லிற்று.

அதே சமயம் அதற்குமுன் வரை மனசுக்குள் எவ்வளவோ கவலைகள் அவனுக்குள் அலைந்து கொண்டிருந்தன. ஒரு புதிய பட்டுத்தறி போட வேண்டும். தறி மேடைக்கு பக்கத் திலேயே பார்த்துக் கொண்டே நெய்யும் படியாக டி.வி வாங்க வேண்டும். வீட்டுக்கூரை ஒழுகுகிறது அதை பூசி சரிசெய்ய வேண்டும். அக்கா மகள் சந்திராவதி புஷ்பவதி ஆகியிருக் கிறாள். அவளுக்கு மாமன் என்கிற உறவின் முறையில் ஒரு

வெள்ளிக் கொலுசாவது வாங்கித் தந்தாக வேண்டும். சுசீலா கூட நல்ல புடவை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக் கிறாள். அடுப்படியில் அதிகம் புகை கட்டுகிறது கியாஸ் அடுப்புக்கு மாறிவிடலாம் என்று சொல்லிக் கொண்டிருக் கிறாள்.

இப்படி தேவைகளின் பாரத்தில் அமிழ்ந்து கிடந்த மனசு அந்த பெரியவர் தொட்ட நொடி அதை எல்லாம் உதறிக் கொண்டு ஒரு பாரத்தின் கீழ் கிடந்த காகிதமானது, அந்த பாரம் நீக்கப்பட்ட நிலையில் இதமான காற்றில் அப்படியே மேலெழுந்து பட்டம் போல பறக்கிற மாதிரி தோன்றியது. அவன் உடம்பு அவன் வாழ்நாளில் இதற்குமுன் எவ்வளவோ சுகங்களைக் காட்டியிருக்கிறது.

சிறுபிராயத்தில் தாய்ப்பாலுக்குப்பிறகு முதல் முதலாக சத்துமாவுக்கஞ்சியை அவன் தாய் கொடுத்தபோது அது மட்டுமே உன்னதமான சுவை உடையது. அதை சாப்பிடு வதற்காகத்தான் மனிதப் பிறப்பு எடுத்திருக்கிறோம் என்றெல் லாம் தோன்றியது.

பின் பொரி உருண்டை, தேங்காய் பர்பி, சாக்லேட் என்று சுவைகள் மாறி மாறி பொருட்கள் அறிமுகமாக, அறிமுகமாக உடம்பும் மனசும் அந்த சுவையை அனுபவிப்பதில் அலாதி நாட்டம் காட்டிற்று. அதன்பின் சைக்கிள் ஓட்டப்பழகும்போது

விழுந்து நகம் பெயர்ந்து ரத்தம் ஒழுகி, சீழ்கட்டி வலி என்றால் என்ன என்று தெரிய ஆரம்பித்தது.

இப்படி நினைவு தெரிந்த நாளாக இன்பம் துன்பம் என்று மாறிமாறி பல விதங்களில் உடம்பு அனுபவங்களைக் கண்டு வந்திருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட வயதுக்குபிறகு எல்லாவித இன்பம், எல்லாவித துன்பத்தையும் பார்த்து முடித்து விட்டதாக ஒரு நினைப்பு கூட தோன்றியிருந்தது.

ஆனால் அதெல்லாம் மிகப்பெரிய பொய் என்கிற மாதிரி அந்த பெரியவர் தீண்டியபோது, ஏற்பட்ட பரவச உணர்வு அவனுக்கு போதித்தது. சொல்லப்போனால் இந்தப் பரவசத் துக்கு இணையாக ஒரு பரவசத்தை ஒரு சந்தோஷத்தை, ஒரு உன்னதத்தை இதற்கு முன் அனுபவித்ததே இல்லை, இனி அனுபவிக்கவும் போவதில்லை என்கிற மாதிரி யெல்லாம் அவனுக்குத் தோன்றியது.

"என்னப்பா, எப்படி இருக்கு. நான் இப்ப உனக்குள் ளேயும் பரவிகிட்டிருக்கேன்." என்றார் அந்த பெரியவர்.

"பெரியவரே... உண்மையைச் சொல்லுங்க. நீங்க யாரு? ஒரு தீண்டல்ல எப்படி உங்களால எனக்குள்ள இவ்வளவு சுகத்தைத் தாமுடியுது. இந்த சுகத்துக்கு பேர் என்ன?" நட ராஜன் சிலிர்த்தபடியே கேட்டான்.

"இதுக்கு பேர்தான் மோனநிலை, உடம்பு, ஆத்மா இரண்டும் சந்தோஷப்படும்போது இப்படி ஒரு பரவசம் ஏற்படும். இது ஒண்ணும் பெரிய வித்தை இல்லை. உனக்கும் இது கிடைக்கும். அதுக்கு முந்தி நீ கொஞ்சம் உன் உடம்பை புரிஞ்சுக்கணும்" என்றார் அந்த பெரியவர்.

"உடம்பைப் புரிஞ்சுக்கணுமா?"

"இல்லையா பின்னே.."

"அப்படின்னா?"

"இப்ப நீ ஒரு புத்தகம் படிக்கணும்னா என்ன தேவை?"

"கல்வி அறிவு."

"அதைக் கொஞ்சம் விளக்கமா சொல்லு."

"பள்ளிக்கூடத்துக்கு போய் எழுதப்படிக்க கத்துக்கறதுதான் கல்வி அறிவு."

"தப்பு. எழுதப்படிக்க கத்துக்கறதுங்கறது கல்வி அறிவோட ஆரம்பம்தான். எழுதப்படிக்கத் தெரிஞ்சதை வெச்சு நிறைய புத்தகங்கள் படிச்சு, நிறைய யோசிச்சு, நிறைய சந்தேகப் பட்டு, நிறைய கேள்விகள் கேட்டு, நிறைய கவலைப்பட்டு, நிறைய கர்வப்பட்டுன்னு, கல்வி அறிவுல ஒரு உச்சத்துக்கு போறதுல எவ்வளவோ நிலைகள் இருக்குது இல்லியா?"

"நிச்சயமா.?"

"அப்படியே உச்சத்துக்கு போனாலும் பெரியவங்க என்ன சொல்றாங்க, கற்றது கை மண் அளவு.. கல்லாதது உலக அளவுன்னுதானே சொல்றாங்க."

"ஆமா... ஆமா."

"ஏன் அப்படிச் சொல்றாங்க.?''

"ஏன்னா... படிக்கற விஷயம் உலகத்துல அதிகம். அதை ஒரு மனுஷன் தன் வாழ்நாள்ள படிச்சு முடிக்க முடியாது. அதுக்கு அவனுக்கு வயசும் புத்தியும் போதாதுங்கறதால் இருக்கலாம்."

''சரியா சொன்னே. இந்த உடம்புக்கு சராசரி ஆயுள் நூறு வருஷம், அதாவது முப்பத்தி ஆறாயிரத்து ஐநூறு நாள். இதுல சாப்பிட்றது. தூங்கறதுங்கறதுல பாதிக்கு மேல போயி டுது. மீதி இருக்கற நாள்ல என்னத்த பெரிசா படிச்சு புரிஞ்சுக்க முடியும்.''

"பெரியவரே. உடம்பைப் புரிஞ்சுக்கணும்னு சொல்லிட்டு படிக்கறதுல போய்ட்டீங்களே."

''நல்லா மடக்கி திருப்பி இழுத்துகிட்டு வர்றியே. நல்லது. இந்த சராசரி ஆயுள் நூறு வருஷத்தை எல்லாருமேவா வாழ்ந்து பாக்கறோம்?''

"இல்ல. ஐம்பது அறுபது வயசுலையே செத்துப் போயிடற வங்களும் உண்டு.''

"ஏன்?"

"எவ்வளவோ காரணம், பிரதான காரணம் வியாதி."

"வியாதிக்கு காரணம்?"

"என்னத்த சொல்ல. நூறு காரணம் சொல்லலாம். சரியா சாப்பாடு இல்லாம போகறதுல இருந்து தப்பான பழக்க வழக் கம்னு எவ்வளவோ காரணங்கள்."

"அப்ப ஒரு மனுஷனுக்கு உடம்பும் ஆரோக்கியமும்தான் பிரதானம்னு சொல்லு"

"அதுல சந்தேகம் என்ன?''

"இப்படி என்னை கேள்வி கேட்கறியே. உனக்கு உன் உடம்பை பத்தி என்ன தெரியும்?"

''என்ன தெரியும்னா. இது என்ன கேள்வி. என்ன தெரியனும்?''

"இந்த உடம்பு உன்கிட்டதானே இருக்கு."

"என்கிட்ட இல்லாம?''

"அப்படி உன்கிட்ட இருக்கற உன் உடம்பை பத்தி உனக்கு என்ன தெரியணும்னு கேக்கறியே."

"சரி, என் உடம்பை பத்தி என்ன தெரியனும்?"

"அப்படி கேள். கல்லைத்தின்னா செரிக்குமா உனக்கு?"

"எனக்கு மட்டுமில்ல. யாருக்குமே செரிக்காது."

"உனக்கு கேட்டா உனக்கு மட்டும் சொல். உன்னையே சரியா தெரியாத நிலையில் அடுத்தவங்கள பத்தி அபிப் பிராயம் சொல்லாதே."

"எனக்குன்னா. நான் கல்லு மண்ண சாப்பிட்டு பார்த்த தில்ல. அதனால செரிக்குமா செரிக்காதான்று தெரியாது."

"சரி. எல்லா காய் கணியும் சாப்பிடுவியா?"

"இல்லை. எனக்கு வாய்வு அயிட்டம் ஒத்துக்காது?"

"ஏன் ஒத்துக்காது?"

"இது என்ன கேள்வி. என் உடம்பு அப்படி?"

"அப்படின்னா எப்படி?"

"தெரியில. நீங்க இப்படி குட்டி குட்டி கேள்வியா கேட்டு போரடிக்காம பளிச்சுன்னு விஷயத்துக்கு வாங்க."

"அப்படியா, சரி வரேன். உன் உடம்பு உனக்குதானே சொந்தம்."

"நிச்சயமா?"

"ஒரு துணி வாங்கறே. சைக்கிள் வாங்கறே. வீடு வாங்

கறே. இதை எல்லாம் உன் விருப்பப்படிதானே வாங்கறே?"

"ஆமா."

"உனக்கு சொந்தமான உன் உடம்பையும் நீ அப்படி உன் விருப்பப்படிதான் வாங்கினியா?"

அந்த பெரியவர் சாதாரணமாகத்தான் கேட்டார். ஆனால் அது ஒரு அசாதாரணமான கேள்வியாக தோன்றியது.

"அது எப்படி பெரியவரே, என் உடம்பை நான் எப்படி வாங்க முடியும்."

"அப்படின்னா அது எப்படி உனக்கு சொந்தமானதாகும்.''

"ஐய்யோ குழப்பறீங்க. அப்ப இது யாருக்கு சொந்தம்?"

"உன்னை பெத்தாளே உன் தாய். அவளுக்குதானே சொந்தம், உன் தாயும் தகப்பனும் கூடித் தயாரிச்ச தயாரிப்பு தானே நீ..''

"ஆமாம்."

"அப்ப அவங்களுக்கு சொந்தமான ஒண்ணை நீ எப்படி உன்னுதுன்னு சொல்லலாம்.''

"அப்படிப் பார்த்தா யார் உடம்பும் அவங்களுக்கு சொந்த மில்லேன்னுல்ல ஆயிடுது."

"உளக்கு கேட்டா உனக்கு மட்டும் சொல்."

"சரி... இது என் அப்பா அம்மாவுக்குதான் சொந்தம். அப்புறம்?"

"உன் உடம்பு விஷயத்துல நீ முதல்ல புரிஞ்சுக்க வேண்டிய பாலபாடமே இதுதான். அதை முதல்ல புரிஞ்சுக்கோ."

"சரி... நீங்க விஷயத்துக்கு வாங்க."

"உன் உடம்பே உனக்கு சொந்தமில்லை. அது உன்னுடையதில்லை. இதுதான் நீ சரியா?"

"சரி..."

"இப்படி சொந்தமில்லாத உடம்பை வெச்சுகிட்டு இருக்கியே. அப்ப இதுல நீ எங்க இருக்கே?"

"நான்... நான்"

"என்ன, பதில் சொல்."

"எனக்குத் தெரியல."

"சரி... நான் இப்படிச் சொல்றேன். புரியுதா பாரு. இந்த உடம்பு உனக்கு சொந்தமில்லை. இருந்தாலும் இதுக்குள்ள தான் நீ இருக்கே. 'நீ'ங்கறது யார்?"

"யார்?"

"யோசிக்கற, இப்படி பேசற, உன் மனசை, ஆத்மான்னு சொல்லலாமா?"

"உம்.. சொல்லலாம். ஆனா இந்த உடம்பு இல்லாம அது மட்டும் எப்படி இருக்க முடியும்? அதுவும் சேர்ந்ததுதானே உடம்பு?"

"அப்படின்னா நான், எனதுன்னு யோசிக்காம உனக்காக பாடுபடற ஒரு ஆடு மாடு மாதிரில்ல நீயும் உன் அப்பா அம்மாவுக்கு பாடுபடணும், உனக்குன்னு தனியா ஆசைகள். எண்ணங்களே இருக்கக்கூடாதே?"

"வாஸ்தவம்தான். எனக்குச் சொந்தமில்லாத உடம்புல நான் எனக்கு, என்னுடையதுன்னு யோசிக்கிறேன்.நினைச்சா வேடிக்கையாதான் இருக்கு. அப்ப உடம்பை பத்தி தெரிஞ் சுக்க வேண்டியதுங்கறது இதுதானா?"

"இது ஒரு விஷயம்தான். அடுத்தடுத்து பல விஷயங்கள் இருக்கு."

"என்ன பெரியவரே?"

"உன் உடம்புல என்னவெல்லாம் இருக்கு?"

"என்னல்லாம் இருக்குன்னா... கை, கால், கண், காது மூக்குன்னு எல்லாம்தான்."

"இது வெளிய, உள்ள என்ன இருக்கு?"

"ரத்தம், சதை, எலும்பு, குடல், மலம், எச்சில்னு என்னென்னவோ இருக்கு."

"எவ்வளவு இருக்கு?"

"அது எப்படி தெரியும்."

"இருக்குன்னு சொல்லத் தெரியும். ஆனா இருக்கறதை எவ்வளவுன்னு சொல்லத் தெரியாதா?"

"அது எப்படி முடியும், ஐந்து லிட்டர் ரத்தம், எவ்வ ளவோ ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்துக்கு ரத்தக்குழாய், ஐம்பது அறுபது கிலோவுக்கு சதைன்னு குத்துமதிப்பா வேணும்னா சொல்லலாம்."

"இதை எல்லாம் நீ அளந்து பாத்து சொல்றியா?"

"மத்தவங்க சொன்னதை வெச்சு சொல்றேன்."

"அப்ப உனக்கு உன் உடம்பை பத்தி துல்லியமா எதுவும் தெரியாதுன்னு சொல்..."

"ஆமாம், தெரியாது..."

"முதல்ல உன் உடம்பே உனக்கு சொந்தமில்லை. இதை நீயும் ஒத்துகிட்டே. அடுத்து அந்த உடம்புல என்ன இருக்கு எவ்வளவு இருக்குன்னு கேட்டேன். தெரியாதுன்னே. என் கிட்ட பேசறதுக்கு முந்திவரை இந்த விஷயங்கள் கூட தெரி யாதவனாதான் நீ இருந்தே. நான் கேள்வி கேட்ட பிறகுதான் உனக்கு இந்த விஷயங்களே தெரிய வந்திருக்கு. அப்படித் தானே?"

"ஆ.... ஆமாம்.... ஆமாம்."

"என்ன தயக்கம், அதுதானே உண்மை."

"ஆமாம்... ஆமாம்."

"இப்படி உனக்குச் சொந்தமில்லாத, அந்த சொந்த மில்லாததைப் பற்றி எதுவும் தெரியாத நிலையிலேயே நீ வாழ்ந்துகிட்டிருக்கியே. உனக்கும் மிருகத்துக்கும் எதாவது வித்யாசம் இருக்கா?"

இந்த கேள்வியும் மிக பொருளுடைய அசாதாரண ஒரு கேள்வியாகத்தான் இருந்தது. என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. மிக வெட்கமாக இருந்தது. அதே சமயம் இப்படி அவர் கேட்பதற்கு பின்னாலும் ஏதோ ஒரு பெரிய பொருள் இருப்பதாக தோன்றியது.

"பெரியவரே... உங்க கேள்வி ரொம்ப நியாயமானது. பசிச்சா சாப்பிடணும்னு தெரியும், வலிச்சா அழணும்னு தெரி யும். நடுவுல ரசனைக்கேற்ப சந்தோஷங்கள். இதுதான் என் வாழ்க்கை. இந்த உலகத்துல எல்லோருடைய வாழ்க்கையும் கூட இது தான்.

இப்படித்தான் எல்லோரும் வாழ்ந்துகிட்டிருக்கோம், மிரு கங்களுக்கு இப்படி தங்களோட வாழ்க்கையை யோசிச்சு பார்க்கத் தெரியாது. மனிதனுக்கு அப்படி இல்லை. யோசிச்சு

பார்க்க முடியுது. சரி. நான் இப்ப நேரா விஷயத்துக்கு வரேன். நீங்களும் இப்படிப்பட்ட ஒருத்தர்தானே?"

நடராஜன் ஞானவிலாசத்தை சமீபித்துவிட்டது போல அந்த கேள்வியைக் கேட்டான்.

"இல்ல தம்பி..."

அவர் பதிலால் சன்னமாய் அதிர்ந்தான்.

"இல்லையா... எப்படி?"

"அப்படிக்கேள். எனக்கு என் உடம்பைப்பத்தி முழுசா தெரியும். அதாவது இது எனக்கு சொந்தமில்லைங்கறதுல இருந்து நான் யாருங்கற வரை எல்லாமே தெரியும்."

"எப்படி எப்படி?"

"இப்படி, எப்படி எப்படிங்கற கேள்விகளை கேட்கறதுதான் மனிதனை மற்ற ஜீவராசிகள் கிட்ட இருந்தே வேறுபடுத்துது. உன் கேள்விக்கு வரிசையா பதில் சொல்றேன். பிறர் பொருள் உன்கிட்ட இருந்தா நீ என்ன பண்ணுவே?"

"அது யாருடையதோ அவங்ககிட்ட திருப்பிக் கொடுத்து டுவேன்."

"கொடுக்க முடியாத நிலைல என்ன செய்வ?"

"நானேதான் வெச்சுக்குவேன்."

"அதை எப்படி வெச்சுப்பே. பத்ரமாவா. இல்ல பாதுகாப்பு இல்லாமலா?"

"நிச்சயமா பத்ரமாதான் வெச்சுப்போம். நம்ம பொருளை கூட நாம் எப்படி வேணா போட்டு வைக்கலாம். ஆனால் பிறர் பொருள் அப்படி கிடையாது. அதை பாதுகாக்க வேண் டியது நம் கடமை. அதுதான் நல்ல மனுஷனுக்கும் அடை யாளம்."

"அப்ப உனக்கு சொந்தமில்லாத, அதேசமயம் உன் தாய் தந்தையிடம் ஒப்படைக்க முடியாத இந்த சரீரத்தை அவர்களுக்காகவாவது நீ ரொம்ப பத்ரமா பாத்துக்கனும் இல்லியா?"

"ஆமாம்..."

"உன் உடம்பை நீ பத்ரமாதான் பாதுகாக்கறியா?"

"நிச்சயமா..."

"நல்லா யோசிச்சு பதில் சொல்லு, பத்ரமாதான் பாது காக்கறியா?"

"நிச்சயமா... பத்ரமாதான் பாதுகாக்கறேன். அதுல என்ன சந்தேகம் உங்களுக்கு."

"அப்படின்னா உன் தலைல நரை முடி எப்படி வந்தது? பேசும் போது உன் வாய் நாறுதே. ஏன்?"

"இது, இது எல்லாம் நம்ம கைலயா இருக்கு?"

"இல்லையா. உன் முடி நரைக்கறதும், உன் வாய் நாத்த மடிக்கறதும் உன் கைல இல்லையா. மழை காத்து மாதிரி அது வெளிய இருக்கற விஷயமா?"

உடம்பு என்று ஆரம்பித்து அவர் கேட்ட மூன்றாவது பிரதான கேள்வி இது. நடராஜன் மீண்டும் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். இருந்தும் ஒரு கேள்வி அவரைப் பார்த்துக் கேட்டான்.

"உங்களுக்கும்தான் நரை விழுந்திருக்கு. ஆனா உங்க வாய் நாற்றமடிக்கல. அதை ஒத்துக்கறேன். இதுக்கு என்ன பதில் சொல்றீங்க?"

"உன் வயது என்ன?"

"முப்பது"

"என் வயசு எவ்வளவு தெரியுமா உனக்கு?"

"ஒரு அறுபது இருக்குமா?"

அவர் சிரித்தார்.

"எவ்வளவு பெரியவரே."

"சொன்னா நம்பமாட்டே."

"அப்படியா... அப்ப ஐம்பது வயசா இருக்கலாம்.

கரெக்டா?"

"நம்ப மாட்டேன்னா குறைக்கறியே, கூட்டு."

"கூட்றதா... அப்ப எழுபது?''

"மிச்சம்?.. இன்னும் இருக்கே."

"தொண்ணுறு.''

"இன்னும் முப்பது வயசை யார் கூட்றது?"

"நூத்தி இருபதா?''

"ஆமா... போன மாசம்தான் நூத்தி இருபத்தி ஒண்ணு ஆரம்பம்."

"நம்ப முடியலை, நம்பவும் மாட்டேன்."

''அதனால எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை."

"சரி நம்பறேன்னு வையுங்க. அதுக்கென்ன?''

"இந்த நூத்தி இருபது வயசுலையும் நான் திடமா பார்ப் பேன், ஊசியில நூல் கோர்ப்பேன். நான் எது சாப்பிட்டாலும் செரிக்கும். மலை ஏறுவேன். மரம் எறி தேங்காயும் பறிப்பேன். என்னோட நரையே நூறு வயசுக்கு மேலதான் வந்தது.ஆனா உனக்கோ முப்பதுலையே வந்துருச்சு. இதுதான் உடம்பை பாதுகாக்கற லட்சணமா?"

"பெரியவரே.."

"இன்னும் கேள். நான் டாக்டரை இது நாள் வரை சந்திச் சதே கிடையாது. டாக்டரை யார் சந்திப்பாங்க தெரியுமா?"

"நோயாளிங்க."

"நோய் யாருக்கு வரும் தெரியுமா?"

"உடம்பு மேல அக்கறை இல்லாதவங்களுக்கு."

"அதுமட்டுமில்ல. மனசு தெளிவில்லாம பாவங்கள் செய்வதாலும் நோய்வரும்."

"நிஜமாவா?"

"ஆமாம்... ஒவ்வொரு பாவமும் ஒரு நோய்."

"அப்ப உடம்பு, மனசு இரண்டையும் பத்ரமா பாது காக்கணும்னா அதுக்கு வழி."

"ஆயிரம் இருக்கு. ஆரோக்ய ரகசியம்கறது வெளிய இல்லை. அது உனக்குள்ளேயே இருக்கு. ஒவ்வொரு மனி தனுக்குள்ளேயும் ஒரு மருத்துவன் இருக்கான். அவனை பயன்படுத்திக்கத் தெரியணும்."

"எப்படி, எப்படி?"

"முதல்ல மனசை அடக்கணும். அப்புறம் மனசைக் கொண்டு நாக்கை அடக்கணும். புலன்கள்ள மனசு அடங் கினா, ஞானம். நாக்கு அடங்கினா ஆரோக்கியம்."

"நானும் அடக்கறேன். எனக்கு சொல்லிக் கொடுங்க."

"தாராளமா. இந்த மனித சமூகம் நலமா வாழணும்னு தான் நமக்கு முன்னால வாழ்ந்த பல ஞானிங்க தங்கள் வாழ்க்கைல தாங்கள் உணர்ந்ததை ஏடுகள்ள எழுதியே வெச்சுட்டு போயிருக்காங்க. நானும் அதை படிச்சேன், தெளிஞ்சேன். நீயும் படி, தெளிவடை."

"நடைமுறைக்கு அது சாத்யமா பெரியவரே."

"நடைமுறைங்கறது முதல்ல என்ன?"

"நான் நெசவாளி. நெசவு நெய்தாதான் வயிற்றைக் கழுவ முடியும், அதுக்காக தினமும் தறிமேடையில் பத்து மணி நேரத்துக்கு குறைவில்லாம உழைக்கணும். அதுதான் என் நடைமுறை."

"அப்ப மீதி பதினாலு மணிநேரம் இருக்கே?"

"அப்ப நடைமுறை சாத்யமா எனக்கு?"

"ஒரு நாளைக்கு அரை மணி இந்த உடம்பை நீ கவனி அப்புறம் இருபத்து மூன்றரை மணி நேரம் அது உன்னை கவனிச்சுக்கும்."

"அரை மணி என்ன. ஒரு மணி நேரமே ஒதுக்கறேன். நான் என்ன செய்யணும்."

"முதல்ல பிராணாயாமம் கத்துக்கோ. காத்துலதான் ஜீவ சக்தி அதிகம் இருக்கு, அது உன் இதயத்துல நுழைஞ்சு ரத்த ஓட்டத்தை சீர் செய்யட்டும். அப்புறமா மனசை அடக்கி தியானம் பண்ணு.அந்த ரத்தஓட்டம் சீரா ஓடத் தொடங்கும்.

வயித்துல கண்ட கச்சடாவைப் போடாதே. குறிப்பா எண்ணெயை தொடவே தொடாதே. கீரைகளை விடாதே. பழங்களை அதுவும் மரத்துல தானா பழுக்கற பழங்களை நிறைய சாப்பிடு."

அந்த பெரியவர் அவனுக்கு உடல் நல ரகசியத்தை உபதேசித்தார். நடராஜனும் அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

ஒரே மாதம்!

வியர்ப்பது குறைந்தது. கொட்டாவி என்பது அறவே நீங்கியது. மனம் மிகலேசானது. உடம்பு என்பது கப்பலைப் போலவும், அதில் உயிர் என்பது மிதப்பது போலவும் தோன்றியது. அது என்னவோ தெரியவில்லை. அச்ச உணர்வே அறவே அடிபட்டுப் போனது. பசி தாகம் ஏற்படவே இல்லை. மொத்தத்தில் ஆரோக்யம் கூத்தாடத் தொடங்கியது. மலையைக் கூட தூக்க முடியும் என்று மனது நம்பியது. கண்ணிலும் சரி, மனசிலும் சரி ஒரே வெளிச்சம். முகத்திலும் அது தேஜஸாக தெரிந்தது. பேசும்போது பேச்சில் மென்று விழுங்குவது என்ப

தெல்லாம் அடிபட்டுப் போய் வார்த்தைகள் பார்த்துப் பார்த்து நறுக்கிய மைசூர்பாக் துண்டங்கள் போல பிசிறின்றி இனித்தன.

''மனதில் ஒளி உண்டாயின், வாக்கில் அது உண்டாகும்'' என்று பாரதி பாடியது மிகச் சரி என்று புத்தி ஒத்துக் கொண் டது.

ஒரே மாதம், எவ்வளவு மாற்றம்?

அந்த மாற்றத்தோடு அந்த பெரியவரை சந்தித்தவன் பெரியவரே, பெரியவரே என்று கூப்பிடாமல் ''சாமி..'' என்றான். அவரை கடவுளாக கருதத் தொடங்கிவிட்டது அதில் தெரிந்தது. அவரும் மறுக்கவில்லை. அவரிடம் அவன் கேட்டான்.

"சாமி... இந்த ஒருமாசத்துலையே என் உடம்புல எவ்வ ளவோ மாற்றங்கள். மனசுலையும். இதை தொடர்ந்துகிட்டே இருக்கறதுதான் வாழ்க்கையா?" அவர் மீண்டும் சிரித்தார்.

"வானம் எப்படி எல்லையற்றதோ அப்படித்தான் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களும், உனக்கு சொந்தமில்லாத உடம்பில் முன்பு உன் வயிறும் மனசும் ஒரு குப்பைத் தொட் டியாக இருந்தது. நீயும் உன் வயிற்றில் கண்டதைப் போட்டு உறுப்புகளை கசக்கிப் பிழிந்தாய். உன் மனசிலும் இந்த சமூகம் கண்ட குப்பைகளை கொட்டி உன்னை பயம்,

பதட்டம், ஆசை, பேராசை, எச்சரிக்கை, தூக்கம், கலக்கம், சோர்வு என்று பல மாதிரிகளில் வைத்திருந்தது. இப்போது அது எல்லாம் விலகி உன் உடம்பு என்னும் இயந்திரம் ஒழுங்காக இயங்க ஆரம்பித்திருக்கிறது.

உன் மனதிலும் அதனாலேயே தெளிவும் நம்பிக்கையும் தோன்றியிருக்கிறது. கிட்டத்தட்ட நீ இப்போது பள்ளிக்கூடத் தைக் கடந்து கல்லூரிக்கு போகும் ஒருவனாக இருக்கிறாய்" எனறார்.

"அந்தக் கல்லூரியில் நான் கற்றுக்கொள்ள என்ன இருக்கிறது?"

"நிறைய இருக்கிறது. சைக்கிள் ஓட்டக்கற்றுக் கொண்ட வன் ஒரு நாள் இரண்டு கைகளையும் விட்டு விட்டு அதை ஓட்டிப் பார்ப்பதில்லையா. அதே சைக்கிளை சர்க்கஸில் சிலர் தலைகீழாகவும், ஒற்றைச் சக்கரத்தாலும் ஓட்டுவது. படுத்துக் கொண்டு ஓட்டுவது. அதன் மேல் ஏறி நின்று கொண்டு ஓட்டுவது என்று விதவிதமாய் ஓட்டி அதை ஆட்டிப் படைப்பதில்லையா?"

"அந்த மாதிரி இந்த உடம்பையும் மனசையும் ஆட்டிப் படைக்க முடியுமா?"

"ஆட்டிப் படைக்க முடியுமாவா? நீ விரும்பினால் உன் உடம்பை விட்டு வெளியே வந்து அதை அடுத்தவரின் உடல்

போல வேடிக்கை பார்க்க முடியும். நீ விரும்பினால் தண்ணீருக்கடியில் போய் படுத்துக் கொண்டு காற்றின் தயவு இன்றி மின்னல் போல நீந்த முடியும். நீ விரும்பினால் பறக்கலாம்,தண்ணீரிலும் மிதக்கலாம். கண்ணைக் கொண்டே சக்தியை உருவாக்கி ஒரு பொருளை அசைக்கலாம். என்ன தான் முடியாது?"

"நிஜமாகவா..."

"நிஜம்தான். மனிதன்தான் உலகின் உச்ச சக்தி. அவன் அறிவு ஆயிரம் சூரியனைவிட ஒளிமிக்கது. அவன் உடம்பை போல ஒரு டிசைன் செய்யப்பட்ட விஷயம் எங்கே இருக்கிறது சொல் பார்ப்போம். தலைக்கு மேலே கூரை போல முடி, கண்ணுக்கு மேலே இமை, விரல்களுக்கு மேல் நகம். அந்த விரல்களும் கூட பயன்படுத்த தோதான நீளம். எவ்வளவு நடந்தாலும் தேயாத பாதம், உட்காரத் தோதாக புட்டத்தில் கூடுதல் சதை, மடக்கி நீட்ட தோதாக முட்டி, பந்து கிண்ண முட்டு போன்ற உள் மெக்கானிசம்.

உள்ளே மட்டும் எதையும் அனுப்பலாம். ஆனால் உள்ளி ருப்பது தவறியும் வெளியே வராது என்கிற மாதிரி மிகப் பெரிய துவாரமான வாய். அங்கே கூட எண்ணி முப்பத்து இரண்டு பற்கள், வயிறு என்று ஒரு சிறிய அறை. அதில் ஒரு பையைப் போல இல்லாமல் வளைந்து வளைந்து குழல்

போல குடல். உடம்பின் மேல் அணையாத அளவான வெப்பம். ஒரு நொடி கூட கடமையை மறக்காமல் ரத்தத்தை இறைத்தபடியே இருக்கும் இதயம்.

இத்தனையும் கொண்ட எலும்பும் சதையுமான மனித எத்திரம் ஒரே ஒரு துளி சொட்டு இந்திரியத்தால்தான் உரு வாகிறது என்பது எத்தனை பெரிய அற்புதம். ஒவ்வொரு மனிதனுமே ஒரு அற்புதம்தான். அவனைவிட வேறு ஒரு அற்புதத்தை அவனால் உருவாக்க முடியுமா?"

முதலில் பெரியவராய், பிறகு சாமியாய் மாறிவிட்ட அந்த மனிதர் கேட்ட கேள்வி, அவன் மனக்கண்ணை அற்புதமாகத் திறந்தது. இருந்தும் ஒரு கேள்வி கேட்டான்.

"இது மிகச்சாதாரண ஒரு இயற்கைச் செயல். இதற் கெல்லாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தால் ஆச்சரிய பட்டுக் கொண்டே இருக்கலாம். இதில் எதையும் யாராலும மாற்றமுடியாது. இயற்கையையும் மீறி செயல்பட முடியாது என்று சொல்கிறார்களே."

"இப்படிச் சொல்பவர்களது நோக்கம்?"

"உங்களைப் போன்றவர்கள் சொல்வதெல்லாம் பொய் யானது என்பதைச் சொல்வதுதான்."

"அப்படியானால் எது உண்மையானது?"

"இயற்கையை புரிந்து கொண்டு அதற்கேற்ப நடப்பது தான்."

"நானும் அதைத்தானே சொல்கிறேன்."

"அப்படியா... நீரில் மிதக்க முடியும், காற்றில் பறக்க முடியும் என்பதெல்லாம் இயற்கையை புரிந்து கொண்டு நடக்கின்ற விஷயங்களா?"

"இல்லையா பின்னே."

"தக்கைதான் நீரில் மிதக்கும். அது எப்படி மனிதன் தக்கைபோல் ஆக முடியும்."

"கேள்... இப்படி கேள்விகளாக கேள். விடையில்லாத கேள்வி என்றே ஒன்று கிடையாது. உயிரோடு இருக்கும் மனிதனால் மிதக்க முடியாத நிலையில் அவன் சவமாகி விட்டால் உடல் எப்படி மிதக்கிறது என்று யோசி."

"எப்படி?"

"ஒரு கல்லை எறிந்தால் அது போய் விழும் அதே தூரத்திற்கு, ஒரு துணியை வீசி எறிந்தால் போய் விழுமா."

"விழாது... கல் கனமானது. துணி கனம் குறைவானது."

"கனம்தான் காரணமில்லையா."

"ஆமாம்."

"இந்த கனத்தைக் கூட்டிக் குறைப்பதில்தானே எல்லாம் இருக்கிறது."

"நிச்சயமாய்."

"உன்னாலும் உன் எடையை கூட்டியும், குறைத்துக் கொள்ளவும் முடியும்."

"அது எப்படி?"

"இந்த மாதிரி பல எப்படிகளுக்கு விடை சொல்ல ஒருவர் இருக்கிறார். வந்து பார்க்கிறாயா?"

"யார் அவர்?"

"அஷ்டமா சித்துவை அடைந்து விட்ட நாகராஜ போகர் என்று ஒருவர். வெள்ளியங்கிரி மலையில் வசித்து வரு கிறார்."

"அவர் எனக்கு இதற்கு விடை சொல்வாரா?"

"நிச்சயம்... நான் நூற்று இருபது வருடம் கடந்தும் ஆரோக்யமாக வாழ அவர்தான் காரணம்."

"முதலில், எனக்கு அவரை அறிமுகம் செய்து வையுங்கள்."

"வரும் பௌர்ணமிக்கு வா... போய் வரலாம்."

"ஏன் இன்று, இப்பொழுது முடியாதா?"

"அவசரம் வேண்டாம்... நான் கேட்ட கேள்விகள், நீ சொன்ன பதில்கள் எல்லாம் உன்னுள் உன்னை குடைந்து கொண்டே இருக்கும். அதனால் பல கிளைக் கேள்விகள் உனக்குத் தோன்றும். என்னைச் சந்திக்கும் முன் வரை நீ இந்த வாழ்க்கையை வாழ்ந்த விதம், சந்தித்த நொடியில் மாறி விட்டது. மனிதன் எப்பொழுதும் தான் சார்ந்திருக்கும் சூழ்நிலைக்கு ஏற்பவே சிந்திப்பான். பேசுவான், தான் பார்த்த விஷயங்கள், படித்த விஷயங்கள், அனுபவித்த அனுப வங்கள் இவை களைக் கொண்டே அதையும் எடை போடுவான். உணரவும் முயற்சிப்பான்.

இமயமலையைக் காணாத வரை அவன் பார்த்த பழனி மலைதான் அவனுக்குப் பெரிது. இரும்பை விட உறுதியான உலோகத்தை உணராதவரை இரும்புதான் அவன் வரையில் உறுதியானது. எல்லாமே தெரிவதில்தான் இருக்கிறது. தெரிவதும், புரிவதும் சூழலில் இருக்கிறது. உன் சூழல் என் னால் மாறிவிட்டது. இன்னமும் மாறப் போகிறது. என்னை விட நாகராஜபோகரை சந்திக்கும் போது அது இன்னமும் மாறும். மனித வாழ்க்கை பற்றிய உன் அடிப்படையான எண் ணங்கள் அவ்வளவும் பெடிப் பொடியாகிப் போகும் பார்." அந்தப் பெரியவர் சொன்னபடியேதான் பிறகு எல்லாம் நடந்தது. அந்த எல்லாம்?

# 5

***ம**னதால் உடம்பை ஆட்சி செய்யலாம். செய்யவும் வேண்டும். நினைவே செயலாகிறது. அது செயலாவது என்பது ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதத்தில், கால நேரங்களுக்கு ஏற்ப வேறுபடுகிறது. ஒன்றைப் பற்றி நினைக்கும் போதே அதற்கான விதை உள்ளே விழுந்து விரிவடையத் தொடங்கி விடுகிறது.*

*ஒரு வகையில் மனமும் பிரபஞ்சமும் ஒன்றே என்கிற புரிதல் ஒரு கட்டத்தில் நிகழும். பிரபஞ்சம் என்பதை ஒரு நிலமாக, மலைகாடாக, மனித வசிப்பிடமாக நமக்கு உணர்த்துவது எல்லாம் இந்த இடமும், காலமும்தான். இதை நீக்கிக் கொண்டு பார்த்தால் உண்மை தெரியும்.*

*அந்த உண்மைக்குள் இடம், காலம் எல்லாவற்றையும் நாமே வகுப்பது என்பதும் புரியும். நாம்தான் இடம் காலம் இரண்டையும் உருவாக்குகிறோம் என்றால் அதை ஆட்டிப் படைப்பதும் நமக்கு சுலபமாகி விடும்.*

*அஷ்டமாசித்துகளை அடைய நினைப்பவர்களுக்கு இந்த இடமும், காலமும் ஐயம் திரிபற புரியவேண்டும்.*

***ம**லை என்றாலே பசுமைதான். அதிலும் வெள்ளியங்கிரி மலையின் பசுமை ஒரு தினுசானது. விதவிதமான தன்மை

கொண்ட மண்ணும், அதன் தன்மைக்கேற்ப முளைவிட்டு எழுந்து நிற்கும் மரங்களும் இங்கே ஒரு ஆச்சரியம்.

சில மலைக் காடுகளில் கொடிய மிருகக்கூட்டம் நிரம்பி யிருக்கும். மான்கள் இருந்தால் அதை எண்ணி நூற்றுக்கு பத்து புலி உள்ளே இருப்பதை உட்கார்ந்த இடத்தில் சொல்லி விடலாம். தேனடைகள் நிரம்பிக் கிடந்தால் குகைகளில் கரடிக்கூட்டம் வாழ்க்கை நடத்துவதை உறுதிபடச் சொல்ல லாம். கிளிக்கூட்டம் கண்ணில் பட்டாலோ பழமரங்கள் ஏகத் துக்கும் இருப்பதை சத்தியம் செய்தே சொல்லலாம். இதெல் லாம் காட்டின் கணக்கு வழக்கு. இந்த மாதிரி காடுகளில் மூலிகைகள் மண்டிக் கிடந்தால் நிச்சயம் யோகிகளின் கூட்டம் அங்கே இருக்கிறது என்பதும் உண்மை.

பாறைக்குப்பாறை தாவி ஏறிய ஒரு மலைப் பளியனை ஒரு பாறை முனை வெட்டிக்காயப்படுத்தி விட்டது. அடுத்த நிமிடமே சுனை ஒன்றின் ஓரமாக புசுபுசுவென்று வளர்ந் திருந்த தும்பை ஜாதிச்செடி ஒன்றை எடுத்து கசக்கிச் சாற் றைப் பிழிந்து புண்ணின்மேல் விட்டவன் பக்கத்தில் இருந்த ஒதிய மாத்தின் பட்டையை உரித்து அப்படியே ஒரு கட்டும் போட்டுக் கொண்டான்.

பிறகு ஒரு நெல்லி, ஒரு கற்பூரவல்லித்தழை, கொத்து துளசி, நாலு வேம்புப் பிஞ்சுத்தழை என்பதோடு ஆல

மரத்தின் விழுதின் நுனியில் ஈர்க்குச்சி கணக்காய் நீண்டி ருக்கும் அதன் கனி விழுதையும் பறித்து வாயில் போட்டு மென்று விட்டு போய்க் கொண்டேயிருந்தான். மிக அதிக பட்சமாக இரண்டு சூரிய உதயங்களில் அவனது காயம் மழு மழுவென்று சரியாகிவிட்டது.

இதெல்லாம் அல்ப வைத்தியம். அழுகிப்போன தொழு நோய்க்கெல்லாம் மருந்தாக மூலிகைகள் கிடக்கின்றன. அவைகளை அடையாளம் காணத் தெரிய வேண்டும். தெரிந்த சில சாமியார்களும் காட்டைச் சுற்றிக்கொண்டுதான் இருந்தார்கள்.

ஆனால் இவர்களைப் பார்த்தால் சாமியார்கள் என்று யாரும் சொல்லமாட்டார்கள். நமது சினிமாக்கள் சாமியார் களுக்கென்று தப்புத்தப்பாய் தோற்றங்களை அளித்து விட்டி ருக்கின்றன.

தொப்புளைத் தொடும் தாடி, முதுகில் பிரளும் தலை முடி வெள்ளையடித்த மாதிரி விபூதி நெற்றி, உடம்பிலும் நீண்ட காவி அங்கி, கையில் கமண்டலம் என்றெல்லாம் அது வேஷம் போட்டுக் காட்டிய விதங்களில் இங்கே சாமியார்கள் இல்லை.

சாதாரண நாலு முழவேட்டி, தோளில் ஒரு கோடாரி. பார்க்க விவசாயியைப் போன்ற தோற்றம். இந்த தோற்றத்தில்

நிறைய பேர்கள் சுற்றிக் கொண்டிருந்தார்கள். பார்த்தால் அவர்களிடம் நமது பெட்டியை தூக்கிவரச் சொல்லி கேட் போம். அப்படி இருப்பார்கள்.

ஒருவர் லிட்டில் ரேஞ்சர்கள் குடித்து விட்டுப் போட்ட துண்டு சிகரெட்டை எல்லாம் எடுத்து புகைப்பார். ரேஞ்சரும் அவரைக் கூப்பிட்டு "காலை அமுக்கி விடு, கையை அமுக்கிவிடு" என்பார். அந்த மனிதரும் மறுக்காமல் கைகாலை அமுக்கிவிட்டு ரேஞ்சரிடம் ஒரு எடுபிடி போல நடந்து கொள்வார்.

ஒரு சமயம் இப்படித்தான் செம்பட்டை என்று சொல்லிக் கொண்டு ஒருவன், திவாகர் என்கிற ரேஞ்சர் சொன்னதை யெல்லாம் செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் அந்த ரேஞ் சரை கரடி பிடித்துக் கொண்டு விட்டது. ரேஞ்சர் போட்ட சப்தத்தில் காட்டு மரங்கள் எல்லாம் கூட நடுங்கி இலை களை உதிர்த்தன.

செம்பட்டையும் சப்தம் கேட்டு ஓடிப்போய்ப் பார்த்தான். கரடியும் ரேஞ்சரும் கட்டிப்புரண்டு கொண்டிருந்தார்கள். குறுக்கில் புகுந்த செம்பட்டை அந்த கரடியைப் பிடித்து இழுத்துப் போட்டு ஒரு முறை முறைத்தான். அது பார்க்கக் கூடாத ஒருவனைப் பார்த்து விட்ட மாதிரி திரும்பி ஓடத் தொடங்கியது.

திவாகர் என்னும் அந்த ரேஞ்சர் ஆச்சரியத்தின் உச்சிக்கே போய்விட்டார்.

''செம்பட்டை... என்னய்யா பண்ணே? உன்னைப் பார்த்த உடனேயே கரடி ஓடிப்போச்சே...'' என்று கேட்டார்.

"எனக்கே ஒண்ணும் புரியலீங்க. விடுங்க எப்படியோ அது ஓடிருச்சுல்ல... அதுபோதும்" என்றான். அதன்பிறகு ஒரு சமயம் காட்டில் ஒரு ஆழமான சுனைக்குள் திவாகரின் வைர மோதிரம் விழுந்து விட்டது. அதன் மதிப்பு கிட்டதட்ட ஒண்ணேகால் லட்சம் என்று திவாகர் பைத்தியம் பிடித்த மாதிரி புலம்பத் தொடங்கி விட்டார்.

அதைக்கேள்விப்பட்ட செம்பட்டை அவர் எதிரிலேயே சுனைக்குள் இறங்கினான். மிக ஆழமான சுனை, பல யானைகள் தண்ணீர் குடிக்க இறங்கி விட்டு மீளமுடியாமல் செத்துப் போயிருக்கின்றன.

அப்படி ஒரு அச்சமூட்டும் சுனை. அதில் சாதாரணமாக இறங்கிய செம்பட்டை ஒரு பதினைந்து நிமிட நேரம் வரை மேலே வரவேயில்லை.

பதினைந்து நிமிடமெல்லாம் யாராவது மூச்சு கட்ட முடியுமா என்ன?

திவாகர் முடிவே செய்து விட்டார். செம்பட்டை உள்ளே

சேற்றில் சிக்கி பரலோகம் போய்விட்டதாக. ஆனால் பதி னாறாவது நிமிடம் அவன் ஒரு தாமரைமொட்டு உள்ளிருந்து மேலே வந்து இதழ் விரிக்கின்ற மாதிரி மிதந்தான். வாய் வழியே தண்ணீரை உறிஞ்சி அப்படியே ஒரு ஃபவுண்டன் போல் பீறிட்டான்.

பின் நிதானமாக நீந்தி கரை ஏறி திவாகரிடம் வைர மோதிரத்தையும் தந்தான்.

திவாகர் திகைத்த திகைப்பிற்கு அதன் பின் ஒரு அளவே இல்லாமல் போய் விட்டது.

"செம்பட்டை, எப்படிய்யா இதை கண்டு பிடிச்சே, நீ மனுஷனா இல்லை பிசாசா?" என்று திகைப்பு குறையாமல் கேட்டார்.

"நீங்க எப்படி நினைக்கறீங்களோ அப்படி எஜமான்" என்றான்.

அதன்பின் இன்னொரு சம்பவம்.

செம்பட்டை காட்டில் எதற்கோ குழி ஒன்றைத் தோண்டிக் கொண்டிருக்கும் போது வெள்ளியங்கிரி சிவனை தரிசிக்க, ஒரு பிராம்மணர் கட்டுக் குடுமியோடு சென்று கொண்டிருந் தார்.

அவர் செம்பட்டையை பார்த்து விட்டு ஓடிவந்து "சாமி

என்ன இது? நீங்களா இப்படி கூலி வேலையெல்லாம் செய்வது. தப்பு சாமி, தப்பு. கொண்டாங்க சாமி.. கொண் டாங்க..." என்று மண் வெட்டியைப் பிடுங்க முயன்றார்.

அதையும் திவாகர் பார்க்க நேர்ந்தது. அதன்பிறகுதான் செம்பட்டையிடம் ஏதோ சிறப்பு இருப்பதாக உரைக்கத் தொடங்கியது.

"செம்பட்டை... அது யாரு?"

"அவருங்களா...அவரு கோயமுத்தூர்ல ஒரு பிள்ளையார் கோவில்ல மணி ஆட்ற அய்யருங்க."

"அவர் பிராம்மணர்ங்கறது தெரியும்.அவர் ஏன் உன்னைப் பார்த்து சாமின்னாரு... உன் கால்ல கூட விழப் பார்த்தாரே."

"அதுங்களா, அவர் என்னை ரொம்ப பெருசா நினைக் கறாருங்க. அதான் சேதி."

"அதான் எனக்கும் புரியல."

"எனக்கே புரியாதப்ப உங்களுக்கு எப்படிங்க புரியும்." இப்படி பேசிக் கொண்டிருக்கும்போது மலைக்கு சாமி கும்பிட வந்த ஒருவனை கருநாகம் தீண்டிவிட்டதாகச் சொல்லி தூக்கிக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர் சிலர்.

அதைப்பார்த்த செம்பட்டையும் "இதே வந்துடறேங்க" என்று அவர்களை நோக்கி ஓடி கடிபட்ட அந்த மனிதனின்

நாடியை முதலில் பிடித்துப் பார்த்தான்.

நல்லவேளை துடிப்பு இருந்தது.

ஆனால் நாகத்தின் விஷம்தான் மகா கொடியதாயிற்றே. அது ரத்தத்தில் வேகமாக கலந்து விறுவிறுவென்று மூளையை நோக்கி ஏறிக் கொண்டிருந்தது. ஜீவ அணுக் களை செயலிழக்க வைத்து இயத்துடிப்பை நிறுத்துவதில் நாகத்தின் விஷத்திற்கு இணையாக ஒன்றைச் சொல்லவே முடியாது. ஒரு மைப்புள்ளி அளவு விஷம் போதுமானது உடம்பின் மொத்தமான ஐந்து லிட்டர் ரத்தத்தையும் கன்னங்கரிய விஷத் தண்ணீர் ஆக்கிவிடுவதற்கு.

செம்பட்டை மின்னல் போல செயல்பட்டு கடிபட்ட இடத் தில் வாயை வைத்து ரத்தத்தை உறிஞ்சி விஷத் துளியை தனியே பிரித்து வாயில் இருந்து துப்பினான்.

அதன்பின் அங்கும் இங்குமாய் சொடக்கு போட்டு சில இடங்களை நீவி விட்டு உச்சி மண்டையில் நான்கே நான்கு முடியைப் பிடித்து ஒரு இழு இழுக்க கடிபட்ட மனிதன் ஏதோ தூங்கி எழுந்த மாதிரி எழுந்து உட்கார்ந்தான்.

எல்லோருமே மிகமிக ஆச்சரியப்பட்டனர்.

செம்பட்டை அதை லட்சியமே செய்யாமல்''ஒரு நிமிஷம்'' என்று பக்கத்து புதருக்குள் நுழைந்தவன் முப்பதாவது நொடி

கையில் ஒரு மூலிகை இலையுடன்தான் திரும்பி வந்தான். அதை கடிபட்டவனிடம் தந்து நல்லா வாய்ல போட்டு மெல்லு என்று கொடுக்க அவனும் மறு பேச்சு பேசாமல் அப்படியே செய்தான்.

"உனக்கு நாகதோஷம் இருந்து அது இப்ப நீங்கிடிச்சு. தொண்ணுத்தாறு வயசுவரை நீ இருப்பே, புதன்கிழமை பொறந்த உனக்கு கணக்கு நல்லா வருமே?" என்றும் கேட்க அவனுக்கு வியப்பான வியப்பு.

"நான் புதன்கிழமை பொறந்தது உனக்கு சாரி, உங்க ளுக்கு எப்படித் தெரியும்" அவன் ஆச்சரியம் குன்றாதபடி கேட்டான்,

"என்னவோ தோணுனிச்சு கேட்டேன். இது ஒரு விசயமா. பாத்து போய்ட்டு வாங்க.'' என்றபடியே எழுந்தான். அவன் ஆசையாகவும் நன்றியோடும் ஒரு நூறு ரூபாயை எடுத்துத் தர "அய்ய, இதெல்லாம் எனக்கு எதுக்கு யாராச்சும் ஏழை பாழையை பாத்தா சாப்பாடு வாங்கிக் கொடுங்க. கிளம்புங்க'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி வந்தான்.

ரேஞ்சர் அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுதே அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

செம்பட்டை ஒரு சாதாரண மனிதனில்லை, மிக அசா

தாரணமான ஒருவன் என்று!

அதற்கேற்ப உச்சகட்டமாக ஒரு சம்பவமும் அவர் கண் எதிரிலேயே நடந்தது.

களைத்துப் போய் படுத்து தூங்கி விட்ட செம்பட்டையை திடீரென்று வந்து ஆக்ரமிக்கத் தொடங்கிய மழை எழுப்பும் போல தெரிந்தது. ரேஞ்சரும் தன் அலுவலகத்தில் இருந்தபடி ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அவன் துளி கூட நனையாதபடி ஒரு யானை எங்கிருந்தோ அவனருகே வந்து தன் நான்கு கால்களுக்கும், பருத்த உடம்புக்கும் கீழே அவன் உடம்பு மறைவாக இருக்கிற மாதிரி நின்று கொண்டது.

ரேஞ்சர் திவாகர் இந்தமுறை தீர்மானமே செய்துவிட்டார். செம்பட்டை மனித உருவில் நடமாடும் ஒரு சித்தன் என்று. அடுத்த நொடி அவர் உடம்பு நடுங்கியது. அவனை வேலைக் காரனாக நடத்திய சம்பவங்கள் வரிசையாக ஞாபகத்தில் வந்து எவ்வளவு பெரிய பாவத்தை நீ செய்துவிட்டாய் என்று கேட்காமல் கேட்டன. மழை நின்று யானையும் விலகிய பிறகு அவனருகே வந்து எழுப்பியவர், கைகளைக் கூப்பிக் கொண்டு நின்றார்.

"என்னய்யா... எதுக்கு என்னைப் போய் கும்பிடநீங்க?"

"சாமி.. என்னை மன்னிக்கணும். நீங்க ரொம்ப எளி

மையா இருக்கற ஒரு அசாதாரண மனுஷர். உங்க அருமை தெரியாம நான் உங்கள ஒரு சாதாரண வேலைக்காரனா நடத்திட்டேன் என்னை மன்னியுங்க'' என்று காலில் விழுந் தார். செம்பட்டை சிரித்தான். எந்த பதிலும் சொல்லவில்லை.

"எப்படி சாமி இப்படி எல்லா விஷயத்தையும் சாதார ணமா எடுத்துக்க உங்களால முடியுது?" கேட்டார்.

"இந்த உலகத்துல எல்லாமே சாதாரணம்தானேங்க."

"என்னது எல்லாமே சாதாரணமா?''

"ஆமாம்தானே. இந்த பூமியில எல்லாம் சாதாரணமானது தான். ஒரு விஷயத்துக்கு மதிப்பைக் கொடுக்கறதும், எடுக்க றதும் மனசுதானே?"

"என்ன சொல்றீங்க?"

"மனசுதான் எல்லாம்கறேன்."

"ஆமாம் மனசுதான் எல்லாத்துக்கும் காரணம். ஒத்துக் கறேன். ஆனாலும் ஆசை வைக்காமலோ இல்லை நேசம் வைக்காமலோ இருக்க முடியலையே."

"இருக்கணும். எதுவும் பெரிசு இல்ல.. எதுவும் சின்னதும் இல்லை."

"அதனாலதான் நான் உங்களை வேலைக்காரனா நடத் தினப்ப கூட உங்களுக்கு வேதனையா இல்லையா?"

"நீங்க என்னை எப்படி நினைச்சா, எனக்கென்ன. நான் என்னைப் பத்தி என்ன நினைக்கறேங்கறதுதானே முக்கியம்."

"அப்ப மதிப்பு மரியாதைங்கறதெல்லாம்."

''போதையான விஷயங்கள். அதை பெரிசா நினைக்கக் கூடாது.''

"அப்ப எதுதான் பெருசு?"

"நான் யார்னு நான் தெரிஞ்சுக்கறதும். நீங்க யார்னு நீங்க தெரிஞ்சுக்கறதும்தான் பெரிசு."

வேதாந்திகளே இப்படித்தான் பதில் சொல்வார்கள். அந்த பதிலை செம்பட்டை சொன்ன பிறகு ரேஞ்சருக்கு அந்தக் காட்டின் மேலேயே பார்வை மாறிப்போய் விட்டது.

காட்டில் யாரைக் கண்டாலும் மரியாதையாகத்தான் அணுகினார். யார் சித்தன். யார் எத்தன் என்று இனம் பிரிந்து கண்டு கொள்ளவே முடிவதில்லையே.

வெள்ளியங்கிரி மலை, சாமி சன்னதிக்கு வெளியில் கூட ஒரு பிச்சைக்காரர். யாரிடமும் எதையும் கேட்காமல் மௌன மாய் அமர்ந்திருப்பார். ஒரே அழுக்குத் தோற்றம். ஆனால் வாசியோகம் அறிந்த நபர் என்பார்கள்.

மாசம் பத்தாயிரம் டாலர் சம்பளம் தந்து அமெரிக்காவில் அவரை வைத்துக்கொண்டு வாசியோகப் பயிற்சி முகாம்

நடத்த சிலர் ஆசைப்பட்டார்கள்.

ஆனால் வெள்ளியங்கிரி மலையை விட்டு வரமாட்டேன் என்று கூறிவிட்டார்.

இப்படி வெள்ளியங்கிரி மலைக் காட்டில் திரியும் பலருக் குப் பின்னே பல அமானுஷ்யங்கள்.

புரிந்துகொள்ள முயற்சி செய்தால் மண்டை காய்ந்து போகும். குழப்பம்தான் மிஞ்சும். பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும்.

ஏழு மணி வரை தூங்கி அதன்பின் எழுந்து பெட் காபி சாப்பிட்டு டிவியில் வணக்கம் தமிழகம் பார்த்து. தினமலர் படித்து. ஹிந்துவைப் புரட்டி, பின் ஷ்வரில் குளித்து. டைனிங் டேபிளில் அமர்ந்து இட்லி, பூரி, சப்பாத்தி என்று வாய்க்கு ருசியாக மசாலாக்கள் மணக்க சாப்பிட்டு, பின் ஒரு பிரீஃப் கேசுடன் ஆபீஸ் காரில் ஆபீசுக்கு போய், அங்கே நிறைய மெய்யும் பொய்யுமாய் கணக்கெழுதி 'வாட் ஐ ஸே..' என்றோ 'தட் மீன்ஸ்' என்றோ நான்கு வார்த்தைக்கு மூன்று வார்த்தை ஆங்கிலம் பேசி, ரகசியமாக அழகான பெண் உதவியாளர் களை மனதால் ரசித்து. முடிந்தால், முத்தமிட்டு கற்பழித்து. அதுதான் ஆண்மை என்றும் சொல்லிக் கொண்டு மாலை யானால் வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பாமல் பாருக்கு போய் பார்ட்டிகளில் கலந்து கொண்டு தண்ணீர் அடித்து

போதையில் மிதந்து, ஷேர் மார்க்கெட் பற்றி கொஞ்சம், ஆபீஸ் மார்க்கெட் நிலவரம் பற்றி கொஞ்சம் என்று பேசி விட்டு வீடு திரும்பி டையையும், ஷூவையும் கூட கழற்றாமல் ஏ.சி. அறையில் பொத்தென்று போதையோடு விழுவதும், பிளாட் வாங்குவது. ஷேர் வாங்குவது, தங்க மாளிகையில் பிரேஸ்லெட் வாங்குவது என்று செலவழிப்பதும் தானே வாழ்க்கை இங்கே?

இதெல்லாம் ஒரு லெவலுக்கு மேல் போனவர்களுக்கு போகமுடியாத மிடில் கிளாசுகளின் கணக்கே வேறு! இவர் கள் கிட்டடத்தட்ட வண்டிக் குதிரைகள் மாதிரிதான். இந்தக் குதிரைகள் கொஞ்சம் லாட்டரி சீட்டு வாங்குவார்கள். அதில் பனம் வந்து கோடீஸ்வரனானால்தான் உண்டு என்பார்கள். யாரிடமாவது கடன் வாங்கியிருந்தால் அது மறந்து விடும். ஆனால் யாருக்காவது கடன் கொடுத்திருந்தால் அது ஞாப கத்தில் இருந்து கொண்டேயிருக்கும்.

ஒண்ணாம் தேதி சம்பளம் கழுத்தைப் பிடிக்கும். இருந் தும் ஒரு யமஹா பைக் வாங்கி அசுரனாட்டம் ஊரைச் சுற்று வதும், சிகரெட்டுகளை வாங்கி டப்பா டப்பாவாய் புகைப்ப தும், சைட் அடிப்பதும், இல்லாவிட்டால் காதலிப்பதும், கல்யாணம் செய்து கொண்டு செக்ஸ் சுவாரஸ்யம் குறைந்த நிலையில் மனைவியோடு சண்டை போடுவதுமாய் திரி

வார்கள்.

கண் எதிரில் ஒரு கொலையையே பார்த்தாலும் நமக் கெதுக்கு ஊர் வம்பு என்று ஒதுங்கிப் போய் விடுவதும் ஆனால் தனக்கொரு நியாயம் கிடைக்காதபோது இந்த நாடு உருப்படாது என்று சபிப்பதும்தான் இவர்கள் வாடிக்கை.

இந்தியா முழுக்க இப்படித்தான் ஜனங்கள் இருக்கி றார்கள். இவர்களுக்கெல்லாம் சினிமாவும், டிவியும் மிக உயர்ந்த விஷயங்கள். அதில் நடிப்பவர்கள்தான் கடவுள்கள். சினிமா பார்ப்பது. அதைப்பற்றி பேசுவது இரண்டு தான் பிறவியின் நோக்கம்.

போனால் போகிறது என்று பழனி, திருப்பதி, திருவேற் காடு என்று கோவில்களுக்கு போவார்கள். அந்த சாமியெல் லாம் கூட இவர்கள் வரை ராஜாக்கள் மாதிரிதான்.

அந்த சாமிகளைப் பார்த்து போற்றி போற்றி என்று ஜால்ரா போட்டு வரம் கேட்பதுதான் இங்கே பக்தி.

"சாமி அவன் நாசமாய் போகணும். நான் மட்டும் நல்லா இருக்கணும், அஸ்ஸாம் லாட்டரி இந்த மாசமாவது விழ ணும். விழுந்தால் உனக்கு பாலாபிஷேகம். கொஞ்சம் கவனிச்சுக்கோ" என்றெல்லாம் வேண்டிக் கொள்வது ரொம்ப ரொம்ப சகஜம். சொல்லப் போனால் அதுதான் இங்கே பக்தி.

பக்தியாவது புடலங்காயாவது, சாமி என்பதே ஒரு கற்பனை, தன்னம்பிக்கையில்லாதவனின் கைத்தடிதான் அந்த கற்பனை. மனுஷன் குரங்கில் இருந்து வந்தவன். குரங்கு எந்த கோயிலுக்குப் போகிறது? அது கும்பிடாததால் அதற்கு என்ன குறை வந்துவிட்டது. எல்லாம் பொய்.

இந்த உலகில் எதுவும் பாவமில்லை. எதுவும் பொய்யுமில்லை. எப்போதும் சந்தோஷமாக இருக்க முயற்சி செய்வதும், சந்தோஷமாக இருக்கவும்தான் பிறப்பே.

கஞ்சா அடித்தால் இன்பமா அடி.

கிழவியானாலும் புணரக் கூப்பிட்டால் போ. புணரு.

பிணத்தைக் கூட மசாலா போட்டு நன்கு சமைத்து சாப்பிடு. எதுவும் தப்பு இல்லை. எதுவும் பாவமில்லை என்று ஒரு கூட்டம்.

இப்படிப்பட்ட மனிதக் கூட்டத்தில் இருந்து அது வேண்டும், இது வேண்டும் என்று வரும் பக்திமான் கூட்டத்துக்கெல்லாம் பிச்சைக்காரர்கள் போலவும், விறகு வெட்டிகள் போலவும் மிகச்சாதாரணமாக இருக்கும் சில செம்பட்டை மாதிரி மனிதர்கள் பற்றி என்ன பெரிதாகத் தெரிந்து விடப் போகிறது?

எப்படியோ தெரிந்தாலும் அது ஆபத்தாகி விடுகிறது.

ரேஞ்சர் திவாகர், செம்பட்டைக்கு ஒரு கோயில் கட்டி கும்பிடாத குறை. இதனால் செம்பட்டை அவர் கண்ணிலேயே படுவதில்லை.

திவாகரும் எங்கே எங்கே என்று தேடிக் கொண்டிருக்கிறார். யாரைப் பார்த்தாலும் காலில் விழுகிறார். வெள்ளியங்கிரி மலைக்காட்டின் இப்போதைய நிலைப்பாடு இதுதான்.

சரி இனி?

# 6

*ஒரே ஒரு ஏக்கரில் ஒரு தோட்டம். முதலில் ஒரு பக்கம் ரோஜாவையும் ஒரு பக்கம் மல்லிகையையும், ஒரு பக்கம் பொதினாவையும், ஒரு பக்கம் பாகற் காயையும், ஒரு பக்கம் சக்கரை வள்ளிக்கிழங்கையும் ஒரு பக்கம் வாழையையும், ஒரு பக்கம் மாம்பழத்தையும் பயிர் செய்தார் ஒருவர்.*

*எல்லாமே நன்கு விளைந்து செழித்து நின்றன. முதலில் கட்டாந்தரையாக இருந்தது. தோண்டிய போது அன்றும் சரி இன்றும் சரி கல்லும் மண்ணும்தான் வருகிறது.*

*ஆனால் விதைகளைப் போடவும் அந்த விதைகள் அந்த பூமிக்குள் இருந்து ரோஜா. மல்லி, பாகற்காய், சக்கரை*

வள்ளிக்கிழங்கு, வாழை. மா என்று சகலத்தையும் விறு விறுவென்று உருவாக்கி கொட்டிக் குவித்து விட்டது.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவம், ஒவ்வொரு வண்ணம், ஒவ்வொரு சுவை. எதுவும் யாராலும் ஆகாயத்தில் இருந்து போடப்படவில்லை. பூமிக்குள் தான் இருந்து வந்தது.

ஆனால் நேரடியாக தோண்டிப் பார்த்தாலோ கல்லும் மண்ணும்தான் வருகிறது. இது என்ன மாயம்? இது எப்படி சாத்தியம்? இது அற்புதமில்லையா? இந்த பூக்கள், கனிகள் எங்கே இருந்தன. எப்படி அவை வந்தன?

அவை வருவதற்கு சில காலம் தேவைப்பட்டது. அந்தக் காலம் என்பது எது? ஒரு ரோஜா விதை பூத்து பூவைத்தர ஒரு மாதமாயிற்று. அதாவது முப்பது நாள், அதாவது எழு நூற்று இருபது மணி நேரம். அதாவது நாற்பத்து மூன்றா யிரத்து இருநூறு நிமிடம், இருபத்து ஐந்து லட்சத்து தொண்ணுற்று இரண்டாயிரம் நொடிகள் ஒரு மைப்புள்ளி அளவு விதை ஒரு சதுர அடி நிலம் இருபத்தைந்து லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் நொடிகள் இருந்தால் ஒன்றுக்கு பத்தாக ரோஜாப் பூக்கள் தயார். இந்த இருபத்து ஐந்து லட்சத்து தொண்ணுற்று இரண்டாயிரம் நொடியில் அந்த ரோஜா எங்கிருந்து எப்படி வந்தது. அது அதற்கு முன் எங்கே இருந்தது?

அணிமா, மஹிமா பற்றி சிந்திப்பவர்கள் இப்படி கேட்டுக் கொண்டு யோசித்தால் முதலில் குழப்பமாக

*இருந்தாலும், மிக நிதானமாக தெளிவோடு யோசிக்க யோசிக்க விடை கிடைக்கும்.*

*ரோஜா என்று ஒன்று ஒரு முழுப்பூவாக உடனே உருவாகி வந்துவிடவில்லை. அது காம்பு. மொட்டு என்று ஒவ்வொரு மணித்துளிகளால் வளர்ந்துதான் முழுப் பூவானது. அப்படி வளர அது தனக்குத் தேவையானதை வெட்ட வெளியில் திரியும் காற்றிடம் இருந்தும், ஒளியிடம் இருந்தும், நீரிடம் இருந்தும்தான் பெற்றிருக்க வேண்டும்.*

*அப்படியானால் வெட்ட வெளிக் காற்றில் அதன் ஒளியில் (அ) இருளில், நீரில்தான் அந்த பூவின் அனைத்து பாகங்களும் இருக்கிறது என்பதும் அதை ஒன்று திரட்டத்தான் அதற்கு இருபத்து ஐந்து லட்சத்து தொண்ணுறாயிரம் நொடி தேவைப்படுகிறது என்பதும் புரிகிறதல்லவா?*

*பூ மட்டுமா. உலகில் உள்ள அனைத்தும் இப்படி வெளியாகிய காற்றில் ஒளியில் நீரில் என்று பஞ்ச பூதங்களிடம் இருந்தே பெறப்படுகின்றன. மனித உடலும் அதன் திசுக்களும் கூடத்தான்.*

*இந்த பஞ்ச பூதத்திடம் இல்லாதது இல்லை. சர்க்கரை, சம்பங்கி, முளைக்கீரை, புகையிலை, பிரட் சாண்ட் விட்ச், சக்திமசாலா. பீஸா, பின்லேடனின் மேலங்கி, வாஜ்பாயின் காலணி. உங்கள் தலைமுடித் தைலம். எனக்கான நகம் வெட்டி என்று எல்லாம் எல்லாம் பஞ்ச பூதத்திடம்தான் இருக்கின்றது.*

***அதை முறையாகப் பெற விதை என்றும், நிலம் என்றும், நேரம் என்றும் ஒன்று வேண்டும். இந்த மூன்றும் இருந்தால் எது தேவையோ அது தயார். இந்த மூன்றோடும் தான் உலகம் ஆதாம் ஏவாள் காலத்தில் இருந்து உயிர்களோடு சுழன்று வருகிறது. நேற்றும் இதுதான் நிலை. நாளையும் இதுதான் நிலை.***

*இந்த மூன்றை உங்களால் ஆட்டிவைக்க முடியுமா? முடிந்தால் நீங்கள் அஷ்டமா சித்தின் அடிப்படையான பாலபாடத்தை கற்றுக்கொண்டு விட்டீர்கள் என்று பொருள்!*

***ப***த்துமணி சுமாருக்கு காரமடை பஜார்த் தெருவில் நட ராஜனிடம் கையைப் பிடித்துக்கொள்ளச் சொல்லி நடக்க ஆரம்பித்த அந்த பிச்சைக்காரரைப் போன்ற சாமி, நடராஜ னிடம் ஏதாவது பேசு என்றது?

"உங்ககிட்ட என்னத்த சாமி பேசறது. யோகம் பழக ஆரம்பிச்ச பிறகு பேசறதை விட யோசிக்க வேண்டியதும் மௌனமா புரிஞ்சுக்க வேண்டியதும்தான் அதிகம் இந்த பூமி யில இருக்கற மாதிரி நான் நினைக்கறேன்" என்றான் நட ராஜன்.

"சரியான பதில். பேச்சுங்கறது என்ன தெரியுமா?" அந்த சாமி கேட்டது.

"வேண்டாம் சாமி. நான் அதுக்கு ஒரு அர்த்தம் சொல் வேன். அப்புறம் நீங்க ஒண்ணு சொல்வீங்க. அப்புறம் நான் சொன்னது ஒண்ணுமே இல்லேங்கற மாதிரி ஆயிடும்" என் றான் நடராஜன்.

"பரவாயில்ல. பேச்சுன்னா என்ன? சும்மா சொல்லு" சாமி நடந்தபடியே சீண்டியது.

"இப்ப நீங்க கேட்கற கேள்வி. நான் சொல்ற பதில், இதெல்லாம்தான் பேச்சு" நடராஜனும் தயங்கியபடியே சொன் னான்.

"இதுதான் பேச்சுங்கறது எனக்கும் தெரியும். ஆனா இதைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? அதைச் சொல்."

"வேண்டாம் சாமி. நீங்களே சொல்லிடுங்க, உடனே அவர் சிரித்தார். சிரித்துவிட்டு, "சப்தத்தை பார்க்க முடியுமா?" என்று கேட்டார்.

"அது எப்படி முடியும். கேட்கத்தான் முடியும்?"

"அப்ப பார்க்க முடியாதுங்கறே."

"சாமி ஈ.... என்னை ஏன் இப்படி சோதிக்கிறீங்க. அதை பார்க்க முடியும்னு ஒரு பைத்தியக்காரன் கூட சொல்ல மாட்டானே?"

"சரி... பார்க்காம வாழறது பெரிசா. கேட்காம வாழறது

பெரிசா?'' அவர் எதற்கோ அடிபோட்டார்.

"என்ன சாமி இது கேள்வி."

"இல்ல. பார்க்காம வாழறது குருட்டு வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்குல்ல. அது பெருசா, இல்லை கேட்காம வாழற செவிட்டு வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கே அது பெரிசான்னு கேட்டேன்."

"பார்க்காம கூட வாழ்ந்துடலாம் சாமி. ஆனா கேட்காம ஒண்ணை எப்படி புரிஞ்சுக்க முடியும். நாம நினைக்கறதை சொல்லவும் கொள்ளவும் பேச்சுதானே ஆயுதம்?"

"இந்த பேச்சு போய்ச் சேர்ற இடம் எது?''

"காது.''

"காதோட வடிவம் எப்படி இருக்குன்னு யோசிச்சிருக் கியா?''

"காதோட வடிவம்... காதோட வடிவம்..''

''என்ன யோசனை.. ஓம்னு ஒரு எழுத்து இருக்கே, அது மாதிரி இல்ல நம்ம காது."

"ஆமாம்... ஆமாம்..."

"ஓம் காரத்துலதான் எல்லாம் இருக்குன்னு சொல்றதுக்கு இப்ப அர்த்தம் புரியுதா?''

''சாமி ஈ..ஈ..ஈ''

அவர் எதற்காக அந்த பேச்சை ஆரம்பித்தார் என்பது அவனுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

"அது மட்டுமல்ல; இந்த சப்தம் இருக்கே சப்தம் இது இரண்டு விதம். ஒண்ணு சங்கீதம். இன்னொண்ணு நாராசம். சப்தத்தை அழகா கையாண்டா சங்கீதம், அதாவது இசை. நம்மை அப்படியே இசைய வைச்சு மயக்கி தூங்கவும் வெச்சுடும். இதே சப்தத்தை தப்பா கையாண்டா நாராசம் ஒரு வெடி சப்தம் எவ்வளவு பேர் காதை செவிடாக்கி யிருக்குது இல்லையா?''

"ஆமாம்... ஆமாம்."

"ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்காம, அதே சமயம் பக்கத்துலயும் இல்லாம பல ஆயிரம் மைலுக்கு அப்பால இருந்தாலும் தொடர்பு கொண்டு உணர்வுகளை பகிர்ந்துக் கலாம் இல்லையா?''

"ஆமாம்"

"அப்ப நம்ம புலன்கள்ல பேசற சக்தியும் கேட்கற சக்தியும் ரொம்ப உன்னதமானதுதானே?"

''நிச்சயமா?"

"உன்கிட்ட ஒரு நல்ல விஷயம் சொன்னா நீ சந்தோஷப்

படறே, கெட்ட விஷயம் சொன்னா நீ வருத்தப்படறே. எல் லாம் சப்தம்கற பேச்சாலதானே?''

"சந்தேகமென்ன சாமி..."

"இந்த உலகத்துல மனித உயிர்களுக்கு நடுவுல மற்ற உயிர்கள்கிட்ட இல்லாத மிக உயர்ந்த அதே சமயம் ஒரே வேறுபட்ட விஷயம் இது ஒண்ணுதான் இல்லையா?"

"ஆமாம் சாமி... அதுல சந்தேகமே இல்லை."

"உலகத்தோட மிக உன்னதமான விஷயமும் சப்தம் தான்னு செல்லலாமா?"

"தாராளமா..''

"அதனாலதான்... இறைவனை உணரக் காரணமான மந்திரங்களை எழுத்துல வைக்காம வேறு வடிவங்கள்ல வைக்காம, சப்தமாகிய பேச்சுல வெச்சாங்க.

பேச்சாகிய சப்தம்தான் சாவி.

இந்த சாவிதான் அறிவுங்கற பூட்டைத் திறக்குது. இந்த சாவியில சில மந்திரச் சாவிகள் இருக்கு. திறக்கற விஷயம் இருக்கே அது ரொம்ப அசாதாரணமானது."

அந்த மனிதரின் விளக்கம் நடராஜனுக்கு பிரமிப்பைத் தந்தது.

இந்த உலகில் யோசிப்பதற்குதான் எத்தனை அசாதாரண விஷயங்கள்?

ஆனால் இது எதைப்பற்றியும் சிந்திக்காமல் ரஜினியின் பாபா பற்றியும், டாக்டர் பிரகாஷின் லீலைகள் பற்றியெல் லாமும் யோசித்தும். பேசியும் நேரத்தை அநியாயமாக வீணாக்கி விட்டோமே என்று நடராஜன் வருத்தப்பட்ட போது ஒரு அதிகபட்ச ஆச்சரியம் அவனுக்கு காத்திருந்தது.

அவனும் அந்த சாமியும் வெள்ளியங்கிரி மலைக்காட் டுக்குள் நடந்தபடி இருந்தார்கள். பல பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் கையில் ஒரு கம்பை ஊன்றிக் கொண்டு அந்த நெடிய மலையின் முண்டு முடிச்சுகளில் ஏறியபடி இருந்தனர்.

"சாமீ....."

"என்ன நடராஜா?"

"என்ன சாமி.. நாம இப்ப வெள்ளியங்கிரி மலைல இருக்கற மாதிரி தெரியுதே?"

"இருக்கும்... இருக்கும்."

"எப்படி சாமி? காரமடை எங்க இருக்குது. வெள்ளியங் கிரி எங்க இருக்குது. எப்படி வந்தோம்? பஸ்சுல வந்தாகூட இரண்டு மணி நேரம் ஆவுமே சாமி."

"எப்படியோ வேகமா வந்து சேர்ந்துட்டோம் இல்லையா?"

"அது சரி, அந்த வேகம் எங்க இருந்து சாமி வந்துச்சு? எனக்கு வேகமா வந்த மாதிரியே தெரியலியே, ஓடக்கூட இல்லை. நடந்துதான் வந்தோம்."

"ஒருவேளை காரமடைக்கும் வெள்ளியங்கிரி மலைக்கு மான தூரம் சுருங்கிப் போயிடிச்சோ என்னவோ?"

"என்ன சொல்றீங்க.. தூரம் எப்படி சுருங்கும்?"

"இந்த கேள்விக்கெல்லாம் விடையை ஒரு நாள்ல தெரிஞ்சுக்க முடியாது. ஒரு பூ பூக்கவே முப்பது நாப்பது நாள் தேவைப்படுது. அந்த மாதிரி சில ரகசியங்கள் புரிய சில காலம் ஆகும்."

"பிரமிப்பா இருக்கு சாமி. இப்படி ஒரு வழி இருக்கறது மட்டும் மனுஷங்களுக்கு தெரிஞ்சுட்டா கார் வேண்டாம், பஸ் வேண்டாம், விமானம் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்."

"அதனாலதான் தேவலோகத்துல இதெல்லாம் இல்லை போல இருக்கு."

அவர் பதிலில் புதிதாக ஒரு பொறி.

"சாமி..ஈ..ஈ.." அவனுக்குள்ளும் அதிர்வு. இவர் பெரிய பெரிய விஷயங்களை சாதாரணமாகச் சொல்கிறார். ஆனால் தன்னால்தான் புரிந்து கொள்ள முடியவில்லை என்று தோன்

றியது.

"என்ன யோசிக்கறே... என்னடா இதை எப்படி புரிஞ்சுக் கறதுன்னா?''

"ஆமாம் சாமி.''

"அதுக்கான அறிவை வளர்த்துக்கோ. அப்ப தன்னால புரியும்.''

"எப்படி? எப்படி?''

"இப்ப துணிமணியை எதால அளக்கறோம்?"

"மீட்டர் அளவால?''

ஏன் அதை தராசுல எடை போட்டோ இல்லை லிட்டர் அளவால மொண்டு பார்த்தோ அளக்கறதில்ல.?"

"அது எப்படி முடியும்? துணிங்கறது நீளமும் அகலமு மானது. நீள அகலத்தை மீட்டர் அளவாலதான் சரியா அளக்க முடியும்.''

"அப்ப துணிமணிக்கு மீட்டர், அரிசி பருப்புக்கு தராசு, பால், எண்ணெய்க்கு லிட்டர்னு பொருளுக்கு தகுந்த அளவு கோலால அளந்தாதானே சரியாக அளக்க முடியும், இல் லேன்னா தப்புத் தப்பாதானே வரும்?"

"ஆமாம் சாமி.''

"அப்படித்தான் மனசு, அதைச்சார்ந்த விஷயங்களும் அதை அளக்கற அளவுகோலே வேற. அந்த அளவு கோலால அளந்தாதான் புரியும். இல்லாட்டி எல்லாம் பொய் யிங்கற மாதிரி தப்புதப்பாதான் தெரியும்."

"அதை எப்படி சாமி அளக்கறது?"

"போகப் போகத் தெரிஞ்சுக்குவே. அதுக்குதான் ஒருத் தருக்கு முதல்ல தான் யாருங்கறது தெரியணும்கறது. உடனே நான்னா, நான் நடராஜன்னு உன் அப்பா அம்மா வெச்ச பேரை சொல்லாதே. அது அடையாளத்துக்கு வெச்சது. நட ராஜனுக்குள்ள என்ன இருக்கு. அது எங்க இருந்து வந்தது? எப்படி வந்தது? இப்படிப்பட்ட கேள்விக்கு விடை தேடு. அப்ப அந்த அளவுகோலும் எதுங்கறது தானா தெரிய வரும். அப்ப அதால எடைபோட்டா எல்லாம் சரியா புரியும்."

நடராஜனுக்கு அவர் பதில் புரிந்த மாதிரியும் இருந்தது புரியாத மாதிரியும் இருந்தது.

பொதுவில் ஞானம் சம்பந்தப்பட்ட விஷயங்களே இப்படித் தான். இது இப்படி இருப்பதால்தான் இதை புரிந்து கொண்டு எதை பிடுங்கப் போகிறோம் என்று யாரும் இதற்கு முயற்சிப் பதே இல்லை.

இதெல்லாம் சுலபமாக இருக்க வேண்டாமா. சே.. என்ன ஞானம் இது? சலித்துக் கொண்டான்.

ஆனாலும் ஒரு வெளிச்சம்.

காரும், பஸ்சும், விமானமும், ரயிலும் தேவர்களிடம் ஏன் இல்லை என்று அவர் சொல்லாமல் சொன்ன பதில் அவனுக்கு எதனாலோ மிகப் பிடித்துப் போனது?

இந்த மாதிரி சாதனங்களின் உதவியில்லாமலே தூரங் களை சுலபமாக கடக்க வழி இருக்கிறது. அதனால்தான் தேவர்கள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் தோன்றி யதாக புராணக்கதைகளில் இருக்கின்றன.

ஆனால் அதை நாம் பொத்தாம் பொதுவாக சரபுருடா கற்பனை என்றோ, மாயவிளையாட்டு என்றோ சொல்லி ஒதுக்கி விடுகிறோம்.

புரிந்தால் விஞ்ஞானம்! புரியா விட்டால் மாயம்!

அவனே அவனுக்குள் சொல்லிக் கொண்டான். இந்த கேள்வியும் பதிலுமான இரவுப் பொழுதில் மலையிலும் நடை ஒரு குறிப்பிட்ட இடத்தில் முடிந்து போனது.

அது நாகராஜபோகரின் சமாதி அமைந்துள்ள பிருந் தாவன தோட்டம். மேலே மலைக் கோவிலுக்கு போகும் வழியில் ஒரு ஓரமாக இருந்தது.

அந்த பிச்சைக்கார சாமியும், நடராஜனும் பிருந்தாவனத் துக்குள் நுழைந்தார்கள். மேலே மலை ஏறியபடி இருக்கும்

பக்தர்களில் சிலர் அந்த பிருந்தாவனத்தில் இளைப்பாறுவதற் காக அங்கங்கே படுத்துக்கிடந்தார்கள். சமாதியும் ஒன்றும் பெரியது இல்லை.

அதை சாரங்கபாணி என்ற ஒருவர்தான் பராமரிக்கிறார். சமாதியில் விளக்கேற்றி பூப்போட்டு வழிபடுவதுதான் அவர் வேலை. சமாதிமுன் அணையாத ஒரு ஹோமகுண்டம் வேறு.

நாகராஜ போகருக்கு தயிரன்னமும் அகத்திக் கீரையும் மிகப்பிடித்த உணவு. எனவே அதை அங்கே வைத்து படைத்துவிட்டு, வீட்டுக்கும் எடுத்துச் செல்வார்கள். படைத்த பின் அது பிரசாதம், அதைச் சாப்பிட்டால் நோய் நொடி அண்டாது. வீட்டிலும் சோற்றுத் தரித்திரம் ஏழு தலை முறைக்கு தலை காட்டாது. இதெல்லாம் நம்பிக்கை.

"சரி நடராஜா.. நீ போய் சாமிக்கு படைச்சிட்டு வா.." என்றார் சாமி.

"நீங்க வரலையா சாமி."

"நீ போ... நான் கொஞ்சம் கட்டையைக் கிடத்தறேன் களைப்பா இருக்கு."

"உங்களுக்கு கூட களைப்பா?"

"நானும் மனுஷன்தானேப்பா."

அவர் அப்படி கேட்க அவன் அவரை ஒரு மாதிரி

பார்த்தான்.

"ஏன் அப்படி பார்க்கறே. நான் மனுசன் இல்லையா."

"இல்ல சாமி. எங்க மாதிரி கைகால் இருந்தா நீங்க மனுஷனா. நீங்க மனுஷ வாழ்க்கையை ஜெயிச்ச ஒருத்தர்."

"சரி சரி... போ... போய் கும்புட்டுட்டு வா. நாளைக்கு காலைல விடியறதுக்குள்ள நீ ஊருக்கு போகணும். பொழப்ப கவனிக்கணுமில்ல?"

"இல்ல சாமி... இப்ப அதெல்லாம் எனக்கு பெரிசா தெரி யல. காலேஜிக்கு அப்ளிகேஷன் போட ஆசைப்படற ஒருத் தனை எல்.கே.ஜியில சேர்ந்து படிக்கச் சொன்னா அவனுக்கு எப்படி இருக்கும்? அப்படி இருக்கு எனக்கு."

"நீ என்ன சொல்றே..."

"சாமி... நீங்க யார்னு எனக்குத் தெரியணும். அப்படியே நான் யாருன்னும் எனக்கு தெரியணும். நான் எப்படி கார மடைல இருந்து இந்த வெள்ளியங்கிரி மலைக்கு சொடக்கு போடற நேரத்துல வந்து சேர்ந்தேன், தெரியணும் சாமி எனக்கு?"

அவன் அந்த ஆச்சரிய அனுபவத்தை புரிந்துகொள்ளத் துடித்தான்.

"போ... போய் முதல்ல உன் குருநாதரை கும்புட்டுட்டு

வா... அவர்கிட்டையே சாமி எனக்கு நான் யாருங்கறது தெரியணும்னு சொல்லி வேண்டிக்க."

"அப்படி வேண்டிகிட்டா அவர் எனக்கு என்னை தெரிய வைப்பாரா சாமி."

"பெரிய விஷயத்துக்கு ஆசைப்படறே, ஆனா சராசரி மனுஷங்க மாதிரி சந்தேகமும் படறியே நடராஜா."

"நான் சாதாரண மனுஷன்தானே சாமி."

"சாதாரண மனுஷன் சாதாரண ஆசைதான் படணும். அசாதாரணமானவன்தான் பெரிய ஆசைபடலாம். நீ யார்..?"

அவர் மடக்குகிறாரா, இல்லை புரிய வைக்கிறாரா என்பது புரியவில்லை. இருந்தும் வேகமாக தனது பெரிய ஆசை புரிய வேண்டும் என்கிற வெறியில் அவர் வாயை அடைக்க "நான் அசாதாரண மனுஷன் சாமி.." என்றான் உடனே.

"அப்படியா...?" அவர் ஒரு மாதிரி சிரித்தபடியே கேட்டார்.

"என்ன சாமி... ஒரு மாதிரி அப்படியாங்கறீங்க."

"அசாதாரணமானவங்களுக்கு சுயநலம், பயம் இதெல் லாம் இருக்காது. உன்கிட்ட இருக்கே?"

"என்னது... சுயநலமும் பயமும் என்கிட்ட இருக்கா."

"இல்லேங்கிறியா?" திரும்பவும் அவர் மடக்குகிறாரா இல்லை புரிய வைக்கத்தான் அப்படி கேட்கிறாரா என்று தெரியாவிட்டாலும் அவரை வெற்றி கொள்ள வேண்டும் என்கிற வெறியில் "இல்லே சாமி.. எனக்கு பயம் கிடையாது. சுயநலம் கிடையாது'' என்றான்.

''நிஜமா?''

"நிஜமாதான்."

"சத்தியமா?"

"சத்தியமாத்தான் சாமி.''

"அப்ப உன் குருநாதர் சமாதிக்கு முன்னால இருக்கற ஹோம குண்டத்துல போய் தைரியமா குதி பார்ப்போம்."

அடுத்த நொடி "ஐய்யோ செத்துடுவேனே" என்றது உதடு.

"பார்த்தியா பயந்துட்டே."

"சாகறதுக்கு பயப்பட்டுதானே தீரணும்."

"அப்ப சராசரி மனுஷனால பெரிய ரகசியங்களையும் புரிஞ்சுக்க முடியாதுங்கறதையும் புரிஞ்சுக்கோ."

அவனுக்கு உடனே புரிந்து போயிற்று. வெறும் வார்த்தை களில் வாய்ப்பந்தல் போட்டு அவரிடம் இருந்து எதையும்

புரிந்து கொள்ளமுடியாது என்று. முகமும் வாடிப் போயிற்று.

"என்னப்பா..."

"ஒண்ணுமில்ல சாமி, நீங்க என்னை ரொம்பவே படுத் தறீங்க."

"நான் படுத்தறேனா."

"இல்லையா பின்னே... ஒரு அற்புத அனுபவத்துக்கு என்னை ஆளாக்கிட்டு அது எப்படின்னு கேட்டா அதுக்கு பதில் சொல்லாம கண்ட கேள்வி கேட்டு சாகச் சொன்னா என்ன அர்த்தம்."

"ஏன் செத்தா என்ன குறைஞ்சா போயிடுவே."

''என்ன சாமி கேள்வி இது. செத்தா குறைஞ்சு போக மாட்டேன் சாமி. மறைஞ்சே போயிடுவேன்."

"அப்படி வா வழிக்கு, எங்க மறைவே."

"எங்கன்னா. இந்த கேள்விக்கு மட்டும் யாருக்குமே விடை தெரியாது சாமி.''

"அப்படியா..."

"என்ன அப்படியா. இப்ப என் குருநாதரையே எடுத்துக் குங்க. சமாதியானார். மண்ணோடு மண்ணா மறைஞ்சு போயிடலையா.''

"மறைஞ்சு போறதுன்னா என்ன..."

"இல்லாம போறது."

"இல்லாம போன ஒருத்தரையா, இருக்கறதா நினைச்சு கும்பிட வந்துருக்கே."

நடராஜன் அவரை வெறித்துப் பார்த்தான். வசமாக மாட்டிக் கொண்ட மாதிரியும் இருந்தது. இல்லாத மாதிரியும் இருந்தது.

"என்னப்பா... பதில் சொல்லு."

"நான் இப்ப உங்ககிட்ட சரண்டர். நீங்களே இதுக்கு பதில் சொல்லிடுங்க."

அவர் மர்மமாய் புன்னகை பூத்த அதே நேரம் அந்த அமெரிக்கப் பெண் லிண்டா, கிரிதரன், கார்த்திகேயனுடன் சமாதி அமைந்துள்ள பிருந்தாவனத்துக்குள் நுழைந்து கொண் டிருந்தாள்!

# 7

அணிமாவோ, மஹிமாவோ, இல்லை இலஹிமாவோ, கரிமாவோ எந்த ஆற்றலாக இருந்தாலும் அதைப் புரிந்து கொள்வதும், செயல்படுத்துவதும் மனது தான். ஆனால் இந்த மனதோ உடம்பிடம் மடங்கிக் கிடக்கிறது. அதிலிருந்து மீண்டு உடம்பை ஆளமுடிந்தவர்களே சித்தியை வசப்படுத்த முடியும்.

ஒன்று என்பது இரண்டு என்று ஒரு தத்துவம் உண்டு. அதாவது எந்த ஒரு விஷயத்திற்கும் இருபக்கம் இருக்கும். இதையே அப்படிக் கூறுவார்கள். மனிதன் ஒரு வனானாலும் உடல், ஆன்மா என்கிற இரண்டின் சேர்க்கைதான் மனிதன். இதில் ஆன்மா விதை என்றால் அதன் பஞ்சபூத சேர்க்கையே உடல், ஆன்மாவே மனமாய் செயலாற்றுகிறது. இதை உணர்ந்து உடலைப் பிரித்துக் கொள்ளுதல் வேண்டும். உடலாகிய பிண்டம் புரிந்தால் அண்டம் புரியும். அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும், பிண்டத்தில் உள்ளதே அண்டத்திலும் உள்ளது என்பதும் புரியும்.

மனம் நினைப்பதையே செயல்படுத்தும், நினைக்கும் எதையும் செயல்படுத்தும், சில செயல்கள் காலத்தால் நிகழும். சில உடனடியாக நிகழும். துரிதமும், தாமதமும்

***மனதின் வேகத்தைப் பொறுத்தது. வேகம் என்பது காலம் சார்ந்தது. காலத்தை கட்டி ஆள்பவர்களால் சர்வத்தையும் சாதிக்க முடியும்.***

**கி**ரிதர் நீண்ட தூரம் நடந்த களைப்பால், அப்படியே சமாதி முன் உள்ள கல்மண்டபத்தை பார்த்த நொடி அதில் அமர்ந்தான். அவனோடு சேர்ந்து அமர்ந்தார் கார்த்திகேயன். ஆனால் லிண்டா கையில் கேமராவுடன் சுற்றி ஒரு பார்வை பார்த்தாள்.

அவளுக்கு நடை களைப்பு தெரியவில்லை.

ஒரு தோளில் கேமரா. ஒரு தோளில் ஜோல்னா, அதில் பேப்பர்கள், ஹேண்டி டேப்ரிக்கார்டர் போன்ற பத்திரிகை யாளர்களுக்கே உரிய சரக்குகள். நிறைய ஃபிலிம்ரோல்கள், பேட்டரிகள், பிஸ்கட் பாக்கெட்டுகள், மினரல் வாட்டர் பாட் டில்கள் எல்லாம் ஒரு தனிப்பையில் போட்டு முதுகில் பெல்ட் போட்டு பள்ளிக்கூடப் பிள்ளைகள் போல கட்டிக் கொண்டி ருந்தான் கிரிதர். அதை அப்படியே கழற்றி கைகாலை உதறிக் கொண்டான்.

"லிண்டா... ஐ ஆம் கெட்டிங் ஸோ டயர்ட்.. இவ்வளவு தூரமெல்லாம் எந்த காலத்துல நடந்துருக்கோம்" என்று ஒரு புலம்பலும் புலம்பினான்.

கார்த்திகேயனிடம் அப்படிப் புலம்பக் கூட சக்தி இல்லை.

ஆனால் கண்ணிரண்டும் மிகக் கூர்மையாக நாகராஜபோகர் சமாதியைப் பார்த்துவிட்டு லிண்டா பக்கம் திரும்பியது.

ஒரே ஒரு ட்டியூப் லைட் வெளிச்சம். அதில் ஸ்கைடரில் பறந்து மகிழும் மனிதர்கள் போல சில பூச்சிகள், ஊடாடும் வெள்ளியங்கிரி மலையின் குளிர் காற்று.

"லிண்டா... நீ எய்ம் பண்ணி வந்த டெஸ்டினேஷன் பாய்ன்ட் இதுதான். உன்னை சந்திச்சதா சொன்ன நாகராஜ போகரோட மஹாசமாதி அதோ..."

அவன் கை நீண்டது. லிண்டாவும் பார்த்தாள்.

"அவர் இறந்துட்டதா நான் சொன்னப்ப நீ அதை நம்பலை. இப்ப என்ன சொல்லப்போறே?'' கேட்டார்.

லிண்டாவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. கிரிதரும் வாயைக் கிண்டினான்.

"அங்கிள் கேட்கறாருல்ல. பதில் சொல்! நான் நினைக்க றேன். நம்ம அமெரிக்கன் இண்டியன்ஸ்ல யாரோ உன்னை ஃபூல் ஆக்க நாகராஜ போகர் வேஷத்துல வந்துருக்காங் கன்னு.''

அப்போதும் லிண்டாவிடம் பதிலில்லை. எதற்கும் ஒரு சுற்றுச்சுற்றி வருவோம் என்று சமாதி அமைந்துள்ள பிருந்தா வனத்தை நோக்கி நடந்தாள்.

ஒரு கோவில் கருவறைபோல அது வடிவமைக்கப்பட்டு முன்னால் ஒரு பிரார்த்தனைக் கூடம்.

அதில் நாகராஜ போகரின் பெரிய படம்.

அதைப் பார்த்தவள் தன் ஜோல்னாவில் இருந்த அமெரிக் காவில் எடுத்துக் கொண்ட படத்தை எடுத்துப் பார்த்தாள். அச்சு அசலாக அவரேதான்.

குழப்பம் கூட ஆரம்பித்தது.

நடுவில் சாரங்கபாணி என்னும் பிருந்தாவனப் பாது காவலர் சற்றே கெந்தி நடந்தவராய் அவளைக் கடந்து சமாதி அமைந்துள்ள கர்பகிரகத்திற்குள் நுழைந்து, அங்கே எரிந்த படி இருக்கும் விளக்குகளைத் தூண்டி சற்று எண்ணெயும் விட்டு விட்டு வெளியில் வந்தார். அவர் செயலைப் பார்த்த படியே லிண்டா கர்பக்கிரகம் முன் போய் நின்றாள்.

அவரும் அவளை ஏறெடுத்தார். இவ்வளவு நடக்கும் போது கல்மண்டபத்தில் கிரிதரும், கார்த்திகேயனும் அப்ப டியே படுத்து விட்டனர். அவர்களுக்கு எதிரில் மரத்தடியில் தான் நடராஜனும் அந்த பிச்சைக்கார சாமியாரைப் போன்ற வரும் மௌனமாக அமர்ந்து கொண்டிருந்தனர்.

நிறைய கேள்விகளை கேட்டு புரிந்து கொள்ள சிரமமான பதில்களால் உண்டான களைப்போடு நடராஜன் அமைதி

யாக அமர்ந்திருந்தான்.

பின் என்ன நினைத்தானோ எழுந்து தான் கொண்டு வந்திருந்த தயிர் அன்னத்தையும், பால் அன்னத்தையும் கீரைக் கடையலையும் எடுத்துக் கொண்டு சமாதி சன்னதி நோக்கி சென்றான்.

சாரங்கபாணி லிண்டாவுடன் பேசிக் கொண்டிருந்தார். அவரது அரைகுறை ஆங்கிலம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளும் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

"இதுதான் நாகராஜபோகர் சமாதியா?"

"ஆமாம்மா..."

"அப்ப சாமி உயிரோட இல்லையா?"

"என்னம்மா இது கேள்வி. உயிரோட இருக்கறவங்களுக்கு எதுக்கும்மா சமாதி."

"அப்ப இது யார்?" லிண்டா புகைப்படத்தைக் காட்ட கையில் அன்னப் பிரசாதங்களுடன் நடராஜனும் எட்டி ஒரு பார்வை பார்த்தான்.

ஆச்சரியமாக இருந்தது. நாகராஜபோகர்தான்.

"அட நம்ம ஸ்வாமி"

"அதுல சந்தேகமில்லையே."

"இல்லை. இவர் நாகராஜபோகர்தான். ஆமாம் இவர் எப்படி உங்க கூட..."

"போன மாசம் இவர் அமெரிக்காவுல என்னை வந்து பார்த்தார். அப்ப எடுத்துகிட்ட படம்தான் இது."

"போன மாசமா?"

"ஆமாம்... என்னை நம்புங்க."

"எப்படி... எப்படிம்மா வரமுடியும், ஸ்வாமி மஹாசமாதி ஆகி அஞ்சு வருஷம் ஆயிடுச்சே."

"இதையேதான் மிஸ்டர் கிரிதரும், கார்த்திகேயனும் சொன்னாங்க. ஆனா சாமி என்னை வெள்ளியங்கிரி மலைல வந்து பார். நான் உனக்கு நிறைய யோக ரகசியங்கள் பத்தி சொல்றேன்னு சொன்னார்."

சாரங்கபாணி என்கிற அந்தப் பெரியவருடன் நடராஜனும் அதிர்ந்து போனார்கள்.

நடராஜனுக்குள் ஏற்கனவே ஏராளமான குழப்பம். லிண் டாவின் பதில் அதில் கலக்கலையே உருவாக்கியது.

"ஆமாம் நீங்க யாரும்மா."

"நான் ஒரு அமெரிக்க பத்திரிகையாளர். இண்டியன் மித் பற்றி ஸ்டடி பண்ண வந்துருக்கேன்."

"அது சரி... சாமியா வரச்சொன்னார்."

"ஆமாம்... சீ மை பாஸ்போர்ட், விசா."

லிண்டா மளமளவென்று தனது பூர்வீகத்துக்கான ஆதா ரங்களை அடுக்கத் தொடங்கினாள்.

"என்னமோம்மா... எல்லாம் ஒரே புதிரா இருக்கு. இதுக்கு முந்தி கூட சிலர் சாமியை நாங்க இமய மலைல பார்த்தோம் பழனி மலைல பார்த்தோம்னு சொன்னாங்க. நான்கூட வேர யாரையோதான் பார்த்ததா சொல்றதா நினைச்சேன் ஆளா இப்ப போட்டோவோட பார்க்கும்போது என்னத்தை சொல்றது சாமிதான் இதுக்கு பதிலைச் சொல்லணும்."

"இங்க வேற யாராவது இந்த பேர்ல இருக்காங்களா.." அவள் நடைமுறை சாத்யங்களையே ஆராய வேண்டும் என் கிற மாதிரி கேட்டாள்.

"எனக்குத் தெரிஞ்சு இல்லம்மா. ஆனா இந்த மலையே ஒரு கோவில்தான். இருந்தாலும் இந்த கோவிலுக்குள்ள நிறைய போலிச் சாமியார்கள் நுழைஞ்சிட்டாங்க. ஆன்மீகம் பற்றி ஆனா ஆவன்னா கூட தெரியாம, நான் அதைப் பண் ணுவேன் இதைப் பண்ணுவேன்னு சொல்ற போலிகள் நிறைய பேர இருக்காங்க. அவ்வளவு ஏன் இந்த பிருந்தா வனத்துலையே ஒருத்தர் நான்தான் நாகராஜபோகர்ங்கற சித்தரோட அசல் சிஷ்யன், இந்த பிருந்தாவனத்தை பராம

ரிக்கச் சொல்லி சாமி என் கனவுல வந்து சொன்னதா சொல்லி ரீல் விட்டு திரியறார். ஆனா இந்த போட்டோவுல இருக்கறது அவர் இல்லை. இவர் வேற ஒருவர்."

சராங்கபாணி விளக்கிவிட்டு சமாதி பக்கம் திரும்பி கை கூப்பினார். முகத்திலும் இனம் புரியாத கலக்கம். நடராஜன் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

பின் நடராஜனைப் பார்த்த அவர் "வா தம்பி, இந்த பௌர்ணமிக்கும் சாமிக்கு பிரசாதம் கொண்டு வந்துருக் கியா?" என்று கேட்டுக் கொண்டே அவனிடம் இருந்து பிரசாதத்தையும் வாங்கி சமாதி உள்ள சன்னதிக்குள் நுழைந் தவர் அதை அங்கே வைத்து படைத்து விட்டு திரும்ப எடுத்து வந்து தந்தார்.

லிண்டா அதைப் பார்த்துவிட்டு கேட்டாள். "வாட் ஈஸ் திஸ், இதெல்லாம் என்ன?"

"பிரசாதம்மா..."

"அப்படின்னா..?"

"ஹோலி ஃபுட்..."

"ஹோலி ஃபுட் எதுக்கு?"

"இப்படி சாமிக்கு பிடிச்சதை படைக்கறது இங்க வழக் கம்மா."

"அவர் இதை எல்லாம் வந்து சாப்பிடுவாரா?'' லிண்டா தர்ம சங்கடமான கேள்வியைக் கேட்டாள்.

"அவர் சாப்பிட மாட்டாரும்மா. அவருக்கு படைச்சதை நாம சாப்பிட்டா நமக்குதான் அது நல்லது."

"எப்படி?''

"என்னம்மா நீங்க? இப்படி கேள்வியா கேக்கறீங்க. எனக்கு பதில் தெரியலம்மா. இங்க இதுதான் வழக்கம்."

சாரங்கபாணியின் பதிலில் சற்று சலிப்பும் கலந்து வெளிப் பட்டது.

"நோ... நீங்க இப்படி சொல்லக் கூடாது. இந்தியன் கல்ச் சர்ல வீட்டு வாசல்ல கோலம் போடறதுல இருந்து, நெற்றி வகிட்டுல பொட்டு வெச்சுக்கறது வரை ஒரு மீனிங் இருக் குன்னு சொன்னார் சாமி. ஆனா நீங்க தெரியலைன்னு சொல்றீங்க. இதுகூட தெரியாம எப்படி நீங்க இங்க இருக் கீங்க."

கேள்வியா அது? சாரங்கபாணிக்கு பொட்டில் வலித்தது. ஆனால் நடராஜன் அதை மிக ரசித்தான்.

"சாமி... அவங்க கேட்கறதும் சரிதானே. பதில் சொல்லத் தெரியலேன்னு சொல்லி மாட்டிகிட்டீங்களே."

நடராஜனும் சேர்ந்து சாரங்கபாணியின் காலை வாரினான்

சாரங்கபாணியின் முகம் உடனே அனலில் வாட்டிய கத்தரிக் காயைப் போல் ஆகி விட்டது.

"தம்பி நடராஜா. வந்தியா கும்பிட்டியான்னு போய்கிட்டே இருக்கணும். இவங்க எகனைக்கு மொகனை எதையாவது கேட்பாங்க. அதுக்கெல்லாம் பதில் சொல்லிகிட்டிருக்க முடியுமா?"

அவரிடம் பதிலுக்கு ஆத்திரம் பீறிட்டது.

"அப்படி இல்ல சாமி... எனக்கே இந்த சந்தேகம் ரொம்ப நாளா உண்டு... சாமிக்கு பிடிச்சதை படைக்கறதுக்காக காரமடைல இருந்து நான் இதை சுமந்துகிட்டு வரேன். அப்படி சுமந்துகிட்டு வந்ததை அவர் சாப்பிட்டாதானே எனக்கும் திருப்தியா இருக்கும்."

"அட என்ன நீ சாமி சமாதியாயிட்டார். அவர் எப்படி வந்து சாப்பிடுவார். புரியாம பேசறியே."

"அப்ப அவர் இல்லேன்னு சொல்லாம சொல்றீங்களா."

"நீ வாயைக் கிண்டாம புறப்படு. இந்தப் பொண்ணு வேறு ஒரு போட்டோவைக் காட்டி எனக்குள்ள பீதியை உருவாக்கிடுச்சு. யாராவது நம்ம சாமி வேஷம் போட்டுகிட்டு அமெரிக்கா வரை போய் பித்தலாட்டம் பண்ண ஆரம்பிச்சுட்டாங்களான்னு தெரியலியே."

சாரங்கபாணியிடம் கவலை வேறு விதமாக வெளிப் பட்டது.

லிண்டா அதற்கு மேல் எந்தக் கேள்வியும் அவரிடம் கேட்கவில்லை. திரும்பி கல் மண்டபத்துக்கு வந்தாள். கிரிதர் கேட்டான்.

"என்ன லிண்டா. என்ன சொல்றான் அந்த ஆள்?"

"நத்திங். இங்க யாருக்குமே எதுவும் தெரியல கிரி. இன்க் ளுடிஸ் நீ, உன் மாமா எல்லாருமே எந்த நம்பிக்கையும் இல்லாதவங்களா இருக்கீங்க.

ஈவன் இங்கையே இருக்கறவருக்கு கூட எதுவும் தெரி யலை. இங்க அர்த்தம் இல்லாமயே நிறைய விஷயங்கள் இருக்கு. இது பெரிய கொடுமை. சாமியார்கள்ள கூட போலி சாமியார்கள் நிறைய இருக்காங்கன்னு அவர் சொன்னது எனக்கு பெரிய ஷாக்."

"அதுதான் உண்மை. ஒரு ஃபேக்டரி கட்டி பிசினஸ் பண்ணி சம்பாதிக்கறதை விட கோவில் கட்டி அருள்வாக்கு சொல்லி சம்பாதிக்கறது இங்க சுலபம். அதுக்கு இங்க மதிப்பும் கூட."

"எப்படி இப்படி இருக்க முடியுது. உங்க மதிப்பே உங் களுக்குத் தெரியலியே. யோகா, ஞானம் எல்லாம் எவ்வளவு

பெரிய விஷயங்கள் தெரியுமா?"

"அட..! நீ என்னமோ இண்டியன் சித்தா கல்ச்சர் பத்தி கரை கண்டவ மாதிரி பேசறியே, லுக், எல்லாம் ஹம்பக். இங்க யாருக்கும் எதுவும் தெரியாது. ஆனா எல்லாம் தெரிஞ்ச மாதிரி பேசுவாங்க. அதனாலதான் இண்டியா ஒரு டர்ட்டி கண்ட்ரியாவே இருக்கு. ஜெனரலா இண்டியான்னா வாட்டர் பிராப்ளம், ஜாதி சண்டை, கோமணம் கட்டிகிட்டு திரியற பிளட்டி பிச்சைக்கார சாமியார்களோட ஒரு பூமிங்கற மாதிரிதான் உங்க யூ.எஸ்ல கூட ஒரு தாட் இருக்கு. அதுதான் உண்மை.

இதை நான் ஆரம்பத்துலயே சொன்னா உன் தாய் நாட்டை பத்தி இவ்வளவு கேவலமா பேசறியே நீன்னு சொல்வேன்னு தான் நான் எதுவும் சொல்லலை. இப்ப பார்த் தேல்ல. யாருக்கும் எதுவும் தெரியாது. அவ்வளவும் ஃப்ராட், ஃப்ராடுல பெரிய ஃப்ராட் சாமி பேரால பண்ற ஃப்ராட்தான், அதுல எங்க ஆளுங்களை அடிச்சுக்க முடியாது. இதை நீ எழுது."

கிரிதர் குமுறி விட்டான். கார்த்திகேயன் கேட்டபடியே படுத்திருந்தார்.

"அங்கிள் வாட் யூ ஸே..." அவள் அவர் பக்கம் திரும்பினாள்.

"நத்திங்."

"இப்படி சொன்னா எப்படி அங்கிள்."

"வேற என்ன பண்ணச் செல்றே. இங்க உனக்காகத்தான் நாங்க வந்துருக்கோம். ஒரு பொய்யை நீ தெரிஞ்சுக்க இவ்வளவு தூரம் வந்திருக்க வேண்டாம். யோகா,ஞானான்னு என்னென்னவோ சொன்னே... இருக்கலாம். அதெல்லாம் ஒன்ஸ் அபான் ஏ டைம். இப்ப இங்க இருக்கறவங்களுக்கு ஞானமெல்லாம் பெருசு இல்ல. கஜானாதான் பெருசு.

ஒவ்வொரு இண்டியன் மேலையும் ஆவ்ரேஜா ஐய்யாயிரம் ரூபாய் கடன். புதுசா வேலை வாய்ப்பே கிடையாது வேலைல இருக்கறவங்களைக்கூட வி.ஆர்.எஸ்ல போகச் சொல்லி துரத்தறாங்க. குடிக்கற தண்ணிக்கு சண்டை போட்டுக்கறோம். கும்புடற சாமிக்கு சண்டை போட்டுக்கறோம். காலடில இருக்கற கன்யாகுமரில இருந்து உச்சியில் இருக்கற கார்கில் வரை ஒரே சண்டைதான்.

பட்டப்பகல்ல பல ஆயிரம் பேர் பார்க்க கொலை நடக்குது. கொலை செய்யப்பட்டவன் ஒரு சமூக சேவகன், பெட்டிஷன் எழுதிப்போட்டு தப்புகளை சுட்டிக் காட்றதுதான் அவன் வேலை, அவனையும் கொன்று சமூக சேவைன்னே யாரும் ஆசைப்படக் கூடாதுங்கற மாதிரி மிரட்டிட்டு போவாங்க இங்க... கொலை செய்தவங்களையும் பிடிக்க

மாட்டாங்க.

பயந்து வாழணும், எனக்கென்னன்னும் இருக்கணும். ஒர்ஸ்ட் கண்ட்ரிம்மா! நிஜமா, சாமியோ, இல்ல சித்தரோ இருந்தா இப்படியா விடுவாங்க?

உலகத்துலையே பெரிய கோவில் திருப்பதி, அங்க கூட காசு கொடுத்தா ஒரு கவனிப்பு, கொடுக்கலேன்னா ஒரு கவ னிப்பு அது தெரியுமா உனக்கு?

வெரி வெரி ஓர்ஸ்ட் கண்ட்ரி இது. பேசாம மூணாம் உலக யுத்தம் வந்து அணுகுண்டு போட்டு, டோட்லா ஒழிச்சுக் கட்டிடலாம். யூ சீ.. அப்படித்தான் நடக்கப் போகுது பார்."

கார்த்திகேயன் எங்கோ ஆரம்பித்து எங்கெங்கோ போய் விட்டார்.

"அங்கிள்" லிண்டா சற்று காட்டமாக காதைப் பொத்திக் கொண்டாள்.

"என்னம்மா.."

"நீங்க சொல்ற எல்லாமே எல்லா கண்ட்ரியிலையும் இருக்கு. ஜஸ்ட் ஒரு ஃபுட்பால் மேச்ல ஜப்பான் ஜெயிச் சுடுச்சுன்னு ரஷ்யால கார்களைக் கொளுத்தறாங்க. ஒரு விமானத்தையே விட்டு மோதி வேர்ல்ட் ட்ரேட் சென்ட ரையே சாம்பலாக்கிட்டாங்க. ஒரு யூதத் தலைவர் ஹவுஸ்

அரெஸ்ட்லையே இருக்காரு.

ஆசையுள்ள மனுஷன் இருக்கற இடமெல்லாம் சண்டை, இருக்கு. சச்சரவு இருக்கு. ஆனா அங்க எங்கேயும் இப்படி இருக்கேன்னு கவலைப்பட்டு ஒரு ப்ரேயர் கிடையாது. இதை மாற்றவும் முயற்சிகள் கிடையாது. யாருக்கு பலம் இருக்கோ அவங்க பிழைச்சுக்கலாம். அதுதான் நிலை.

ஆனா இண்டியால அப்படி இல்லை. உலக அமைதிக்கு யாகம் பண்றீங்க. இவ்வளவு பிரச்சினையிலையும் நீங்க காட்ற ஒத்துமை ரொம்பப் பெருசு. தனக்கு மேல ஒரு சக்தி இருக்குன்னு நீங்க நம்பற நம்பிக்கை அதை விட பெருசு.

உங்களுக்கு சில விஷயங்கள் தெரியாம இருக்கலாம். உங்க முன்னோர்கள் சிலர் இதை சொல்லாமலே செத்துப் போயிருக்கலாம்.

அதுக்கு காரணம் இருக்கு. உங்க மதிப்பை உணராம. அக்கம் பக்கம்தான் பெரிசுன்னு நினைச்சு எங்க கல்ச்சருக்கு அடிக்ட் ஆக ஆரம்பிச்சதோட எதிரொலி இது. நான் உங் களைவிட அதிகமா உலகத்தைப் பார்க்கறவ.

இது புதையல் இருக்கற தேசம். அதான் உங்களுக் குள்ளேயே அதை திருடறவங்களும் அதிகமாக இருக்கீங்க. ஆனா உங்களுக்கு திருடத் தெரியல. சாமர்த்தியம் இல்லே, எல்லாருமே அசட்டுத் திருடர்கள். இருந்தாலும் இந்த

திருடர்களுக்கு நடுவுல அந்த புதையல் பாதுகாப்பா இருக்கற தாதான் நான் நினைக்கறேன்.

ஒரு ஜிகினா காகிதம் தரைல கிடந்து மின்னினாலே தங்கமோன்னு எடுத்துப் பாக்கற மனோபாவம் உள்ள தேசத் துல, அற்புதமான அபூர்வ விஷயங்கள் எப்பவும் மறைக்க பட்டுதான் இருக்கும். நொள்ளை அணுகுண்டை வெச்சு கிட்டே மிரட்டிக்கற மிரட்டல்களுக்கு பஞ்சமில்லை.

இதுல இரும்பை தங்கமாக்கற ரசவாதமும், தோன்றி மறை யற மாயாஜாலமும், கூடுவிட்டு கூடுபாயறதும், துரும்பை இரும்பாக்கறதும், இரும்பைத் துரும்பாக்கறதும் ஒரு பள்ளிப் படிப்பு மாதிரி படிக்க முடிஞ்சதா இருந்தா என்ன ஆகும்? பூமி தாங்குமா?"

லிண்டா மூச்சு விடாதபடி பேசிய பேச்சில் அழுத்தமான மறுக்க முடியாத உதாரணங்கள். அவ்வளவையும் நடராஜ னும் அந்த பிச்சைக்கார சாமியும் கூட கேட்டபடியேதான் உட்கார்ந்திருந்தார்கள்.

கார்த்திகேயன் கொஞ்சம் ஸ்தம்பித்துப் போய்விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.கிரிதரன் மோவாயில் கையை வைத்திருந்தான். வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டது போல தோன்றியது.

திடீரென்று பிச்சைக்கார சாமி கையைத் தட்டியது.

எல்லோருமே திரும்பிப் பார்த்தார்கள்.

"ஃபன்ட்டாஸ்ட்டிக், சூப்பர்.... ஏ.ஒன்!" என்று அது ஆங்கிலத்தில் பாராட்டியது.

நடராஜன் வியந்து போனான். லிண்டா ஆங்கிலத்தில் பிளந்து கட்டியது இவருக்குப் புரிந்து விட்டது.

லிண்டா அவர் அருகில் வந்தாள்.

அவர் பாராட்டுக்கு நன்றி கூறும் விதமாய் "தேங்க் யூ ஓல்ட்மேன்" என்றாள்.

"நான்தான் உனக்கு நன்றி சொல்லணும்மா" என்றார் அவரும். அதுவும் நல்ல ஆங்கிலத்தில்.

"எதுக்கு?"

"எதை எப்படி புரிஞ்சுக்கணுமோ அப்படி புரிஞ்சு வெச்சு கிட்டிருக்கியே."

"சந்தோஷம்... இன்னும் பல விஷயங்கள் புரியணும் எனக்கு."

"என்னென்ன?"

"என்னை இங்க வரச்சொன்ன நாகராஜபோகர் இப்ப ஏன் இங்க இல்லை? ரியலா அவர் சமாதியாயிட்ட ஒருத்தரா. இல்லை ஃப்ராடா? நீங்களாவது சொல்லுங்க."

"நீ அதை எப்படி நினைக்கறே. இதோ இவன் மாசம் தவறாம மலைக்கு வர்றான். செத்தவங்க எப்படி திரும்பி வர முடியும்னு கேக்கறான்.வரமுடியாதுன்னு நினைக்கறது மனுஷ மனசோட வரம்பு. வரமுடியும்னு நம்பறது அந்த வரம்பைத் தாண்டி எட்டிப் பார்க்கற ஒரு முயற்சி. நீ என்ன சொல்றே?"

"நான் வர முடியும்னுதான் நினைக்கறேன். இல்லேன்னா எங்க ஜீசஸ் எப்படி உயிர்த்தெழுந்து திரும்பி வந்துருக்க முடியும்?''

"சபாஷ்! சரியான இடத்துக்கு வந்துட்டே."

"அவர் அப்படி செய்ததுக்கு பேர் என்ன தெரியுமா..?"

"என்ன...?"

"அதுதான் அஷ்டமா சித்தியில பிரதானமான அணிமா. அவர்தானே ஒரு அப்பத்தை நூறு அப்பமா மாத்தி எல்லா ருக்கும் கொடுத்தார்."

"யூ ஆர் ரைட்"

"அது என்ன... அதுக்கு பேர்தான் மஹிமா.''

"மஹிமா?"

"யெஸ்... ஒன்றைப் பலவாக்குவது. எல்லாம் இதோ இந்த வெட்டவெளியில இருக்கு. என்ன வேணும். எது வேணும்? இது தரும். திரட்டத் தெரியணும். அவ்வளவுதான்."

"எப்படி, எப்படி? எனக்கு சொல்லித்தர முடியுமா.?"

"ஒரு பொண்ணான உன்னால அதை எல்லாம் புரிஞ்சு கத்துக்க முடியுமாம்மா."

"நிச்சயமா... அதுதான் என் நோக்கம். அதுக்குதான் நான் வந்துருக்கேன்."

"இப்படித்தான் இதோ இவனும் ஆசைப்பட்டான். கேள்வி கேட்டான். ஆனால் சுயநலம் உள்ளவர்களால, அது முடியாது."

"நான் முடிக்க நினைக்கறேன். அதுக்கு என்ன செய்ய ணும்.?"

"சுய நலத்தை ஜெயிக்கணும்."

"அதுக்கு நான் என்ன பண்ணணும்.?"

"இதோ இவனுக்கு சொன்னதையே உனக்கும் சொல் றேன். அதோ அந்த ஹோம குண்டம் இருக்கே, அதுல தைரியமா போய் விழ முடியுமா உன்னால..."

அவர் சொல்லி முடிக்க அவள் பார்வை அணைந்து புகைந்து கொண்டிருந்த, ஹோம குண்டத்தை பார்த்தது. பின்னாலேயே வந்து நின்று கொண்டிருந்த கிரிதர்,

"லிண்டா கமான்.. இந்த மாதிரி பக்கிரிங்ககிட்டல்லாம்

என்ன பேச்சு, கமான்" என்று அழைத்தான்.

"ஸ்டாப் இட்... இவர் பக்கிரி இல்ல. இவர்கிட்ட நிறைய விஷயம் இருக்கு. நீ சும்மா இரு.." என்றாள்.

"அதான் அதுல விழுவியா.. இதுல விழுவியான்னு கேக்கறான். எல்லாம் மிரட்டல். இங்க சில லாஜிக் உண்டு. ஒருத்தன் மலையைத் தூக்கப் போறேன் எல்லாரும் வாங்கன் னான். எல்லாரும் போனாங்க. எப்படித் தூக்கப் போறான்னும் பார்க்க ஆரம்பிச்சாங்க.ங அவன் உடனே நான் நிச்சயமா தூக்குவேன். சந்தேகம் வேண்டாம். ஆனா ஒரு சின்ன உதவி மட்டும் நீங்க பண்ணணும்னான். என்ன சொல்லுன் னாங்க. தலைல மட்டும் தூக்கி வெச்சுருங்க அது போதும் னான். அப்படித்தான் இந்த பெரியவங்க பேசற பேச்சுகளும். வா போகலாம்... மொத்தத்துல உலகமே மோசம்கற கருத்தை நான் ஒத்துக்கறேன்.

நீ பாட்டும் இந்த ஆள் பேசறதவெச்சு, அணிமா, மஹி மான்னு அளக்கறத வெச்சு பெருசா ஏதோ இருக்கோன்னு நினைச்சுடாதே... கமான்... நாம கிளம்புவோம்." உரிமையாக அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

அவர் பார்த்தபடியே இருந்தார்.

"ஓட்ல்மேன். நான் அந்த ஹோம குண்டத்துல விழுந்தா, எனக்கு சுயநலம் இல்லேன்னு நீங்க எதை வெச்சு சொல்

நீங்க?" லிண்டா அவனோடு செல்லாமல் அவரிடம் மீண்டும் ஊன்றினாள்.

"சுயநலம் இருந்தா செத்துப் போயிடுவேனே, வாழ முடியாம போயிடுமேன்னு நினைப்பே. இல்லேன்னா துணிச்சலா குதிப்பே இல்லியா?" அவரும் விடாமல் பதிலளித்தார்.

"அப்ப சாகறவங்ககிட்ட சுயநலம் இல்லாம போயிடுதா?"

"அப்படி இல்லை... பெரிய விஷயங்கள் புரிஞ்சுக்கணும்னா, பெரிய செயல்கள் செய்ய மனசு துணியணும்"

"சாகறது ஒரு பெரிய செயலா?"

"உயிரை இழக்கறது ஒரு பெரிய இழப்பு இல்லையா."

"நான் எங்க உயிரை இழக்கறேன். உடம்பைத்தானே இழக்கறேன். அது எப்படி பெரிய இழப்பு ஆகும்?"

அடுத்த நொடி அந்தப் பெரியவர் அவளை அசாதாரணமாக ஒரு பார்வை பார்த்தார்.

"கமான்.. டெல் மீ... உடம்பை இழக்கறது எப்படி பெரிய இழப்பாகும். நொண்டி முடம்னு இயலாம இருக்கற அவ்வளவு பேரும், நல்ல உடம்பை இழந்தவங்கதானே. அவங்கள்லாம் அப்ப சுயநலம் இல்லாதவங்களா?"

லிண்டாவின் மடக்கல் கேள்வி முன், அவர் எழுந்து

நின்றார். நடராஜன் பக்கம் திரும்பினார்.

"என்ன சாமி.. என்ன பாக்கறீங்க?"

"இல்ல... இப்படி ஒரு கேள்வியை உன் புத்தியால கேட்க முடிஞ்சுதா?''

உடனே அவன் குறுகினான்.

"உடம்பு போயிட்டா உயிர் போயிடும். உயிர் போயிட்டா எதைப் புரிஞ்சுக்க முடியும்னுதானே நீ சிந்திச்சே?''

அவன் அமைதியாக அவரைப் பார்த்தான்.

"நம்ம கலாசாரத்தை புத்தகங்கள்ள படிச்சு தெரிஞ்சுகிட்ட இந்த பெண்கிட்ட இருக்கற ஒரு நம்பிக்கை, ஒரு தேடல் உன்கிட்ட இல்லையே." அவர் அவனுக்கான பதிலைச் சொல்லி விட்டு, "கொஞ்சம் என்கூட வாம்மா." என்று அவளை அழைத்தார்.

"எங்க."

"சமாதியாயிட்டவரை பார்க்க வேண்டாமா?"

''நிச்சயமா..''

"நீ இப்படி கேள்வியெல்லாம் கேட்பே. கூட்டிகிட்டு வான்னு சொல்லி அவர்தான் என்னை அனுப்பியிருக்கார். அவரை பார்க்க வேண்டாமா?"

லிண்டா எதுவும் பேசவில்லை. அவரைப்பின் தொடரத் தொடங்கினாள்.

கார்த்திகேயனும், கிரிதரனும் ஏன் நடராஜனுமே கூட பிரமை பிடித்த மாதிரி அவர்கள் இருவரையும் பார்த்தனர்.

இருவரும் அவர்கள் எதிரில் காட்டின் இருளுக்குள் மறைந்தனர்.

அவர்கள் மறைந்ததைத் தொடர்ந்து கார்த்திகேயன் கத்தத் தொடங்கினார்.

"கிரி... என்னப்பா இது? அந்தப் பொண்ணை அந்த கிழ வனோட போக விட்டுட்டியே. அவளும் போய்ட்டாளே?"

கிரிதரனுக்கே பிறகுதான் தப்பு செய்து விட்டோம் என்கிற மாதிரி தோன்றியது.

"போ கிரி... இது ஒரு டைப்பான காடு. வேலை வெட்டி யில்லாதவன் எல்லாம் சாமியார் வேஷம் போட்டுகிட்டு வந்து ஆஸ்ரமம் அமைச்சுக்கற காலம் இது. லிண்டா ஃபாரின் பொண்ணு. எதையாவது பண்ணி அவகிட்ட டாலரைக் கறக்கப் பார்ப்பாங்க. போ.. போய் அவளைக் கூட்டிக்கிட்டு வா."

தொடர்ந்து அலறினார் கார்த்திகேயன்.கிரிதரனும் எழுந்து "லிண்டா.." என்று அங்கிருந்தே கத்திக் கொண்டு ஓடினான்.

# 8

*உலகில் காலத்தை வென்ற விஷயங்கள் இரண்டு தான் என்பார்கள். ஒன்று ஒளி, அடுத்தது மனம், மனமானது ஒளியை விட வேகமானது. நினைத்த மாத்திரத்தில் நாம் இந்திரலோகத்தில் இருப்பதாகக் கூட கற்பனை செய்து கொள்ள முடியும். இதோடு போட்டி போடக் கூடியது ஒளிதான். இந்த ஒளியைத்தான் சூரியனாகக் காண்கி றோம். சூரியனிலிருந்து உதிர்ந்து விழுந்த ஒரு பிண்டம் தான் பூமி,*

*இந்த பூமி பஞ்ச பூதங்களால் ஆனது. பூமியைப் பற்றி நினைக்கும் போதே வியப்பாக இருக்கும். ஆட்டின் உடலில் இருந்து வெட்டி எடுத்த மாமிசமானது உயி ரோட்டம் இன்றி கசாப்புக் கடையில் தொங்கவிடப் பட்டிருக்கும். அதை அப்படியே விட்டால் காற்றோடு கூடி வினைக்குள்ளாகி அதில் கண்ணுக்குத் தெரியும் விதமாய் புழுக்களும், கண்ணுக்குக் காண முடியாத வகையில் நுண்ணுயிர்களும் (பாக்டீரியா) தோன்றி அதில் இருந்து ஏராளமான உயிர்ச் செல்கள் உருவாகும். இந்த உயிர்ச் செல்கள் ஆடு உயிரோடு இயக்கத்தில் இருந்த சமயத்தில் ஆட்டின் உடல் பாகம் என்ற பெயரில் வேறு விதமாக இருந்திருக்கும்.*

அந்த ஆட்டின் உடல் உயிரோடு இருக்கும்போது ஒரு விதமாகவும், உயிரோட்டம், அறுபட்டு மாமிசமான பிறகு வேறு விதமாகவும் உயிர்ச் செல்களை உருவாக்கும் விந்தையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பூமியும் இப்படித்தான். பூமி சூரியன் என்னும் ஆட்டிலிருந்து பெயர்ந்து விழுந்த ஒரு மாமிசத் துண்டு. இதில் புழு பூச்சிகளாக உருவானதுதான் மனித இனம். சுருக்கமாய் சொல்வதானால் நாம் எல்லோருமே ஒளியின் உமிழ்வுகள். வெப்பத்தின் பிரதிநிதிகள், அதனாலேயே. நமது உடலில் சராசரி வெப்பமே இயக்க சக்தியாக இருப்பதையும் யூகிக்கலாம்.

பஞ்ச பூதத்தில் ஒன்றான நெருப்பின் குணமே ஒளி, இதன் அடங்கிவிட்ட தோற்றமே இருள். இந்த ஒளியும் இருளும்தான் பலவித வாயுக்களை உருவாக்கி, அதன் திட சொரூபமாய் நீரை உருவாக்கி, ஒளிப் பிண்டமாகிய பூமியைச் சுற்றி ஆக்ரமிக்கும் போது விசையை (புவி ஈர்ப்பு) உருவாக்கி, விசையின் குழந்தையாக காற்றை விளையாட விட்டு செயலாற்றுகிறது.

அதாவது நெருப்பே முதலில் பூமியைத் தந்தது. பின் அதைக் காற்றைக் கொண்டு மூடியது. அதன் பின் காற்றோடு கூடி செயலாற்றி மழை மேகமாகி நீரையும் வர்ஷித்தது.

மொத்தத்தில் நெருப்பு. நிலமாகி பின் காற்றாகி, பின் நீரான விந்தைகள் நடந்தன. இந்த நான்கும் ஆகாயம்

என்னும் வெட்ட வெளியில் நிகழ்ந்தது.

இதனாலேயே நீர், நிலம், நெருப்பு. காற்று. ஆகாயம்" என்கிற பஞ்ச பூதங்களை நாம் உணர முடிகிறது. இதில் நெருப்பும், ஆகாயமும் பிரதானம். இடைப்பட்ட காற்று, நிலம், நீர் எல்லாம் இரண்டின் இடையே உருவானவை. இரண்டும் கூடிப் பெற்றவை என்றும் கூட சொல்லலாம்.

இன்னும் ஒரு படி மேலே போய் யோசித்தால் நெருப்பாகிய சூரியன் வலம் வருவது ஆகாயத்தில் தான், எல்லைகளற்ற அதில் குறிப்பிட்ட ஒரு பரிமாணம் கொண்ட சூரியனில் இருந்துதான் பூமி உள்ளிட்ட எல்லா கோள்களுமே தோன்றி உதிர்ந்தன.

அப்படி உதிர்ந்தவைகள் ஆகாய யாத்திரையை ஒவ்வொரு நொடியும் செய்தபடியே இருக்கின்றன. இதில் ஆச்சரியமூட்டும் விதமான பூமி, தன்னைத் தானேயும் சுற்றிக் கொள்கிறது. இப்படிச் சுழலுவதாலேயே ஈர்ப்பு விசை முதல் காற்று வீச்சு வரை எல்லாமே சாத்யமாகிறது.

இந்த சுழற்சியும், பயணமுமே காலம் என்கிற ஒன்றினை உண்டாக்குகின்றன. காலம் என்று ஒன்று உண்டாகியே தீரவேண்டுமே? அந்த வேகத்தை அளக்கவே மனிதன் கெடிகாரத்தைக் கண்டறிந்தான். உலகின் மிகக்குறைந்தபட்ச வேகம் வினாடி முள்ளின் ஒரு நொடிக்கும் அடுத்த நொடிக்குமான பயணத்தின் இடையில்தான் உள்ளது.

குறைந்த வேகம் என்று ஒன்று இருந்தால் கூடுதல்

வேகம் என்றும் ஒன்று இருக்க வேண்டுமே?

இந்த கூடுதல் வேகத்துக்குள்தான் தன்னை சிறைப் படுத்திக் கொண்டு இருக்கிறது அஷ்டமா சித்து.

சித்து புரிய, மேற்சொன்ன அத்தனை புரிதலும் அவசியம்.

நான் யார் என்பது முதலில் தெரிய வேண்டும், (சூரியப் பிண்டம்) நம்மை இயக்கத் துணையானது எது என்பது தெரியவேண்டும். (நீர், நிலம், காற்று) இதைக் கடந்து உள்ள ஆகாயம் பற்றிய சிந்தனையும் அதுவே கால நேர வர்த்தமானங்களை உருவாக்குவதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அனைத்துக்கும் மேலாய் நம் மனம் பற்றியும் அதன் எண்ணங்கள் பற்றியும் தேறித்தெளிந்து எண்ணத்தை இந்த பஞ்ச பூதத்தில் எதுவும் கட்டுப்படுத்த இயலாத அதிசயத்தை உணர வேண்டும். இந்த எண்ணம் கால நேரத்தை வெற்றி கொண்டதை அறிந்தால் இதுவும் ஆகாயமும் ஒன்று என்கிற ஞானம் தோன்றும், எல்லை யற்ற ஆகாயத்தில் உதிர்ந்த ஒளித்துண்டு பூமியாகி மனித, மிருக உயிர்களை உருவாக்கி வாழ்க்கை முறையை உருவாக்க நீர், காற்று என்கிற கூட்டுறவை காலத்தோடும் கலந்து வைத்ததை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகாயத்தில் நிகழும் அவ்வளவும் எண்ணமாகிய மனதிலும் நிகழ்வதை இப்பொழுது புரிந்து கொள்ளலாம்.

*ஒளியும் ஆகாயமும் ஒன்று கூடி செய்வதை மனதும் செய்யும் என்பது தெரிகிறதா? மனதை ஆகாயத்தோடு சேர்த்து கால நேரத்தை வெற்றி கொண்டால் நொடிக் குள்ளான காலத்தில் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம்.*

*அந்த சாதிப்பில் மறைவது, தெரிவது. சிறிதாக்குவது. பெரிதாக்குவது என்று ஒவ்வொன்றும் ஒரு விதம் அதற்கு நாம் வைத்த பெயர்களே அணிமா, மஹிமா, இலஹிமா என்று அமைகிறது."*

கிரி இருண்ட காட்டுக்குள் அவர்களைத் தேடி அலை பாய்ந்தான். இருட்டு கண்ணைக் கட்டியது. யாரையும் காண வில்லை.

எங்கே போனார்கள்? என்ன ஆனார்கள்?

அவனை பயம் பிடித்தாட்ட ஆரம்பித்தது.

அதே சமயம்,

அந்தப் பரந்த காட்டில் ஒரு பாறை மேல் பௌர்ணமி வெளிச்சம் தவழ்ந்து புரளும் இடத்தில் அந்த பிச்சைக்கார சாமி போய் அமர்ந்தது. லிண்டாவையும் எதிரில் அமரச் சொன்னது.

"எதுக்கு உட்காரச் சொல்றீங்க?"

"உட்காரும்மா..."

"நாகராஜபோகரை காட்றேன்னுட்டு இப்படி உட்காரச் சொன்னா எப்படி?"

"உட்காரு... காட்றேன்."

அவளும் அரை மனதாக அமர்ந்தாள். அவர் உடனே கைகால்களை நெட்டி முறித்து முகத்தை கைகளால் மூடி புசுபுசுவென்று துடைத்துக் கொள்ளத் தொடங்கினார்.

அந்தச் செயலைப் பார்த்தபடியே லிண்டா சுற்றுமுற்றும் ஒரு நொடி பார்வையிட்டாள்.

ஒரு நொடிதான்.. திரும்ப அந்த பிச்சைக்கார சன்யா சியைப் பார்த்தவளுக்கு பகீர் என்றது.

எதிரில் நாகராஜ போகர்.

"நீங்க... நீங்க..." அவளிடம் இருந்து பேச்சே வரமுடியாத நிலை.

"நான்தான்... என்னடா இது மாயம்னு பாக்கறியா?"

''யெஸ்... வாட் எ மிராகிள்."

"உனக்கு இது மிராகிள். ஆனா இது ரொம்ப சாதாரண சித்து.''

"மிராகிளுக்கு இங்க அதுதான் பேரா?''

"உம்... அப்படியும் சொல்லலாம்."

"ஹவ்.. ஹவ் இட் ஈஸ் பாசிபிள்... இது எப்படி சாத்யம்?"

"ஒரு கட்டுரையா எழுதி புகழ் பெறுவதற்காக இதை நீ கேட்கறியா. இல்லை நிஜமான துடிப்பா?"

"நிஜமான துடிப்புதான்."

"சொல்றேன். சொல்லியும் தரேன். ஆனா ஒரு விஷயம்."

"என்ன... கட்டுரையா இதை எழுதக் கூடாதா?"

"எழுதேன்... தாராளமா எழுதேன். எழுத்து ஒரு ஆரம்பமா மட்டும்தான் அமைய முடியும். அதனால சமையல் செய்ய சொல்லிக் கொடுக்கற மாதிரி இதை எல்லாம் அடுத்தவங்களுக்கு சொல்லித்தர முடியாது. படிச்சாலும் புரியாது. எல்லாம் பொய், புளுகு நடைமுறை சாத்யம் கிடையாது. கற்பனைன்னு சொல்லித் தள்ளி டுவாங்க."

"அதைத்தான் உடைக்க நான் விரும்பறேன். எங்க ஸ்டேட்ஸ்ல ஆவிகளை படம் எடுத்து போட்டுருக்கோம். டானிகன்னு ஒருத்தர் பறக்கும் தட்டு மூலமா வேற்று கிரகத்து மனிதர்கள் வந்து போனதை எல்லாம் எழுதியிருக்கார் ஆதாரங்களோட."

லிண்டா உணர்ச்சி வசப்பட்டாள்.

"அப்ப எழுதணும். அதைப் படிச்சு எல்லோரும் வாயைப்

பிளக்கணும். இதுதான் உன் தேவையா?''

லிண்டா இந்த கேள்வி முன் மட்டும் சற்று தேங்கினாள்.

"சொல்லும்மா..."

''முதல்ல புரிஞ்சுக்கணும், எழுதணும்கறதுக்காகத்தான் வந்தேன். இப்ப தனிப்பட்ட முறையில தெரிஞ்சுக்கிட்டு இந்த பூமியை ஜெயிக்கவும் ஆசைப்படறேன்.''

அவர் சிரித்தார்.

''சரி.. என் கூட வா!''

''எங்க?''

"வாயேன்..." கையைநீட்டினார்.

பற்றிக்கொண்டாள். தயக்கமாகத்தான்.

நடந்தார்... தொடர்ந்தாள்.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். இருவரும் அமெரிக் காவில் லிண்டாவின் வீட்டு முன் உள்ள நீண்ட மர வரிசை கொண்ட சாலையில் நடந்து கொண்டிருந்தனர். பட்டப்பகல்!

"அதுக்குள்ள விடிஞ்சுடுச்சே." என்று ஆச்சரியப்பட்டவள் தன் வீட்டைப் பார்த்து விதிர்த்துப் போனாள்.

"உன் வீடுதான், உன் ஊர் தான். ரொம்ப வேகமா பயணம் செய்து இங்க வந்துருக்கோம். அவ்வளவுதான்!''

அவர் மீண்டும் சிரித்தார்.

"என்னால நம்ப முடியலை. நோ, நோ.. இது பொய்."

கத்தினாள். வியர்த்தாள், தடுமாறினாள்.

அவர் அமைதியாக இருந்தார்.

வீட்டுக்கு ஓடினாள். வயதான அவள் தாய் இருந்தாள்.

"ஹாய் லிண்டா... எப்ப வந்தே?" என்று கேட்டுக் கொண்டே எதிரில் வந்தாள்.

"மாம்!" அவளிடம் கூவல். மீண்டும் பதட்டம், பரபரப்பு.

வெளியே வந்தாள். அவர் இல்லை!

"மை காட்... எங்க அவர்?" தேடினாள். வெகுநேரம் தேடி னாள். பின் திரும்பி வந்து ஆசுவாசித்தாள். அம்மாவிடம் நடந்ததைச் சொன்னாள். அம்மா உடனே "பைத்தியம் எதுக் காக இப்படி உணர்றே?" என்று கேட்டாள்.

"உளறலை. இது உண்மை. நம்பு. ஜஸ்ட் ஒரு அரை மணி முன்பு நான் வெள்ளியங்கிரி மலைல கிரி கூட இருந் தேன். அவன்கூட இப்ப அங்கதான் இருக்கான், ஜஸ்ட் எ மினிட்" அவனை போன் செய்து பிடித்தாள்.

"கிரி... நௌ ஐ ஆம் இன் மை ஹவுஸ்" என்று ஆரம் பித்தாள். விவரித்தாள். கிரி வாயைப் பிளப்பதும் பதட்டப்

படுவதும் அவளால் உணர முடிந்தது.

போனை வைத்தவள் குட்டி போட்ட பூனை போல நடந் தாள். இப்படி தன்னை விட்டு விட்டுப் போய் விட்டாரே?

ஆம்ஸ்ட்ராங் நிலவில் காலை வைத்ததை விட ஒரு அதிசயத்துக்கு என்னை ஆளாக்கிவிட்டு இப்படி போய் விட் டாரே. இதை வெளியில் சொன்னால் எவ்வளவு பேர் நம்புவார்கள்?''

நம்பும் படியும் சொல்ல முடியும். ரிடர்ன் ஏர் டிக்கட் இப் போது கிரியிடம், விசா பாஸ்போர்ட் எல்லாமே கிரியிடம்,

ஆனால் நானோ இங்கே... இதுபோதும்.. இதை வைத்தே பத்திரிகை, டி.வி. எல்லாவற்றிலும் வெளுத்து வாங்கலாம்.

அவளுக்குள் எண்ணங்களின் கொப்பளிப்பு. அப்படியே எழுந்து வெளியில் வந்தாள். நாகராஜபோகர் மீண்டும் நின்று கொண்டிருந்தார். சிரித்தார்.

"மை காட்... எங்க போய்ட்டீங்க?" என்று கேட்டபடியே போய் அவர் முன் நின்றாள். அவர் மீண்டும் கையை நீட்டி னார்.

''ஓ... திரும்ப இண்டியா போகப் போறோமா?''

"ஆமாம்... வா போகலாம்... உன் சகாக்கள் ரொம்ப தவிச்சுக்கிட்டிருப்பாங்க."

அவள் இந்த முறை அவர் கையைப் பற்றிக் கொள்ள யோசித்தாள். ஒரு உலக அதிசயத்தை பதிவு செய்யக் கிடைத்த வாய்ப்பு நழுவிப் போய் விடுமோ என்கிற பயம் அவள் கண்களில் மின்னியது.

அவரோ இழுத்துப் பிடித்தார். விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தார்!

***கா***ருக்குள் கிரிதர், கார்த்திகேயன், கூடவே லிண்டா.

அவளிடம் பேச்சில்லை மூச்சில்லை.

"நீ எதுவும் பேசக்கூடாது... அமெரிக்காவுல இருக்கேன்னு பொய்தானே சொன்னே? அந்த பிச்சைக்காரன் மெண்டலா உன்னை குழப்பிட்டான், பைத்தியமாகவே நீ ஆயிடுவேன்னு தான் நான் நினைக்கிறேன்."

காருக்குள் கிரி பேசிக் கொண்டே வந்தான். வழியில் நடராஜன் மட்டும் கண்ணில் பட்டான்.

காரை நிறுத்தச் சொல்லி அவனைப் பார்த்தாள்.

"நீ ஏன் நடக்கறே. எங்க அவர், அவர் கூட போனா உன் ஊருக்கு சீக்கிரமா போயிடலாமே" என்றாள்.

அவன் விரக்தியாக சிரித்தான்.

"உண்மைதான் மேடம். ஆனா அவர் என்கிட்ட சில

விஷயங்களைச் சொல்லி அதை புரிஞ்சுக்கச் சொல்லி யிருக்கார். அதுக்கப்புறமா என்னை பிருந்தாவனத்துல வந்து பார். நான் வேற, போகர் வேற இல்லேன்னார்" என்றான்.

"ஆமாம், அதுதான் உண்மை... உன்கிட்ட என்ன சொன்னார். நீ என்ன செய்யணும்?"

"வேண்டாம். நீங்க எல்லாத்தையும் எழுதுவீங்க. செயல்ங் கறது எழுத்துல கூடாது. எதையும் நிரூபிக்க துடிக்காதீங்க, உங்க அனுபவம் போகப் போக உங்களை மாத்தும். யார் என்ன சொன்னாலும் கவலைப்படாதீங்க. ஒருநாள் போகர் சாமி திரும்ப உங்களை சந்திப்பார். நானும் சந்திப்பேன். ஆனா நாம இந்த உலகத்து மனுஷங்களை பெரிசா நினைக் கறத விட்டுடணும். அப்பதான் நமக்கு எல்லாமே தெளிவாக வசப்படும்.

அவன் பேசப் பேச காரை எடுக்கச் சொல்லி வேகமானார் கார்த்திகேயன்.

"போதுண்டா சாமி... ஏன் வந்தோம்னு இருக்கு?" என்று தலையையும் உசுப்பிக் கொண்டார்.

ஆனால் லிண்டா அமைதியாக யோசிக்கத் தொடங் கினாள்.

எல்லாம் கனவு போல, நிஜம் போல, மறுபடியும் நிஜம்

போல, மறுபடியும் கனவு போல என்று மாறி மாறி மனதை அலைக்கழித்தது. ஒரு வரி, ஒரே ஒரு வரி, இண்டியன் மித்தைப்பற்றி எழுது வது கூட சிரமம் என்று தோன்றியது.

டைரியைத் திறந்தாள்.

"இண்டியன் மித், கடவுளைப் போன்றது."

ஒரே வரிதான்!

படித்துவிட்டு பைத்தியக்காரத்தனமானது என்று திருத்தம் செய்தான் கிரி. அப்புறம்தான் அவளுக்குத் தெரிந்தது. அதைக்கூட எழுதியிருக்கக் கூடாது என்று.

நாகராஜ போகர் சொன்னது காதில் ஒலித்தது.

'நீ எழுதினா புரியாது. சிரிப்பாங்க, கேலி செய்வாங்க'

எப்பேர்ப்பட்ட உண்மை. பரவசமாக இருந்தது. திரும்பிப் பார்த்தாள். மலை நழுவிக் கொண்டிருந்தது. ஆனால் மனதுக்குள் வார்த்தைப் படுத்த முடியாத அந்த வேதனை மட்டும் நழுவும் மலையை விட பெரிதாக வளர்ந்து மறித்தது.

ஒன்றுமே இல்லாத சிறிய விஷயம் பெரியதாக தெரிவது தான் மஹிமா!

லிண்டாவுக்குள்ளும் மஹிமா?

*முற்றும்*

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in